Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර | பக்கம் 24 ரூபா 30.00
ஜனவரி 02 - 08, 2014

# வாரமலர் தினமுரசு



## விடை பெறுகிறார்


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1047

# இலங்கையை உலுப்பும் ஜெனீவா காய்ச்சல்



## விஷம் வைக்கப்பட்டதா விடுதலைப் போராளி அரபாத்துக்கு?!

## தீராப் பிரச்சினையாய் யானைகளின் அட்டகாசம்



## புத்தாண்டுப் பலன்கள் 2014

## ஓம் கைதட்டிக் கும்பிட வைக்கும் கடவுள்

அமைதியை கடைப்பிடிக்க வேண்டிய இடம் ஆலய மாகும் ஆனால் பலரும் அங்கு சென்றதும் குடும்பக் கதைகளைப் பேசத் தொடங்கிவிடுகின்றனர். எனவேதான் பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிப்பணிதலின்றி பிறவார்த்தை யாதொன்றும் பேசற்க ஆலயத்துள் என்று வாசகம் எழுதி வைத்திருப்பர்.

இங்ஙனம் வழிபாடுசெய்யும் சிவாலயத்தில் கைதட்டி வழிபடும் தெய்வம்தான் சண்டிகேஸ்வரர். கோவிலில் சாமி தரிசனம் முடிந்து கடைசியாக வீடு திரும்பும்போது, "சண்டிகேஸ்வரர் சன்னதிக்குச் சென்று நான் வந்து நேரமாச்சு நந்திக்கு தீபமாச்சு பிரகாரம் மூன்று ஆச்சு போய்வருகிறேன் சண்டிகேஸ்வரரே" என்று சொல்வது வழக்கம். அதன் பிறகு கைதட்டுவர்.

காரணம் சிவன் கோவில் சம்பந்தப்பட்ட பொருட்கள் எதையும் நான் எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்று உறுதிகூறுவதாகவும், மிகமிக மெதுவாக கைதட்டி விட்டு பிறகு அவரை கும்பிட்டு வரவேண்டும்.

சிவ தியானத்திலேயே எந்தநேரமும் சண்டிகேஸ்வரர் இருப்பதால் இந்த கை தட்டலாகும். நாம் கோவிலுக்கு வந்ததை பதிவுசெய்து வைத்துக்கொள்பவரும் அவரே.

ஆன்மீகம்

## இறை நம்பிக்கையில் புதுவாழ்வு

இன்று மனிதன் தன்னைப்பற்றிய சிந்தனையிலே மூழ்கி மூச்சற்ற நிலையில் இருக்கிறான். தன்னுடைய சுகம், தன் இன்பம் இவைபற்றியே எண்ணமாக உள்ளான். உண்பதும் உடுப்பதும், குடிப்பதும் கும்மாளமடிப்பதும், பெண்கொள்வதும் கொடுப்பதும் வாழ்க்கை என வாழ்பவன் வெள்ளப்பெருக்குக்கு முந்திய காலத்திய பாவ வாழ்க்கை வாழ்கிறான்.

அத்தகையோர் வெள்ளப்பெருக்கால் அழிந்தது போல அழிவார்கள். அந்த அழிவின் நாள் யாருக்கும் தெரியாது. பாவ வாழ்க்கை வாழும் மனிதனின் அழிவும் அவனுக்குத் தெரியாது.

வயலில் இருக்கும் இருவரில் ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவதும் மற்றவர் விடப்படுவதும் அவர்களுக்கே தெரியாது. திரிகையில் மா அரைத்துக்கொண்டிருக்கும் இருவருள் ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவதும் மற்றவர் விட்டுவிடப்படுவதும் யாரும் அறியார். பாவிகளின் அழிவு அவர்களை அறியாமல் அவர்களை வந்தடையும்.

சுகபோகம் அனுபவிப்பதே வாழ்க்கை என்று வாழ்ந்தால், மகிமையும் மாட்சியும் நிறைந்த "ஆண்டவரின் நாள்" வேதனையும் விரக்தியும் நிறைந்த தண்டனையின் நாளாகிவிடும். ஆண்டவரின் மாட்சியை மகிமையைக் காணும் ஆசீர்பெற்ற மக்களாக இருக்க நோவா குடும்பம்போல் நம் குடும்பமும் குடும்ப வாழ்வும் இருக்கவேண்டும். ஆண்டவருக்குள் வாழும் குடும்பம் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும்.

## உயர்வான சுவர்க்கத்தை அடைவோம்

வெற்றியாளர்களின் பண்பு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிவதாகும். அன்று கட்டளையிடும் அதிகாரம் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு இருந்தது. அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட விரும்பியவர்கள் அவனது தூதருக்குக் கட்டுப்பட்டார்கள்.

இதைத்தான் இறைதூதர் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். எனக்குக் கட்டுப்பட்டவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டார். எனக்கு மாறுசெய்தவர் அல்லாஹ்வுக்கு மாறுசெய்தார்.

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட வேண்டியவிதம் குறித்து அண்ணல் நபி அவர்கள் இவ்வாறு கூறக்காரணம் அல்லாஹ் நேரடியாக மனிதர்களுக்கு கட்டளையிட வரவில்லை. அல்குர்ஆன் மூலம் அல்லாஹ்வின் போதனைகள் அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவற்றை உலக மக்களுக்கு உத்தம நபி அவர்கள் சொன்னார்கள். அதனை தனது நாளாந்த வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

நீ செவிமடுப்பதும், கட்டுப்படுவதும் பின்வரும் எல்லா நிலையிலும் உன்மீது கடமையாகும். உனது வறுமையிலும் செல்வ நிலையிலும், உனது உற்சாகநிலையிலும், உற்சாகமிழந்த நிலையிலும், உனக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற நிலையிலும் எனக் கூறியுள்ளார்கள். ஆகவே, நாம் அண்ணல் நபி கூறிய அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து உள்ளத்தைப் பேணி உயர்வான சுவர்க்கத்தை அடைவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

கவிதைப்போட்டி 1044



### பிணைப்பு

ஆறறிவு இருந்தும் மனிதன்
அறியாத பாசம்
ஐந்தறிவில் நாம்
புரிந்துகொண்டோம்
ஆண்டவன் படைப்புகள்
ஆயிரம் இருந்தாலும்
அன்பிற்கு ஈடாகுமா...?
அங்காங்கே தாவினாலும்
நாம் வாழ்வது அன்பு என்ற
பிணைப்பில்...

வினோத் தர்ஷி, சூராவத்தை.

பா ரா ட் டு க் கு ரி ய து

### வழித்தோன்றல்?

பெற்றதும் குழந்தையின்
குரல்வளை நசிப்பதும் – அதனை
குப்பைத் தொட்டியில் எறிவதும்
எம் பரம்பரையில் இல்லை
இக்கொடூரங்களைப் புரியும்
மனிதா... நீ நிச்சயம்
எங்கள் வழித்தோன்றலாக
இருக்க முடியாது.

அ.சந்தியாகோ, கண்டி.



வாரமலர் தினமுரசு 1046
விட்டுக்கொடுப்புக்கு விலை அதிகம்
தேவயானி விவகாரத்தில் அமெரிக்கா- இந்தியா இராஜதந்திர மோதல்!
கண்டிக்கப்பட வேண்டிய அடாவடிகள்...
கிராம சேவகரின் அவசியம்!

## கவிதைப் போட்டி இல 1047



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16. 01. 2014

கவிதைப் போட்டி இல. 1047
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பொன் (பூ) நகை

உங்களிடம் உண்டான– நல்லதை
நாம் கற்றுக் கொண்டோம்.
ஆனால் – சிரிப்பை கற்றும்
செய்யமுடியவில்லை
இத்தால் – பொன் நகைக்குப்
பதில் – போட்டோவுக்கு போஸ்
கொடுக்க பூ நகை செய்கிறோம்.

மஞ்சு கணேஸ், யாழ்ப்பாணம்.

### அடிப்பதும் அணைப்பதும்

அடிப்பதும் அணைப்பதும்
அன்பு காட்டுவதும் அன்று
மக்களாகிய உங்கள் வசமிருந்தது.
இன்று அவை அனைத்தும் உங்களிடம்
இருந்து அருகி வருகிறது.
இப்போ சொல்லுங்கள்
நாங்கள் மாக்களா?
நீங்கள் மாக்களா?

பீ.எஸ்.ஏ.தாஹிர், காத்தான்குடி -03.

### பயில வேண்டும்

காதிலே பூ வைப்பார் – என்றும்
நீ வாயிலே பூ வைத்தாய் – இன்று.
குரங்கிடம் பூக் கொடுத்தால்
அவ்வளவுதான் என்பார்?
ஆனால் அவர்கள் குடும்பத்தை
குலைத்துவிட்டுத் திரிவார்
உன்னைப் பயிற்ற கற்றவன்
உன்னிடம் பயிலவேண்டும்
பூவின் வாசத்திற்கும்
குடும்ப நேசத்திற்கும்.

இ.பவிராஜ். யாழ்ப்பாணம்

### பிள்ளைப் பாசம்!

குரங் கானாலுங்
குட்டியதுவும் - ஒரு
குழந்தைதானே!
ஆறி லொன்று
அற்றமையாக்கும் புட்டிப் பாலுந்
தொட்டிலாட்டும்
இல்லைப் போலும்!
அப்பாவும் அம்மாவும் - ஒரு
பூவைப் போலே
பார்க்கினமாக்கும்!
அன்பு மனமும் அரவணைப்பும்
ஆறுகளுக்கு மட்டுமா - இந்த
ஐந்துகளுக்கு முண்டுதான்!

பாண்டியூர் பொன் நவநீதன்.

### பூ மாலைப் புதினம்

கவனத்தை ஈர்க்கும் காட்சி இது
குரங்கின் கையில்
பூ மாலையைக் கொடுத்தால்
இப்படித்தான் இருக்கும்
அன்று கூறியது இன்று புரிகிறது
பூமாலைப் புதினம்.

எம்.சி.கலீல், கல்முனை -05.

### பாசம்

குழந்தை வளர்ப்பில்
இக்குரங்குத் தம்பதி
மானிட வர்க்கத்தினரைவிட
ஒரு படி மேலானதே.

K.M.A. அஸீஸ், சாய்ந்தமருது-11.

## உங்கள் பக்கம்

### பிரதேச சபை பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடந்தபொழுது அரச இயந்திரங்கள் முடக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் பிரதேச சபைகளும் செயற்பாடற்று இருந்தது. இதனால் பிரதேச சபைகளினால் செய்யப்பட வேண்டிய வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

அந்தவகையில் வீதிகள் புனரமைப்பு செய்யும் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படாமல் அவை குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு முடியாத வகையில் பாழடைந்தன. இவற்றையெல்லாம் சகித்துக் கொண்ட மக்கள் ஒருகட்டத்தில் பொறுமை இழந்து தத்தமது வீதிகளை தங்களது சொந்தப் பணங்களைச் செலவுசெய்து செப்பனிட்டுவந்தனர். இதுவே கடந்த கால வரலாறு.

ஆனால், இன்று யுத்தம் முடிவடைந்து பிரதேச சபைகள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எனினும் பிரதேச சபைகளை பொறுப்பேற்றுக்கொண்டவர்களின் பொறுப்பற்றதனத்தால் வீதிகள் செப்பனிடப்படாது இருப்பது தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. பொறுமையிழந்த மக்கள் சம்பந்தப்பட்டவர்களை திட்டியபடி தாங்களாகவே சில வீதிகளைப் புனரமைத்து வருகின்றனர். அவ்வாறு அண்மையில் வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கொல்லங்கலட்டி வீசி வீதி பிரதேசவாசிகள் சிலரால் புனரமைக்கப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச சபையினர் தங்கள் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும் என்பதே பாதிக்கப்படுகின்ற மக்களின் எதிர்பார்ப்பாகும்.

எம்.சைந்தன்,
கொல்லங்கலட்டி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## வாசகர் சாலை

### புதுவருட வாழ்த்துக்கள்

கோடான கோடி வணக்கங்கள். தினமுரசுக்கு புதுவருட வாழ்த்துக்கள்.

முரசின் பக்கங்கள் எப்போதும் வீறுநடை போட்டுக்கொண்டு இருக்கின்றது. வாசக நெஞ்சங்களை கொள்ளை கொண்டுள்ளாய். சிப்பிக்குள் இருக்கும் முத்துப்போல் மின்னுகிறாய். பிறந்துள்ள புத்தாண்டிலாவது முரசை வாசகர்கள் நெஞ்சங்களை இன்னும் கொள்ளைகொள்ள உன்னை புதுமெருகூட்டிடுவாய்.

வ.மதனராஜ், வவுனியா.

### பாராட்டுக்கள்

பாமரர் முதல் படித்தவர்கள்வரை அனைவரும் விளங்கும்வகையில் சிறப்புற வெளிவருகிறாய். சென்றவாரம் வெளியான கண்டிக்கப்பட வேண்டிய அடாவடிகள்.... என்ற கட்டுரையில் மதங்களுக்கிடையில், குளறுபடிகளை தோற்றுவிக்கின்ற சில தீயசக்திகளுக்கு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதன் அவசியத்தை கட்டுரையாசிரியர் சிறப்பாகக் கூறியுள்ளார். பாராட்டுக்கள்.

தினமுரசுக்கும், வாசக நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

திருமதி எம்.பார்கவி, புத்தளம்.

### சுவாரசியம் வேண்டும்

சூடு, சுவை, சுவாரசியமாய் மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. அண்மைய காலங்களில் முரசில் மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 24ஆம் பக்கத் தகவல்கள் சூப்பர். இதுபோன்ற நல்ல தகவல்களை வாரி வழங்கவேண்டும். சுவாரசியம்மிக்க தகவல்களை முரசு கட்டாயம் வழங்கவேண்டும். எல்லா பக்கங்களும் ஆக்கபூர்வமாகவே உள்ளது. இன்னும் வளர்ச்சியை முரசு காணவேண்டும்.

எஸ்.எவ்.இம்ரான், மட்டக்களப்பு.

### தீவிர ரசிகை

முரசில் இடம்பெறும் அனைத்துமே அறிவை மேலும் வளர்க்கும்வகையில் அமைந்துள்ளது. அரசியல் விடயங்களை நீ கையாளும்விதம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

லேடீஸ் ஸ்பெஷலில் வரும் அழகுக் குறிப்புகள், பெண்கள் தொடர்பான கட்டுரைகள் என்பவை சூப்பர். நீ தரும் இயற்கையான அழகு குறிப்புகள் பிரயோசனப்படக் கூடியதாகவே இருக்கின்றது. பெண்கள் பக்கத்தின் தீவிர ரசிகை.

ஆர்.சமந்தா, கண்டி.

# தரமான வலைகளை மலிவான விலையில் சந்தைப்படுத்த ஆராய்வு



தரம்குறைந்த மீன்பிடி வலைகள் சந்தைகளில் காணப்படுகின்ற நிலையில், தரமான மீன்பிடி வலைகளை வடகடல் நிறுவனத்தின் ஊடாக உற்பத்திசெய்து சந்தைப்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

மேலும் கடற்றொழிலாளர்கள் மத்தியில் வடகடல் நிறுவனத்தின் வலைகள் தொடர்பில் விழிப்புணர்வுகளை உருவாக்குவது, கடற்றொழில் சார்ந்த இடங்களில் வடகடல் நிறுவனத்தின் விற்பனைக்கூடங்களை ஆரம்பிப்பது தொடர்பிலும் அக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இக்கலந்துரையாடலில் பிரதியமைச்சர் வீரகுமார திஸ்ஸநாயக்க உட்பட வடகடல் நிறுவனத்தின் அதிகாரிகளும் அமைச்சு அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## காணாமல்போன ஏறாவூர் இளைஞன் குளியாப்பிட்டியில் சடலமாக மீட்பு!

(ஏ.எச்.ஏ. ஹூஸைன்)

காணாமல்போனதாகக் கூறப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமது உறவினர் குளியாப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி குளியாப்பிட்டி பொலிஸாரிடமிருந்து ஏறாவூர் பொலிஸாருக்கு ஊடாக தமக்கு தகவல் அனுப்பப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் ஜிப்ரி தைக்கா வீதியைச் சேர்ந்த யூ.எல். சலீம் என்ற 27 வயதுடைய இளைஞனே குளியாப்பிட்டி அக்கரவத்த நூறு ஏக்கர் தோட்டம் எனும் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் வீடுகளுக்கு மாபிள்களைப் பதிக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்தவர் என்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவர் நாரம்மல பகுதியிலேயே மாபிள்களைப் பதிக்கும் தொழிலில் ஈடுபட்டுவரும்போது காணாமல் போயிருந்தார் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தேடுதலில் ஈடுபட்டபோது அக்கரவத்த நூறு ஏக்கர் தோட்டம் எனும் பகுதியில் இலைகுழைகளால் மூடப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

## போக்குவரத்துப் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

(ஏ.எச்.ஏ. ஹூஸைன்)

தான் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது தன்னை வழிமறித்து நிறுத்திய போக்குவரத்துப் பொலிஸார் தனக்கு சிங்களத்தில் குற்றப்பத்திரம் எழுதித் தந்ததாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறக்கொட்டான்சேனையைச் சேர்ந்த கணேசராசா ரகுநாதன் என்பவரே மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்துப் பொலிஸாருக்கெதிராக மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தனது மொழி உரிமை மீறப்பட்டிருப்பதாலே தான் இந்த விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எடுத்துச்சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விடயம் குறித்த இன்னொரு முறைப்பாடொன்றை ...ர் மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் வி.இந்திரன் அவர்களிடமும் தெரிவித்துள்ளார்.

## சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது இந்திய வீட்டுத்திட்டம்

இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் வடகிழக்குப் பகுதிகளில் 2013ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 10250 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதில் யாழ். மாவட்டத்தில் 1832 வீடுகளும் 3090 வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 3540 வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 1074 வீடுகள் மன்னார் மாவட்டத்திலும் 648 வவுனியா மாவட்டத்திலும் 66 வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம்கட்ட வீட்டுத் திட்டப் பணிகள் 2012 ஒக்டோபர் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகவும் 2014ம் ஆண்டில் 16,000 வீடுகளை கட்டி முடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் 2015ம் ஆண்டில் 17,000 வீடுகளை கட்டிமுடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து லட்சக் கணக்கான மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த வேளையில் இந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் இடம் பெற்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இந்திய அமைச்சர் சிதம்பரத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்திய அரசாங்கம் 50ஆயிரம் வீடுகளை கட்டித்தருவதற்கு அப்போது சம்மதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மலசலகூடத்துக்குள் மறைந்திருந்தது கமெரா!

தாதியர் மலசலகூடத்தில் கமெராவை பொருத்தியதாக கூறப்படும் வைத்தியர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தாதியரின் மலசலகூடத்தில் கமெரா பொருத்திய வைத்தியரை உடனடியாக கைது செய்யுமாறு கோரி அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.


## மிதந்து வந்தது சிசுவின் சடலம்

மஹியங்கனை, நிதன்கல பிரதேசத்தில் ஆற்றில் மிதந்துவந்த சிசுவொன்றின் சடலத்தை மஹியங்கனை பொலிஸார் மீட்டுள்ளனர். மஹியங்கனை, நிதன்கலை மற்றும் ஹத்தட்டாவ பிரதேசத்தை அண்மித்த ஆற்றிலிருந்தே இச்சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்பது மாதமுடைய பெண் சிறுவொன்றின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இச்சடலத்தை அடையாளம் காண்பதற்காக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## அமெரிக்கா அச்சம் கொள்கிறது - எகிறியுள்ளது ரஷ்யா!

ரஷ்யா தமது சட்டலைட் சிஸ்டம் மூலம் அமெரிக்காவுக்குள் உளவு பார்க்கலாம் என்ற அச்சம், அமெரிக்கர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளது ரஷ்யா. ரஷ்யாவின் GLONASS சட்டலைட் தரை மையங்களை அமெரிக்காவில் அமைக்கும் திட்டத்துக்கு வெள்ளை மாளிகையால், முட்டுக்கட்டை போடப்பட்டதை அடுத்தே, அவ்வாறு கூறியுள்ளது ரஷ்யா.



இருதரப்பும் இந்த இழுபறியில் தொடர்வதால், இது ஒரு சுவாரசியமான விவகாரமாக தற்போது மாறியுள்ளது. இந்த சட்டலைட்டுகளை வைத்து, இவர்கள் உளவு பார்க்கிறார்கள் என்பதையும், தாமே சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக இப்படியான விஷயங்களில் நெருப்பு இல்லாமல் புகை வராது.

ரஷ்யா தமது சட்டலைட் தரைத் தொடர்பு மையங்களை (GLONASS tracking stations) அமெரிக்காவில் அமைப்பதற்கு, 2012 மே மாதம் விண்ணப்பித்தது. ஆரம்பத்தில் யாருடைய தலைகத மேலேயும் பெரிதாக அலாரம் ஒலிக்கவில்லை. வெள்ளை மாளிகை அனுமதி கொடுக்கத் தயாரானது.

இதற்கிடையே அமெரிக்க உளவுததுறை இரகசியங்களை வெளியிட்ட எட்வார்ட் ஸ்னோடனுக்கு ரஷ்யா அடைக்கலம் கொடுத்தது. அமெரிக்கா முறுக்கிக்கொண்டது. ரஷ்யாவின் என்னென்ன திட்டங்களுக்கு தமது தயவு தேவை என்பதை அமெரிக்க செனட், பூதக்கண்ணாடி வைத்து தேடியது. அப்போதுதான், ரஷ்யா தமது சட்டலைட் தரைத் தொடர்பு மையங்களை அமெரிக்காவில் அமைப்பதற்கு செய்திருந்த விண்ணப்பம் இவர்களது கண்ணில் பட்டது.

ஆனால், விண்ணப்பத்தை காரணம் ஏதுமில்லாமல் நிராகரிக்க முடியாது என்ற நிலை. என்ன செய்யலாம் என்று யோசித்த அமெரிக்க செனட், ஒரு சட்டதிருத்தத்தை கொண்டு வந்தது. அந்த சட்டதிருத்தம் என்ன சொல்கிறதென்றால், வெளிநாட்டு சட்டலைட் ட்ராக்கிங் மையங்களை அமெரிக்க மண்ணில் அமைப்பது என்றால், அந்த சட்டலைட் மூலம் சங்கேத மொழியில் தொடர்புகள் இருக்கக்கூடாது.

ரஷ்யா, GLONASS சிஸ்டத்தை வைத்துதான் தமது இராணுவ நகர்வுகள், நீர்மூழ்கி மற்றும் போர்க் கப்பல்களின் நடமாட்டங்கள் அனைத்தையும் கண்காணிக்கிறது. இதில் இரகசிய சங்கேத மொழியில் ட்ரான்ஸ்மிட் செய்யாவிட்டால், ரஷ்யா இராணுவ இரகசியங்கள் திறந்த புத்தகமாகிவிடும்!

இப்படியொரு நிபந்தனையை போட்டதில், தமது சட்டலைட் தரைத் தொடர்பு மையங்களை அமெரிக்காவில் அமைக்கும் ரஷ்யாவின் திட்டம் தடைப்பட்டது. அதுதான், 'அமெரிக்கா அச்சம் கொள்கிறது' என எகிறியுள்ளது ரஷ்யா.

(தொடர்ச்சி 21 ஆம் பக்கம்)

## 'இங்கிருந்து' ஓர் மலையக மக்களின் குரல்!



மலையகத்தை சுற்றி நடக்கும் வன்முறைகள் மற்றும் ஆவணமாக பிரதிபலிப்பது போன்ற நுட்பங்களை இந்த திரைப்படத்தில் கையாண்டுள்ளேன். இவ்வாறான நுட்பங்களை கையாளும்போதுதான் மலையக மக்களின் குரல்கள் வெளியில் வரும்.

இதில் அவர்களின் குரலே மேலோங்கி உள்ளது என்று கூறுகிறார் 'இங்கிருந்து' திரைப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான கலாநிதி சுமதி சிவமோகன்.

நாடகவியலாளரும் கவிஞரும் எழுத்தாளருமான கலாநிதி சுமதி சிவமோகன் எழுதி, தயாரித்து, இயக்கியிருக்கும் முழுநீளத் திரைப்படம் 'இங்கிருந்து'. நாடகவியலாளர், நாடக நெறியாளர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர், ஆசிரியர் என பல பரிமாணங்களில் தன்னை தக்க வைத்துகொண்டு இருக்கும் இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறைத் தலைவராக செயற்பட்டுவருகின்றார்.

இவர் ஏற்கனவே, பிரளயம், ஒரேஞ்சஸ் ஆகிய இரு குறுந்திரைப் படங்களை எழுதி, இயக்கியுள்ளார். இதில் பிரளயம் குறுந்திரைப்படத்திற்கு பார்சிலோனாவில் விருது கிடைத்தது.

திரைப்படத்துறையில் பெண்களின் பங்களிப்பு (இயக்கம், தயாரிப்பு, திரைக்கதை வசனம், ஒளிப்பதிவு...) என்பது இன்னும் 50 வீதத்தை எட்டாத ஒரு கட்டத்தில் உலக சினிமா இயங்கிக்கொண்டிருக்கும் நிலையில் ஆங்காங்கே பெண்கள் பலர் தங்களது இருப்பையும் அவ்வப்போது காட்டிச் செல்லத் தவறவில்லை. அவர்களில் ஒருவராக தன்னையும் இணைத்துகொண்டுள்ளார் சுமதி சிவமோகன்.

மாற்று சினிமாவின் அவசியத்தை வலியுறுத்தும் இவர் நமக்கேயான (இலங்கை தமிழ் சினிமா) சினிமா கலாசாரம் ஒன்று உருவாக வேண்டும் என்பதையும் வலியுறுத்தத் தவறவில்லை.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# தாய்நாடு எங்கே போகின்றது?

இலங்கை சர்வதேச போதைப் பொருட்கள் பரிமாற்ற நிலையமாக மாறி வருகின்றது என்ற கருத்து அரசியல் காழ்ப்புணர்வோடு கூறப்பட்டிருந்தாலும் அதை அதற்காகவே நிராகரித்துவிட முடியாது.

ஏற்கெனவே பாகிஸ்தான், இந்தியா, சீனா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன என்ற செய்திகள் பல தடவை வெளியாகி இருந்தன.

பெரும்பாலும் கடல்வழியாகவே போதைப் பொருள் கடத்தல் நடைபெறுவது வழமை யாக இருந்தது. அண்மையில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட எட்டு ஏதெனொல் போதைப்பொருள் கொள்கலன்கள் போல் கடந்த காலத்தில் பல தடவைகள் அரசியல் செல்வாக்குடன் பல கொள்கலன்கள் இறக்குமதியாகியுள்ளது என்ற சந்தேகத்தை வலுவடையச் செய்துள்ளது.

முன்னர் புலிகள் கடல்வழியாக பெருமளவாக போதைப்பொருட்களை கடத்தியதை அன்றைய கால கட்டத்திலேயே இலங்கை அரசு வெளிப்படுத்தியிருந்தது. ஆனாலும் புலிகளின் கடத்தல்களை இலங்கை அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. புலிகள் மிகச் சுதந்திரமாக போதைப் பொருட்களை கடத்தினார்கள்.

இப்போது புலிகள் இல்லை. அதனால் போதைப் பொருட்கள் வரத்து குறையவில்லை. புலிகள் உயிரைப் பணயம் வைத்துச் செய்ததை இப்போது அரசியலையும், அதிகாரத்தையும் பணயமாக வைத்து கனகச்சிதமாகச் செய்து கொண்டிருக்கின்றார்களா? என்ற அதிர்ச்சியை மக்களுக்கு ஏற்படுத்திருக்கின்றார்கள்.

இறுதியாக "காத்" என்ற போதை மூலிகையை கென்யாவிலிருந்து இலங்கை ஊடாக கடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை சுங்கப்பிரிவினர் மடக்கிப்பிடித்துள்ள செய்தி, இலங்கை போதைப் பொருட்கள் கடத்தல் கேந்திர நிலையமாக மாறி வருகின்றதோ என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே கள்ளநோட்டுப் பரிமாற்றமும், கடனட்டை மோசடிப் பேர்வழிகளின் சுதந்திரமான நடமாட்டங்களும் நடைபெற்றுள்ளதை அண்மையில் பிடிக்கப்பட்ட மோசடிப் பேர்வழிகளின் நீண்ட பட்டியல் காட்டுகின்றது.

இதற்கிடையே கசினோ நிலையங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான சர்ச்சைகள், சுற்றுலாப் பயணிகளை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் தாராளமயமாக்கப்பட்ட தொழிற்துறைகள் என இலங்கையின் தற்போதைய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு மோசடிப் பேர்வழிகளும், உலக மகா திருட்டு ஆசாமிகளும் இலங்கையை குறிவைத்து செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவே தென்படுகின்றன. இதற்கு அரசியல் செல்வாக்கும், அதிகாரமும் நிறைந்த உள்நாட்டு கருப்பு ஆடுகள் சிலரும் துணை போகவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

மிகுந்த அவதானமும், கண்காணிப்பும் இல்லாவிட்டால், எமது தாய்நாடு திருடர்களின் கூடாரமாகிவிடும். மோசடிக்காரர்களும், சர்வதேச போதைப்பொருள் கடத்தல் பேர்வழிகளும் இலங்கையை குத்தகைக்கு எடுத்து விரைவில் ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றிவிடுவார்கள்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இலங்கையை உலுப்பும் ஜெனீவா காய்ச்சல்

**எதிர்வரும்** மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வலுவான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படும் என்ற பேச்சுக்களே இலங்கை அரசியலில் சூடான விவாதமாக மாறியிருக்கின்றது.

இலங்கைக்கு எதிராக என்பதை விடவும், தற்போதைய இலங்கை அரசுக்கு எதிராகவே அத்தகைய தீர்மானம் கொண்டு வரப் போகின்றது என்பதே தென் இலங்கை எதிர்க்கட்சிகளின் கருத்தாக உள்ளது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. அரசு சர்வதேச அழுத்தங்களையும், எதிர்ப்புகளையும் இலங்கைக்கு எதிரானதாக காட்டிக்கொள்வதனூடாக தன்னைப் பாதுகாக்கவும், முழு இலங்கைக்குமான பிரச்சினையாகவும் திசை திருப்பிவிட முயற்சிக்கின்றது என்பதாகும்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை உள்நாட்டில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பலமான அத்திவாரத்துடன் இருக்கின்றது. பொருளாதார நெருக்கடி, உழைப்புச் சுரண்டல், நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நெருக்கடி இவை எல்லாம் யுத்தம் இல்லாத காலப் பகுதியிலும் முன்னரைவிட அதிகமாகவே உள்ளது என்ற கருத்துக்கள் மக்களிடையே இருக்கின்றபோதும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு மக்கள் தேர்தலில் வெற்றிகளையே வழங்குகின்றனர்.

மேற்கூறிய சவால்களை நாட்டுமக்கள் எதிர்கொண்டபோதும், நாட்டு மக்களாலும், வருகைதரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளாலும் தவிர்க்கமுடியாததாகி இருப்பது இலங்கை அரசு மேற்கொண்டு வரும் உட்கட்டுமான அபிவிருத்தியையும், நகரங்களை இணைத்து பொருளாதார மேம்பாட்டை ஊக்கவிக்க உதவப்போகும் நெடுஞ்சாலைகள் அமைப்புக்ளையும் குறிப்பிட்டுப் பாராட்டாமல் இருப்பதில்லை.

சிங்கள மக்களிடம் இந்த அரசுமீது இருக்கும் முதன்மைக் கேள்வியானது, யுத்தம் இல்லாமல் இருந்திருந்தால் இந்த நாட்டை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துவதோடு, நாட்டு மக்களின் வாழ்விலும் நெருக்கடியற்ற பொருளாதார ஏற்றம் ஏற்படும் எனக்கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதே என்பதுதான்.

நாளாந்தம் மூன்றுவேளை உணவை உட்கொள்ளமுடியாத வாழ்க்கை, எல்லாவற்றுக்குள்ளும் அரசியல் தலையீடு, அதிகாரக்கரங்களின் அழுத்தம், வியாபாரத் தோல்விகள், அநேகமானவர்களை மீளமுடியாத கடனாளிகளாக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடி என்பவற்றிலிருந்து நாட்டு மக்களை மீட்கும் திட்டம் என்ன என்பதை அரசு எடுப்பதாகத் தெரியவில்லையே என்பதும், தமிழ் மக்கள் கேட்கும் அரசியல் தீர்வுக்கு நாட்டைப் பிரிக்காத தீர்வொன்றையும் அரசு காணுமாக இருந்தால் நாட்டில் தேவையற்ற முரண்பாடுகள் இல்லாமல் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் அமைதியாகிவிடுமே. அதைச் செய்ய ஏன் இந்த அரசு முன்வரவில்லை என்பன போன்ற கேள்விகளே இருக்கின்றன.

இந்தக் கேள்விகளுக்கு விடைகொடுக்கப்படாமல் இன்னும் காலம் இழுத்தடிக்கப்படுமானால் மத்தியில் அரசியல் மாற்றம் ஒன்றுக்கான அவசியத்தையிட்டு மக்கள் சிந்திப்பார்கள். ஆகவே வீதிகள் போடப்படுவதையும், உட்கட்டுமானப்பணிகளை கட்டுவதையும் காட்டி மக்களின் மனதை நிரந்தரமாக மாற்றி மயக்கிவிடலாம் என்று நம்பமுடியாது.

இதுவே சலித்துப்போய்விடவும் கூடும். அத்தகையதொரு வாய்ப்பான காலம் மலர்வதற்கு சிறிதுகாலம் பிடிக்கலாம். அதுவரை காத்திருக்க எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. அதற்கிடையே தற்போது எழுந்திருக்கும் சர்வதேச அழுத்தங்களை பயன்படுத்தி அரசை வீட்டுக்கு அனுப்பிவிட முடியுமா? என்பதே எதிர்க்கட்சிகளின் தந்திரோபாயமாக உள்ளது.

அரசின் மற்றுமொரு உள்நாட்டு எதிர்த்தரப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். கூட்டமைப்பைப் பொறுத்தவரை தற்போதைய மகிந்த ராஜபக்ச அரசுடன் அரசியல் முரண்பாடுகள் உள்ளார்த்தமாக இல்லை. நெருக்கமான உறவுக்காகவும், இலாபங்களை இரகசியமாக பெற்றுக்கொள்வதிலும், இந்த அரசு முரண்பாடாக இல்லை.

நினைக்கும் காரியத்தை சக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியாமல் ஜனாதிபதியிடமோ, அமைச்சர்களிடமோ தொடர்பு கொண்டு சாதித்துக்கொள்வதில் எவ்விதத்திலும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின் நிற்பதில்லை. பாராளுமன்றத்திலும், ஊடகங்களிலும் எதைக் கூறினாலும் அதையெல்லாம் அரசியலுக்காக அல்லது இன்னொருவருக்காக கூறியதாக மழுப்பி தன்னை நிரபராதிகளாக காட்டிக் கொள்வதில் அடித்துக்கொள்ள யாரும் இல்லை.

இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களிடையே தம்மை அரசின் எதிர்த்தரப்பாக காட்டிக் கொள்வதனூடாகவே அரசியல் நடத்த முடியுமென்பதில் கவனமாக இருக்கின்றார்கள். அதற்காக இலங்கை அரசின் அனைத்து செயற்பாடுகளையும் எதிர்ப்பதுதான் தமிழ் மக்களிடம் எடுபடும் அரசியலாகியிருக்கின்றது. தமிழ் மக்கள் அரசை பழிவாங்கும் வெறிகொண்டு மூசிக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதுதான் கூட்டமைப்பின் தமிழ் மக்கள் குறித்தான புரிதலாக உள்ளது.

கூட்டமைப்பினர் இன்னொரு விடயத்தையும் தமிழ் மக்களிடம் கூறிவருகின்றார்கள். அத்தகைய திட்டத்தை கூட்டமைப்புக்கு வகுத்துக் கொடுத்தவர்கள் தமிழ் புத்திஜீவிகள் என்போரும், புலம்பெயர் புலி ஆதரவாளர்களும்தான். அவர்கள் அந்த மந்திரம் இதுதான். தற்போதைய இலங்கை ஜனாதிபதியும், அவரது சகாக்களுமே புலிகளை அழித்தவர்கள், அவர்களை பழிவாங்கவேண்டும். அது மட்டுமல்லாமல் இந்த அரசாங்கம் தானே தமிழ் மக்களுக்கு எதையும் செய்யப்போவதில்லை. இந்த அரசாங்கம் யுத்தத்தை வெற்றிகொண்ட திமிரில் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது. அதை நமது வழிக்குக் கொண்டு வருவது கடினம்.

இந்த அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கும், வழிக்குக் கொண்டுவருவதற்கும், பழிவாங்குவதற்கும் இன்றைக்குப் புலிகளைப் போல் யாரும் பலமான நிலையில் இல்லை. மகிந்த ராஜபக்ச அரசை மடக்கிப்போடுவதற்கு இன்று இருக்கும் ஒரேயொரு சக்தியாக இருப்பது சர்வதேச சமூகம்தான்.

சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்காகவோ, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காகவே எதையும் செய்யப்போவதில்லை. அதை சர்வதேசம் தமது கடமையாக முதன்மைப்படுத்தப்போவதுமில்லை. ஆனாலும் சர்வதேசத்தை தமிழ் மக்கள் தமது ஆயுதமாக பயன்படுத்திக் கொள்வதுதான் தமிழ் மக்களின் முதன்மை வேலைத்திட்டமாக கொண்டு செயற்படவேண்டும்.

சர்வதேசத்தின் வேலைத்திட்டத்துக்குள் நாம் இல்லாவிட்டாலும், நமது வேலைத்திட்டத்துக்குள் சர்வதேசம் இருக்கின்றது என்பதுதான் தமிழ் மக்களை நம்பச் செய்யும் தந்திரோபாயமாகும்.இதற்கு இருக்கும் வாய்ப்புக்களையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியாவுடன் இருக்கின்ற உறவை பாதுகாத்துக் கொண்டு சீனா, பாகிஸ்தான் நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை பேணுவதுடன், அதை பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல்வேறு முக்கியத்துவமிகுந்த உறவுகளை வளர்த்துக்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்கத்தையே நாடுகளுடனான உறவை மெல்ல இழுந்து கொண்டிருக்கின்றது.

தற்போதுகூட மேற்கத்தைய நாடுகளையும், ஐரோப்பிய நாடுகளையும் விடுத்து அவற்றுக்கு எதிரான மனோநிலையைக் கொண்டுள்ள ஆபிரிக்க நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்துவதற்கே இலங்கையின் நேரம் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசின் இவ்வாறான போக்கு இலங்கைக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்க சந்தர்ப்பத்தை தேடவேண்டிய கட்டாயத்தை தோற்றியுள்ளது. அத்தகையதொரு சந்தர்ப்பமாகவே இறுதி யுத்தத்தில் இலங்கை அரசம் படைகளும் மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளன, போர் சட்ட வரம்புகளை மீறியுள்ளன, அதானால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி உள்ளனர் போன்ற குற்றச்சாட்டுக்களை இலங்கைக்கு எதிராக சர்வதேச அரங்குக்கு கொண்டு வந்துள்ளன.

அதுமட்டுமல்லாமல் இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களும், கருத்துரிமைச் சுதந்திர மீறல்களும், காணப்படுவதாகவும் பலமான சர்வதேச நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் குற்றம் சுமத்தி வருகின்றன.

ஏற்கெனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அதன் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையை விமர்சிக்கும் அறிக்கையைக் கொண்டுவந்து சர்வதேச கவனத்தை இலங்கை மீது திருப்பியிருந்தார். அதன் பின்னர் அமெரிக்கா இலங்கைக்கு எதிரான் தீர்மானத்தை மனித உரிமைப் பேரவையில் கொண்டு வந்து இந்தியாவின் ஆதரவையும் அதற்குச் சாதகமாக பெற்றுக் கொண்டபோது இலங்கை அரசு திணறிப்போனது.

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து அதற்கு நியாயத்தையோ, பரிகாரத்தையோ காண்பதற்கு முயற்சி செய்வதை விடவும், தீர்மானங்களை எதிர்த்து தோற்கடிக்கவே இலங்கை அரசு முயற்சிசெய்து தோற்றுப்போனது. இறுதியில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முழுமையாக எதிர்க்க முடியாமல் சர்வதேசத்திற்கு சில வாக்குறுதிகளை கொடுக்கவேண்டிய தர்மசங்கடமான சூழலை இலங்கை அரசு எதிர்கொண்டது.

அந்த தீர்மானத்தில் முதன்மையானது மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பொறிமுறையை, வள உதவியை இலங்கை அரசு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், இறுதி யுத்தத்தின்போது நடந்த ப்டுகொலைகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த சர்வதேச விசாரணை வேண்டும் என்பதும்தான். இவ் இரண்டு விடயத்தையும் இலங்கை அரசு பொருட்படுத்தவில்லை. மாறாக உள்ளக விசாரணை என்றும், படைகளுக்கான விசாரணைக்கு படைகளையே விசாரணையாளர்களாக நியமிப்பது என்றும் கூறுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்ற சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு செவி சாய்த்து பரிந்துரைகளில் குறிப்பிட்டவற்றில் சிலவற்றை அமுல்படுத்தப்போவதாக கூறியது.

அதற்கமைய வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தி முடித்ததைத் தவிர வேறு எதையும் இதுவரை அமுலுக்கு கொண்டுவருவதாக தெரியவில்லை. ஆகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக் கொடுத்த வாக்குறுதிகளையும் திருப்தியான வகையில் செய்துமுடிக்கவில்லை.

இவ்வாறான குறைபாடான செயற்பாடுகளும், தம்மை ஓரம் கட்டும் இலங்கையின் செயற்பாடுகளும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளை ஆத்திரமடையச் செய்துள்ளன.

இந்த நிலையிலையே பொது நலவாய நாடுகள் கூட்டத்தொடருக்காக இலங்கைக்கு வருகை தந்த பிரிட்டனின் பிரதமர் டேவிற் கெமரூன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது இலங்கை அரசுக்கு விருப்பமானதாக இருக்கவில்லை.

இருந்தாலும் கெமரூன் பொது நலவாய மகா நாட்டுக்கு வருகை தந்ததை விடவும் யாழ்ப்பாணத்துக்கு சென்றதும், அது தொடர்பு கெமரூன் கூறிய கருத்துக்களுமே பூதாகரமாக காட்டப்பட்டது.

அதற்குக் காரணம் இலங்கை அரசு இறுதி யுத்தத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணையை நடத்தி பரிகாரம் காண முயற்சிக்காவிட்டால், சர்வதேச விசாரணையைப் பிரிட்டன், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கோரும் என்று தெரிவித்ததுதான்.

கெமரூன் கூறியதோடு நில்லாமல் இலங்கைக்கு எதிரான தனது கோரிக்கையை அமெரிக்கா மற்றும் சர்வதேச நாடகளுடன் இணைந்து கொண்டுவருவது தொடர்பிலும் ஆழமாக ஆராய்ந்துவருவதாகவும் அழுத்தம் திருத்தமாகவும் கூறியிருக்கின்றது.

அமெரிக்காவின் முன்னைய தீர்மானத்துக்கு இதுவரை இலங்கை அரசுகண்ட பரிகாரங்கள் என்ன என்பதே சவாலாக மாறியிருக்கும் சூழலில் அமெரிக்கா கொதிப்படைந்து காத்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு எண்ணெய் ஊற்றுவதுபோல் பிரிட்டனும் தனது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்கின்றது.

இந்த சர்வதேச கொதி நிலையை சரியாக கணக்கிட்டுக் கொண்டுள்ள புலம்பெயர் புலி, ஆதரவாளர்கள் இலங்கைக்கு எதிரான வேலைத்திட்டமாக மாற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். அதன்பயனாக கிடைக்கும் இலாபத்தை பங்கிட்டுக் கொள்ள கூட்டமைப்பையும் தூண்டிவிட்டிருக்கின்றார்கள். அதற்கு எடுபட்டே கூட்டமைப்பு இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை மாற்றுவதில் தாம் நேரடியாகவே களம் இறங்கப்போவதாக பகிரங்கமாக கூறிவருகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவை தாம் நிராகரிப்பதாகவும் கூட்டமைப்பு திட்டவட்டமாக கூறியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசு அபிவிருத்தியைத் தாண்டி வேறு முன்னேற்றங்கள் எதையும் காட்டி நியாயம் தேடிக் கொள்ளமுடியாத நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது என்ற கருத்துக்கள் பல தரப்பிலும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்தச் சூடு இன்னும் பலருக்கு நெருப்புக் காய்ச்சலை கொடுக்கவே செய்யும்.



# முள்ளிவாய்க்கால் முடிவு



காயமுற்று ஊனம் அடைந்தவள்.
காவலரணில் நின்றபடி கவிதைகள் எழுதியவள்.

**அவள்** அவனுக்காகவே காத்திருக்கிறாள். அவன் வரும் வரை அது எத்தனையாண்டுகள் ஆனாலும் அவள் காத்திருப்பாள். அவன் விடுதலையாகி வெளி வரும்நேரம் ஒரு இலட்சியத் திருமணம் நிகழும் என்றுதான் பலர் சொன்னார்கள்.

இரண்டு இலக்கிய கர்த்தாக்களின் இணைவு இரண்டு மண்ணை நேசிக்கிற இதயங்களின் இணைவு ஒரு வரலாற்றை எழுதுமென்று அந்தக் காதலுக்குப் பலர் கௌரவ தூதர்களாக இருந்தது பெரிய கதை.

அந்தக் காதலன் புலியில்லை. புலிகளை நேசித்தவன். புலிகள் அமைப்பின் ஒரு பிரிவுக்கான முகவராக பணியாற்றியவன். 10 ஆண்டுகள் முன் கைதாகி சிறையில் அடைபட்டவன்.

அந்தக் காதலி ஒரு பெண்புலி. 17 வயதில் களம் சென்று பயிற்சி எடுத்துக் களங்களில் காவலிருந்து ஒரு காவியம் படைத்த சமரில் காயமுற்று ஊனம் அடைந்தவள். காவலரணில் நின்றபடி கவிதைகள் எழுதியவள்.

ஊனமுற்றபின் களத்தைவிட்டு அரசியல் துறையில் இணைக்கப்பட்டாள். அரசியலில் இருந்தவளின் எழுத்தாற்றலை இனங்கண்டு அவளது எழுத்துக்களை ஊக்குவித்தார்கள். அவள் எழுத்துக்கள் வானொலி, பத்திரிகை வரை வியாபிக்கத் தொடங்கியது. போராளிகள் ஓயாத இயங்குசக்திகள் என்பதற்கு இலக்கணமாய் அவள் இயக்கம் ஒரு பிரிமிப்புத்தான் வெளியாட்களுக்கு.

அது சமாதானக் கதவுகள் திறபட்டதாய் நம்பப்பட்ட யுத்த நிறுத்த காலம். சிறைகளில் உள்ளவர்களும் தொலைபேசும் வசதிகள் முதல் விஞ்ஞான வளர்ச்சியின் அத்தனை வசதிகளையும் வன்னிமண் பெற்றிருந்த காலம்.

சிறையில் இருந்தவர்களுடன் தொடர்பாடல்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கம்பிகளின் பின் கண்ணீரோடு இருந்தவர்களுக்கு மனிதர்களோடு பேசக்கிடைத்த தருணங்களை அவர்கள் வரமாகவே எண்ணினர். அத்தகைய ஒரு அழைப்பில்தான் அவனுடன் பேசக்கிடைத்தது அவளுக்கு.

ஆரம்பம் அவன் எழுதிய எழுத்துக்களை அவள் தட்டச்சுச்செய்து வெளியீடுகளுக்கு அனுப்பினாள். தனது நிகழ்ச்சிகளில் சேர்த்தாள். அவன் அக்கா என்றும் இவள் தம்பியென்றும் உருவானது உறவு.

நாட்கள் போகப்போக அக்கா தம்பியுறவு அந்நியமாகியது. ஒருநாள் கதையோடு கதையாக அவன் அவளைக் காதலிப்பதாகத் தனது காதலை தொலைபேசியில் வெளிப்படுத்தினான். அதுவரை காதல் கல்யாணம் எவ்வித சிந்தனையும் அற்றிருந்தவள் திடுக்குற்றுப் போனாள்.

அடுத்த நாள் பொறுப்பாளர் அக்காவிடம் தனியே கதைக்க வேண்டியிருப்பதாய் சந்திப்பு நேரம் கேட்டாள். ஏதோ கொடுக்கப்பட்ட பணிபற்றிக் கதைக்கப் போகிறாள் என்றுதான் பொறுப்பாளரும் நினைத்தார்.

அக்கா... அவன் என்னைக் காதலிக்கிறானாம்....!

பொறுப்பாளருக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

என்னடியாத்தை விளையாட்டுக்கும் அளவில்லையே?

அக்கா சிரிக்காதையுங்கோ?

உண்மையாத்தான் சொல்றன். என்னட்டை முடிவு கேட்டிருக்கிறார். உங்கடை சம்மதம் வேணுமெனக்கு.

சரி அவனுக்கு உன்னில காதல்! உனக்கு!? நானும் காதலிக்கிறேன்..! எடுத்த எடுப்பிலேயே அவள் சொன்னாள்.

இதப்பாரம்மா... அவன் சிறையில... நீ வெளியில்! மற்றது உனக்கும் அவனைத் தெரியாது, அவனுக்கும் உன்னைத் தெரியாது.. இது சினிமா மாதிரியில்லையா!?

இது சாத்தியமாகுமோண்டு யோசிச்சீங்களே??

நேரை பாத்து விரும்பிச்செய்த கலியாணங்களே எத்தினை நீதி மன்றத்துக்கு வந்த கதையள் உங்களுக்குத் தெரியுமெல்லே?!

அவள் பொறுப்பாளரின் விளக்கம் விபரம் எதையும் கேட்கவில்லை. விடாப்பிடியாக நின்றாள். தங்கள் காதல் புனிதம், தூய்மை, தெய்வீகம், காவியம் என்றெல்லாம் கனக்க விளக்கம் சொன்னாள்.

அந்த முறுகலுக்குப் பின்னர் அந்தப் பிரிவைவிட்டு அவள் வேறு பிரிவுக்கு மாறிப்போனாள். காரணம் முகம்தெரியாத குரல்கள் மட்டும் அறிமுகமான காதலைப் பிரிக்க நின்ற பாவம் பொறுப்பாளர் மேல் விழுந்தது. ஆனால் அவளது இலட்சியக்காதலுக்கு பலரது ஆதரவு கிடைத்து அவளும். சிறையில் இருந்த அவனும் காதலர்கள் ஆனார்கள்.

சமாதானப்பறவை இரத்தத்தில் சிதைய யுத்தம் ஆரம்பமாகி பல்லாயிரம் உயிர்கள் இழப்பு காணாமற்போனவை, கடைசியில் சிதைக்கப்பட்டவையென போராட்டத்தின் முடிவு மர்மமாகியது.

2009 மே மாதம் அவளும் ஆயிரமாயிரம் பேருடன் சரணடைந்தாள். ஆயிரமாயிரம் துயரங்கள் சுமந்து அவளுக்கும் புனர் வாழ்வு கிடைத்துச் சிறையில் இருந்து 2010 விடுதலையாகி வெளியில் வந்தாள்.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 94 மணியம்

**ஆனால்** சந்தேகப்படுவதற்குப் பல காரணிகள் உள்ளன. இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது புலிகளுக்குப் பின்னணியிலிருந்து உதவுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சென்றிருந்தனர். (இப்பொழுது அவர்கள் மூவரும் வெவ்வேறு வெளிநாடுகளில் வாழ்வதாகத் தகவல்) அவர்கள் மூவரும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள். அவர்களிடம் பிரபாகரன் செல்லக்கிளியைச் சுட்டது உண்மைதானா என்பதை அறியப் பல தடவைகள் முயன்றேன். நான் அந்த விடயத்தை அவர்களிடம் நேரடியாகக் கேட்காதபோதும், விடயத்தை அவர்கள் புரிந்துகொண்டு பதில் ஏதும் கூறாமல் தட்டிக்கழித்துவிட்டார்கள்.

செல்லக்கிளியின் அண்ணன் ஒருவரை எனக்குத் தெரியும். திருமணம் செய்துகொள்ளாத அவர், மேசன் வேலை செய்து வந்தார். அவர் வேலை முடிந்து வந்து இரவில் நல்லூர் பண்டாரக்குளம் ஒழுங்கையிலுள்ள எனது நெருங்கிய உறவினர் ஒருவரின் வீட்டில்தான் படுப்பது வழமை. நான் அங்கு செல்லும் நேரங்களில் அவருடன் கதைத்துப் பழகியதால், செல்லக்கிளியின் மரணம் குறித்து அவரிடமும் ஒருமுறை கேட்டேன். அவர் பிரபாகரனை நேரடியாகக் குற்றஞ்சாட்டாமல், இயக்கத்தில் அவரது வளர்ச்சி பிடிக்காத உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் சிலர் அவரைத் திட்டமிட்டுச் சுட்டுக் கொன்றதாகத்தான் கேள்விப்பட்டதாகச் சொன்னார்.

இது ஒருபுறமிருக்க பிரபாகரனின் சொந்தக் குணாம்சங்கள் பற்றி முன்னரும் நான் சில சம்பவங்கள் கேள்விப்பட்டிருந்தேன். ஆரம்ப காலத்தில் பிரபாகரனும் அவருடைய சகாக்கள் சிலரும் ஒரு இடத்தில் மறைவாக இரவு படுத்திருந்திருக்கின்றனர். நள்ளிரவில் எழுந்த பிரபாகரன் தன்னுடன் படுத்திருந்தவர்களில் தனக்குப் பிடிக்காத ஒருவரைத் தயவு தாட்சண்யமின்றி சுட்டுக் கொன்றிருக்கிறார். இந்தச் சம்பவம் பரவலாகப் பேசப்பட்ட ஒரு விடயம்.

பிரபாகரனும் குட்டிமணியும் சேர்ந்து நீர்வேலி வங்கிக் கொள்ளையைச் செய்த நேரமும் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கொள்ளையின் பின்னர் கொள்ளையடித்த நகைகள், பணம் என்பனவற்றுடன் பிரபாகரன், குடடிமணி போன்றோர் ஓர் இடத்தில் இரவு தங்கி இருந்திருக்கின்றனர். எல்லோரும் படுத்துத்தூங்கிய பின்னரும் பிரபாகரன் மட்டும் தூங்காமல் அவர்கள் தங்கியிருந்த கொட்டிலைச் சற்றிச்சுற்றி வந்திருக்கிறார்.

இதை அவதானித்த குட்டிமணி "தம்பி (பிரபாகரனை சிறுவயதில் ஊரிலுள்ளவர்கள் தம்பி என்று அழைப்பது போலவே, புலிகள் இயக்கத்திலும் ஆரம்ப காலத்தில் அன்ரன் பாலசிங்கம் முதற்கொண்டு எல்லோரும் 'தம்பி' என்று அழைப்பதே வழமையாக இருந்தது. பின்னர் அவர் 'தலைவர்' ஆனதும் 'தம்பி' என அழைத்தால் தண்டனைதான் கிடைக்கும்) நீ இன்னும் படுக்கல்லையா?" எனக் கேட்டிருக்கிறார்.

அதற்கு பிரபாகரன், "எல்லாரும் படுத்தால் இந்தப் பொருட்களைப் பாதுகாப்பது ஆர்?" எனக் கேட்டிருக்கிறார்.

பிரகாகரனின் இந்த எதிர்க் கேள்வி குட்டிமணியின் சிந்தனைப் பொறியைத் தட்டிவிட்டிருக்கிறது. பிரபாகரன் நள்ளிரவில் தனது சகாவையே சுட்டுக்கொன்றதை அறிந்திருந்த குட்டிமணி, பின்னர் அன்றிரவு தானும் தூங்கவில்லை. தாங்கள் எல்லோரையும் சுட்டுக் கொன்றுவிட்டு, கொள்ளையடித்த நகைகளையும் பணத்தையும் பிரபாகரன் எடுத்துச் சென்றுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமே, குட்டிமணியையும் அன்றிரவு தூங்காமல் செய்துவிட்டது.

எனக்கு இந்த விபரத்தைச் சொன்னவர் குட்டிமணியின் நெருங்கிய சகா ஒருவரின் நண்பராக இருந்தவர்.

ஆனால் குட்டிமணி அன்று இரவு சந்தேகித்தது சரியாகப் போய்விட்டது. அந்த நீர்வேலி வங்கிக் கொள்ளையில் கிடைத்த பணம், நகைகள் என்பனவற்றைப் பிரபாகரனும் குட்டிமணியும் சில வாரங்களில் பாகப் பிரிவினை செய்தனர். பின்னர், அவற்றை எடுத்துக்கொண்டு இந்தியா செல்வதற்காக குட்டிமணி வல்லிபுரக் கோவிலுக்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து பயணம் மேற்கொண்டபோது, இலங்கைக் கடற்படையால் துரத்தப்பட்டு, திரும்பி அவர் கரைக்கு ஓடியபோது அங்கு பதுங்கியிருந்த பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி தடுத்து வைக்கப்பட்ட நிலையில், பிரபாகரன் குழுவினர் திருநெல்வேலியில் இராணுவத்தினர்மீது மேற்கொண்ட தாக்குதலின் எதிர் விளைவாக, அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அனுசரணையுடன் சிங்களச் சிறைக் கைதிகளால் அவரும், தங்கத்துரை போன்ற போன்றவர்கள் உட்பட 53 கைதிகளும் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட விடயம் எல்லோரும் அறிவர்.

குட்டிமணி இந்தியா செல்லும் விடயம் மிக இரகசியமாக இருந்தும், பொலிசாருக்கு எப்படி அந்த விடயம் தெரிந்தது என்பது எல்லோருக்கும் அந்த நேரத்தில் வியப்பாக இருந்தது. ஆனால் சிறிது காலத்தின் பின்னர் உண்மை வெளியான போது எல்லோருக்கும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. அந்த நேரத்தில் வல்லிபுரம் பகுதியில் கிராமசேவை அலுவலராக இருந்த கோவளத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்த தகவலின்படி, பிரபாகரன் குழுவினரே குட்டிமணியின் பயணம்பற்றி பொலிசாருக்குத் தகவல்சொன்னதாகத் தெரிய வந்தது!

எனவே இத்தகைய 'பண்புகள்' நிறைந்த ஒருவர் தனது சகா செல்லக்கிளியை தானே வேட்டையாடி இருப்பார் எனப் பலரும் கருதியதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

புலிகள் இராணுவத்தினரைத் தாக்கிய மறுநாள், நண்பகல் அளவில் பலாலியிலிருந்து திருநெல்வேலிச் சந்தியில் வந்து இறங்கிய பெருமளவு இராணுவத்தினர் பலாலி வீதியூடாகவும், அந்த வீதிக்குக் கிழக்கே இருந்த தாளையடி ஒழுங்கைக்கூடாகவும் நடந்துவந்து கண்ணில்பட்ட எல்லோரையும் சுட்டுக்கொன்றனர்.

நான் இருந்த வீட்டுக்கு மேற்குப் புறமாக இருந்த ஒழுங்கையினாலும் சில இராணுவத்தினர் துப்பாக்கிகளை நீட்டியவண்ணம் வந்து கொண்டிருந்தனர். நாம் அவர்களை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். எமது வீட்டுக்கு மேற்குப்புறமாக ஒழுங்கைக்கு அப்பால் 'ஆனந்தண்ணை' என்ற றேடியோ திருத்துபவர் ஒருவருடைய வீடு இருந்தது. மதிய நேரமாகையால் (அன்று ஞாயிற்றுக்கிழமை என்று ஞாபகம்) அந்த ஆனந்தண்ணை வீட்டின் வாசல்படியில் இருந்த சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இராணுவத்தினர் அவரது வீட்டுக்கேற்றடியில் நின்று கொண்டு அவரை அழைத்ததை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஆனந்தண்ணை சோற்றுக் கோப்பையை கையில் ஏந்திய வண்ணம் கேற்றை நோக்கி வந்தார். அவர் பாதித்தூரம் வந்திருக்கமாட்டார். இராணுவத்தினர் அவரை நோக்கிச் சுட்டுவிட்டு சர்வசாதாரணமாக அப்பால் நகர்ந்துசென்றனர். அவர் அந்த இடத்திலேயே விழுந்து துடிதுடிக்க இறந்துவிட்டார். நாம் அதிர்ச்சியில் உறைந்துபோனோம். இராணுவத்தினர் தற்செயலாக இந்தப் பக்கம் திரும்பியிருந்தால், எம்மையும் கண்டிருப்பர். அப்படிக் கண்டிருந்தால் எமது கதியும் ஆனந்தண்ணையின் கதியாகத்தான் போயிருக்கும்.

பின்னர் இராணுவத்தினர் சிவன் கோவிலின் மேற்கு வீதியால் சென்று மணல்தறை ஒழுங்கைக்கூடாக பழம் வீதிக்குச் சென்று கண்ணில் காண்பவர்களைச் சுட்டபடி சென்றிருக்கின்றனர்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 83

பா.ராகவன்

**அது** நாள் வரை இங்கிலாந்து தம்மை எதுவும் செய்யாது என்று திடமாக நம்பிக்கொண்டிருந்தவர் அவர். ஆகவே நம்பிக்கையுடன் அந்த நகலை இங்கிலாந்து அரசுக்கு அனுப்பி, "இது என்ன விவகாரம்?" என்று கேட்டார்.

"Nonsense. It is a figment of Bolsvik's imagination!" என்று பதில் எழுதிவிட்டது இங்கிலாந்து. அதாவது, இதில் உண்மை இல்லை; இது ரஷ்யப் புரட்சியாளர்களின் கற்பனை, தங்கள் கற்பனைக்குத்தான் அவர்கள் இப்படியொரு பொய்யான வடிவம் தந்திருக்கிறார்கள் என்று அர்த்தம்.

சொன்னார்களே தவிர, நடந்தது வேறு. ஸ்கைஸ் பிகாட் ஒப்பந்தத்தில் என்ன எழுதியிருந்ததோ, அதன்படிதான் இங்கிலாந்தும் பிரான்சும் துருக்கியப் பேரரசைக் கூறுபோடத் தொடங்கின. பாலஸ்தீனை இங்கிலாந்து எடுத்துக்கொண்டது.

1917 டிசெம்பர் 9 ஆம் திகதி அலன்பே என்கிற தளபதியின் தலைமையில் ஒரு படையை ஜெருசலேத்துக்கு அனுப்பிவிட்டார்கள். மறுபுறம் கவ்ராட் என்கிற பிரெஞ்சுத் தளபதி தலைமையிலான படை சிரியாவுக்குள் நுழைந்து ஆக்கிரமித்தது.

படை நுழைகிறது என்றால் அதிகாரம் மாறிவிட்டது என்று அர்த்தம். கண் மூடித்திறக்கும் நேரத்தில் பாலஸ்தீன் இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகவும் சிரியா, பிரெஞ்சு காலனிகளுள் ஒன்றாகவும் ஆகிப்போயின.

இந்தப் பக்கம் இந்த வைபவங்கள் நடந்துகொண்டிருந்தபோதே அங்கே இங்கிலாந்தில் (பின்னாளில் மிகப் பிரசித்தி பெற்ற) பால்ஃபர் பிரகடனத்தை வெளியிட்டார்கள். இன்றைக்கு வரை இஸ்ரேல் – பாலஸ்தீன் விவகாரங்கள் அனைத்துக்கும் ஆதிமூல காரணமாக விளங்கிய மாபெரும் பிரகடனம் அது.

ஆர்தர் பால்ஃபர் என்கிற அன்றை இங்கிலாந்து வெளி விவகாரத்துறைச் செயலாளர் மூலம் வெளியிடப்பட்ட இந்தப் பிரகடனத்தின் சாரத்தை ஒரு வரியில் சொல்வதென்றால் பாலஸ்தீனில் யூதர்களுக்கான தனி நிலப்பகுதி ஒன்றை உருவாக்கியாகவேண்டும் என்பதுதான் அது. அதை மாட்சிமைதங்கிய இங்கிலாந்து மன்னரின் பெயரால் அப்பிரகடனம் அறிவித்திருந்தது.

இந்த அறிக்கையின் இன்னொரு பகுதி இப்போது பாலஸ்தீனினல் வசிக்கும் யூதர் அல்லாதோரின் பொது உரிமைகளுக்கோ, மத உரிமைகளுக்கோ பங்கம் வராது என்றும் சொல்கிறது.

உலகில் எத்தனையோ தேசங்கள் தொடர்பாக எவ்வளவோ பிரகடனங்கள் இதற்கு முன்னும் பின்பும் வெளியாகியிருக்கின்றன. ஆனால் எந்த ஒரு பிரகடனமும் பால்ஃபர் பிரகடனம் அளவுக்கு நயவஞ்சகமும் சூழ்ச்சியும் மிக்கதல்ல. பிரிட்டன் ஏன் அத்தனை தீவிரமான யூத ஆதரவு நிலை எடுத்தது, அராபியர்களுக்கு துரோகம் செய்தாவது யூதர்களைக் கொண்டு பாலஸ்தீனில் குடியமர்த்தலாம் என்று எதனால் முடிவு செய்தது என்கிற கேள்விக்கெல்லாம் ஆதாரபூர்வ பதில் எதுவும் கிடையாது!

முன்பே பார்த்ததுபோல, யூதர்களின் ராஜதந்திர நடவடிக்கைகள்தான் இதற்கெல்லாம் காரணம் என்று ஒன்றை வரியில் சொல்லிவிட்டுப்போவது தவிர வேறுவழி கிடையாது. கொஞ்சம் பணம் செலவுசெய்து ஒரு கிரவுண்ட் நிலம் வாங்கி வீடு கட்டமுடியும் என்பது நமக்குத் தெரியும், ஏராளமாகப் பணம் செலவுசெய்து ஒரு நாட்டையேகூடக் கட்டமுடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்கள் யூதர்கள்.

பால்ஃபர் பிரகடனத்தின் மிக முக்கிய பகுதி இதுதான்.

"இப்போது பாலஸ்தீனில் வசிக்கும் யூதர் அல்லாதோரின் சிவில் உரிமைகளுக்கோ, மத உரிமைக்களுக்கோ பங்கம் வராது"

காலம் காலமாக பாலஸ்தீன் என்பது அரேபிய முஸ்லிம்களின் தாயகமாக விளங்கும் தேசம். எப்படி அது யூதர்களின் பூர்வீக பூமியோ, அதே போலத்தான் அராபியர்களின் பூர்வீக பூமியும்கூட. யூதர்களாவது பிழைப்பு நிமித்தம் இடம்பெயர்ந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல்வேறு தேசங்களுக்குப் போய் விட்டவர்கள். ஆனால் பாலஸ்தீன அராபியர்கள் யுத்தக் காலம்தொடங்கி, செத்தகாலம்வரை அங்கேயே இருந்து வந்தவர்கள்.





காலம் காலமாக பாலஸ்தீன் என்பது அரேபிய முஸ்லிம்களின் தாயகமாக விளங்கும் தேசம். எப்படி அது யூதர்களின் பூர்வீக பூமியோ, அதே போலத்தான் அராபியர்களின் பூர்வீக பூமியும்கூட. யூதர்களாவது பிழைப்பு நிமித்தம் இடம்பெயர்ந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல்வேறு தேசங்களுக்குப் போய்விட்டவர்கள். ஆனால் பாலஸ்தீன அராபியர்கள் யுத்தக் காலம்தொடங்கி, செத்தகாலம்வரை அங்கேயே இருந்து வந்தவர்கள்.

அப்படிப்பட்ட அரேபிய முஸ்லிம்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "யூதர் அல்லாதோர் என்னும் பதத்தை உபயோகிப்பதன் மூலம் பாலஸ்தீன் மண்ணின் மைந்தர்கள் என்பவர்கள் யூதர்கள்தான் என்கிற கருத்தாக்கத்தை மறைமுகமாக முன்வைத்தது பால்ஃபர் பிரகடனம். அதனால்தான் சரித்திர ஆசிரியர்கள் இப்பிரகடனத்தை வடிகட்டிய அயோக்கியத்தனம் என்று வர்ணிக்கிறார்கள்.

இன்னொரு விஷயத்தையும் இதில் கவனிக்கலாம். அராபியர்களின் சிவில் உரிமைகளுக்கும் மத உரிமைகளுக்கும் பங்கம் வராது என்று பால்ஃபர் பிரகடனம் சொல்கிறது. இதில் மறைபொருளாக இருக்கும் விஷயம் என்ன?

அராபியர்களுக்கு இனி அரசியல் உரிமைகள் என்று எதுவும் கிடையாது என்பதுதான்! சிவில் உரிமைகளைப் பயன்படுத்தி, வேண்டுமானால் ஓட்டுபோடலாமே தவிர, தேர்தலில் நிற்கமுடியாது! ஆட்சியில் பங்கு கேட்கமுடியாது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், பால்ஃபர் பிரகடனத்தின்படி பாலஸ்தீன் மண்ணில் நிறுவப்பட்டும் இஸ்ரேல் என்கிற தேசத்தின் அரசியல் உரிமைகளில் அராபியர்கள் பங்குகோர முடியாது. இரண்டாந்தரக் குடிமக்களாக அவர்களும் அங்கே வாழலாமே தவிர, யூதர்களின் தேசமாகத்தான் அது இருக்கும். அரபி அல்ல; ஹீப்ருவே தேசிய மொழியாக இருக்கும். இஸ்லாம் அல்ல; யூத மதமே தேசிய மதமாக இருக்கும்.

டாக்டர் அலி அப்துல்லா அல் தாஃபா என்கிற வரலாற்றாசிரியர் Arad Israel conflict என்றொரு நூல் எழுதியிருக்கிறார். இஸ்ரேல், பாலஸ்தீன் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் அந்தப் புத்தகம் ஒரு பொக்கிசம். தனது நூலில் டாக்டர் அப்துல்லா, பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் பால்ஃபரின் நாட்குறிப்புக்களிலிருந்து சில பகுதிகளை பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார். அந்த நாட்குறிப்புகளை அவர் எப்படிப் பெற்றார் என்கிற விவரம் தெரியாவிட்டாலும், அந்தக் குறிப்பிட்ட வரிகள் மிகவும் முக்கியமானவை.

"ஜியோனிசம் சரியான பாதைதானா" என்பது பற்றிக் கவலை இல்லை. ஆனால் அதன் அடிப்படையில் யூதர்களுக்கான தேசம் ஒன்றை பாலஸ்தீனில் உருவாக்கித்தான் ஆகவேண்டும். அப்படி ஒரு யூததேசம் உருவாகுமானால், பாலஸ்தீனில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழு லட்சம் அராபியர்களின் நிலை என்னாகும் என்று கேட்கிறார்கள். அது பற்றி எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை"

இதைவிடக் கேவலமான, அருவருப்பூட்டக்கூடிய சற்றும் பொறுப்பில்லாத ஒரு கருத்தை அந்தக் காலகட்டத்தில் வேறு யாரும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

(தொடரும்...)

# திருமண வாழ்வில் நுழையும் முன்...

**குறிப்பாக** தாய்மார்கள், மகள் வெளிநாட்டிற்கு சென்றால் சந்தோசமாக வாழ்வாள் என்று நினைக்கின்றார்கள். இன்னொரு பக்கம் குடும்பத்தில் யாரோ ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்றால் குடும்பம் நல்லாய் இருக்கும் என்று நினைக்கிறார்கள். முதலில் வெளிநாட்டு வாழ்க்கை என்பது ஒரு சிலருக்கு மட்டும்தான் இன்பமாக அமைகிறது. பெரும்பாலும் நரகவாழ்வு வாழ்கிறார்கள். நமது பிள்ளைகளின் வெளிநாட்டு வாழ்க்கை வரலாறு பெரும்பாலும் இரத்தக் கண்ணீர் வடிக்கவைக்கும் என்பதை மறக்காதீர்கள்.


யாழ்ப்பாணத்தில் கிராமச்சூழலில் ஒரு இளைஞன் இருந்தான். நல்ல உழைப்பாளி, தோட்டம் செய்துவந்தான். சொந்தவீடு, மோட்டார் சைக்கிள் வைத்திருந்தான். எந்தத் தீயபழக்கமும் இல்லாதவன். இவரது தாயாரின் தம்பிமுறை மாமன் தனது மகளை இவனுக்கு திருமணம் செய்ய விரும்பி பேச்சுவார்த்தை தொடங்கினார்.

ஆனால் மகள், நான் தோட்டக்காரனை முடிக்கமாட்டேன், வெளிநாட்டு மாப்பிள்ளை பாருங்கள் அல்லது திருமணம் எனக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். தந்தை மகளின் விருப்பப்படி 'இலண்டன்' மாப்பிள்ளைக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய்தார்கள். திருமணப் புரோகிதர்கள் 'அன்டர் கிறவுண்ட் எஞ்சினியர்' என்று மாப்பிள்ளைக்கு அடைமொழி கொடுத்து நிறையச் சீதனத்துடன் திருமணம்செய்து வைத்து 'புரோக்கர் பீஸ்' வாங்கிக் கொண்டு போய்விட்டார். பெண், மனதில் பல ஆசைகளுடன் விமானத்தில் பறந்துசென்றாள்.

அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. 'அண்டர் கிறவுண்ட் எஞ்சினியர்' காலில் இறப்பர் பூட்ஸ் அணிந்து வேலைக்குப் புறப்பட்டார். சந்தேகம் ஏற்பட்டது; விசாரித்தாள். வாய்க்கால் துப்பரவாக்கும் தொழிலில் ஈடுபடுவது தெரிந்தது. கணவனுடன் சண்டை பிடித்துக்கொண்டு நாடு திரும்பி வாழாவெட்டியாக வாழ்கிறாள். அந்தத் தோட்டக்காரன் திருமணம்செய்து அழகிய பெண் குழந்தை பெற்று இன்பமாக வாழ்கிறான். இது நடந்துகொண்டிருக்கும் கதை. இப்படி வாய்திறந்து சொல்லமுடியாமல் பலர் வாழ்கிறார்கள்.

குடும்பத்தில் ஒருவர் வெளிநாடு செல்லவேண்டும் என்ற எண்ணம் பலரிடம் உள்ளது. உண்மைதான். பல ஆண், பெண் பிள்ளைகள் தம்க்காக வாழாமல் பெற்றோர், சகோதர்களுக்காக தியாகம் செய்துவருகிறார்கள். ஆனால் அப்படிக் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் பணம், ஆடம்பர வாழ்க்கைக்கு உதவுவதுடன், பல இளைஞர்கள் உழைக்காத சோம்பேறியாக இருக்க வழிவகுத்துள்ளது. வெளிநாடு என்று மாண்டுபோகாமல் ஊரிலேயே நல்ல ஆண், பெண்களைத் தெரிவுசெய்யுங்கள். சுகமோ, துக்கமோ நம்பிள்ளைகள் நம்முடன் இருப்பார்கள்.

இறுதியாக ஆனால் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, மணவாழ்வில் நுழைய இருக்கும் இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர் என்பதை அறிவதோடு அத்திருமணத்திற்கு அவ்விருவருடைய மனப்பூர்வமான இணக்கத்தையும் பெறுவதுதான், அவ்வாறின்றிச் செல்வத்தையோ, சீதனத்தையோ, மற்றவற்றையோ மனத்திற்கொண்டு வாழ்க்கைப்படும் அவ்விருவரின் இணக்கத்தையும் பெறாமலோ, அவர்களின் கருத்தைப் பொருட்படுத்தாமலோ அவ்விருவரையும் திருமணத் தளைகளால் பிணைப்பது ஒருபோதும் அறிவுடைமையாகாது.



சொல்லின் செல்வர்
இரா.செல்வவழுதிவேல்

(தொடரும்)




# மலையகத்துக்கு அவசியமான குடியிருப்பு!

உலகம் இன்று நவீனயுகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் மலையக பெருந்தோட்டப்புறங்கள் மாத்திரம் இன்னும் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அடையாள சின்னங்களான லயன் முறையிலான குடியிருப்புக்களுடன் காட்சி அளிப்பது மிகுந்த கவலைக்குரிய விடயமே.

சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக மலையகத்தில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவழி தமிழர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முதுகெலும்பாக திகழ்ந்துவருகின்றனர். ஆனால் அவர்களது பொருளாதார நிலைமையோ மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள் சொல்லொண்ணா துயரங்களுக்கு மத்தியில் தமது வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்தனர். ஆங்கிலேயர்களது காலனித்துவத்திலிருந்து இலங்கை விடிவை பெற்றுக்கொண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் அந்த சுதந்திரக் காற்றை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலையிலேயே இன்னும் மலையக பெருந்தோட்ட சமூகம் இருக்கிறது.

முறையான சுகாதார வசதிகள் இன்மை, கழிப்பறை வசதிகள் இன்மை போன்றவற்றுக்கு மத்தியில் ஒரு அறைக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அநேகமான லயன் குடியிருப்புக்களில் முறையான பாதுகாப்பு வசதிகள் இல்லாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது 150 வருடங்களுக்கு மேலான குடியிருப்பு என்பதால் சுவர்கள் வெடித்துக் கூரைகள் சிதைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. குறிப்பாக அநேகமான பெருந்தோட்ட குடியிருப்புக்களில் கூரைகளின் மணல் மூட்டைகளும் டயர்களும் அல்லது கற்கள் போன்ற ஏதாவது பாரமான பொருட்கள் வைத்திருப்பதையும் காணமுடியும்.

அதாவது மழை காலங்களில் குடியிருப்புக்குள்ளே மழைநீர் வராமல் இருப்பதற்காகவும் காற்றுடன்கூடிய காலநிலையால் கூரைகள் பறந்துவிடாமல் இருப்பதற்காகவுமே அதன் மீது பாரங்கள் வைக்கப்படுகின்றன. அவ்வப்போது சில தோட்ட குடியிருப்புக்களின் கூரைகள் மாத்திரம் மாற்றப்படுவதுண்டு. ஆனால் அவ்வாறான வேலைகள் எல்லாத் தோட்டங்களையும், சென்றடைவதில்லை. இந்த குடியிருப்புக்களுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளபோதும் அது பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது இவ்வாறான பாதுகாப்பற்ற மின்சார இணைப்புக்களால் மலையகத்தில் பல அனர்த்தங்களும் ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை செய்து சுவையான தேயிலையினை உலகுக்கு வழங்கி இலங்கைக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ள இந்த மலையக பெருந்தோட்டப்புற மக்களை இலங்கை அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருப்பது கவலைக்குரிய விடயமே.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்காக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள் மலையகத்தில் நிரந்தரமாக நிலைகொண்டபோதிலும் இன்னும் அவர்கள் முறையான வாழ்க்கை கட்டமைப்புக்குள் வரமுடியாத சூழலில்தான் இருக்கிறார்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மறைந்த தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானால் இந்த மக்கள் பிரிவினர் வாக்குரிமை பெற்றுக் கொண்டனர். அத்தோடு பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் சில சலுகைகளையும் உரிமைகளையும் கூடப் பெற்றுக்கொண்டனர்.

இருந்தபோதும் பெருந்தோட்ட துறையின் அடையாளச் சின்னமான லயன் குடியிருப்பு முறையில் மாற்றம் ஏற்படவில்லை. அதாவது மலையக மக்கள் தொடர்ந்தும் காணி உரிமை அற்றவர்களாக லயன் அறைகளிலேயே வாழ்ந்துவருகின்றனர். இந்த நிலைமையிலிருந்து மலையக மக்களுக்கு விடிவையும் விமோசனத்தையும் பெற்றுக்கொடுப்பதற்காக மலையகத் தலைவர்கள் பலர் குரல் கொடுத்தனர். அதன்விளைாவக லயன் முறையை இல்லாது ஒழிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஆட்சியில் அமர்த்துவதற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் பெ.சந்திரசேகரன் ஒத்துழைப்பு வழங்கினார். அதன்விளைவாக அவருக்கு அப்போது தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. அதன்மூலமாக பெருந்தோட்டப் பகுதிகளில் 7½ பேர்ச்சஸ் காணிகளுடன் தனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அந்த காலகட்டத்தில் சுமார் 15000 தனி வீடுகள் பெருந்தோட்ட மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இந்த தனி வீட்டு வேலைத்திட்டமானது பின்னர்வந்த அரசாங்கத்தால் தேக்கநிலைக்குச் சென்றது. இருந்தபோதும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி மேலும் பல வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். குறிப்பாக சில இடங்களில் தொடர்மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கையளிக்கப்பட்டன.

தொடர்மாடி வீடுகள் மலையக பகுதிகளுக்கு உகந்ததல்ல. அத்தோடு அங்கு அதிக நிலப்பரப்பு காணப்படுகிறது. எனவே பெருந்தோட்ட மக்களுக்கு தொடர்மாடி வீடுகள் அமைத்துக் கொடுப்பதை கைவிடவேண்டும் என்ற கருத்துக்கள் பலரால் முன்வைக்கப்பட்டன. எனவே அந்த திட்டமும் கைவிடப்பட்டு 7 தொடக்கம் 10 பேர்ச்சஸ் காணியில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

இருந்தபோதும் மலையக பெருந்தோட்டங்கள் அனைத்திற்கும் இந்த தனி வீட்டுத் திட்டக்கனவு ஒரு சிறிய அளவே நிறைவேறி உள்ளது.

இவ்வாறான நிலையிலேயே 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 50000 குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களை உள்வாங்கி இருப்பது வரவேற்கத்தக்க விடயமே.

ஆனால், மலையக மக்களுக்கான 50000 குடியிருப்புக்கள் தொடர்மாடி திட்டத்தின் அடிப்படையிலேயே அமைத்துக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையானது பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகமான காணிகள் காணப்படுகின்றன. அத்தோடு அங்கு விவசாயத்திற்கு பயன்படுத்தப்படாத 35000 கெக்டெயர் தரிசு நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்கம் கடந்த காலங்களில் தெரிவித்து இருந்தது. இவ்வாறான நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எதற்காக மாடிவீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் குடியிருப்புக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

மலையகத்தின் புவியியல் ரீதியான சூழலுக்கு ஏற்ப குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பும் கோரிக்கையாகவும் உள்ளது.

எனவே, அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் மலையக அரசியல் கட்சிகள் தமது தனிப்பட்ட கோபதாபங்களை மறந்து சமூகத்தின் நலன்கருதி மலையகப்பெருந்தோட்ட மக்களுக்கு உகந்த வகையிலான குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# எங்கே போகிறது எங்களின் கலாசாரம்...?

ஒரு கால கட்டத்தில் கலாசாரத்துக்கு பெயர்போன பிரதேசமாக யாழ்ப்பாணம் விளங்கியது. இறுக்கமான கட்டுப்பாடுகளால் ஒழுக்க விழுமியங்கள் கட்டிக் காக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த பின்பும் A9 பாதை திறக்கப்பட்ட பின்பும், இத்தகைய கட்டுப்பாடுகளில் ஓட்டை விழத் தொடங்கியது. இறுக்கமான கட்டுப்பாடுகளில் தளர்ச்சி ஏற்பட்டு எம்மண்ணின் கலாசார விழுமியங்களில் பிறழ்வுகள் உண்டாகியது.

அதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த இளைஞர், யுவதிகளின் உணர்வுகளுக்கு, யாழ். குடா நாடெங்கிலும் மூலை முடுக்கெங்கிலும் முளைக்கத் தொடங்கிய விடுதிகள் வழிகாட்டியது. இதைவைத்து தென்னிலங்கையில் உடலை மூலதனமாக்கி வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த சில கன்னியர்களும் இங்கு வந்து வியாபாரத்தை நடாத்தினார்கள்.

சில விடுதிகளில் பெண்களை வைத்து விபச்சாரம் நடத்தினார்கள். இதில் மாணவ, மாணவிகளும் இப்படுகுழிகளில் விழத் தொடங்கினார்கள். போதை மருந்தின் உச்சக்கட்டப் பாவனை பாடசாலைகளை இலக்குவைத்து நடத்தப்பட்டன. மூடப்பட்டிருந்த மதுபானசாலைகளும் திறக்கப்பட்டன. அங்கெல்லாம் வியாபாரம் கொடிகட்டிப் பறந்தன. யாழ்ப்பாணத்தவர்களின் கலாசாரம் அழிவடைந்துவருவதை உணர்ந்துகொண்ட பலரின் முன்னோடி நடவடிக்கையினாலும் யாழ்.பத்திரிகைகளின் விடாமுயற்சியாலும் விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடப்பட்டதில் பலர் கைதானார்கள். இதனால் உண்டாக விருந்த பேராபத்து ஒன்றிலிருந்து ஓரளவு கட்டுப்பாடுகள் வந்தன. பகிரங்கமாக நடந்தேறிய விடயங்கள் இப்போது இரகசியமாக அரங்கேறிவருகின்றது.

இது இவ்வாறிருக்க, இப்போது குடா நாட்டை ஒரு கலக்கு கலக்கிவரும் விடயங்கள் பல தலைதூக்கியுள்ளன. ஏற்கனவே இவ்விடயங்களில் உண்டாகத் தொடங்கிய மாற்றங்கள் இப்போது அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

- **அதிகரித்துச் செல்லும் மதுபானப் பாவனை.**
- **அதிகளவில் இடம்பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகம்.**
- **மாணவர்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டுவரும் போதைப்பொருள் விற்பனை.**

இத்தகைய செயற்பாடுகளின் வாயிலாக எமது கலாசாரம் அழிவடைந்துவருகின்றன. அதிகரித்துக் காணப்படும் மதுப்பாவனையால் இளம் சந்ததியினர் அழிவுப் பாதையை நோக்கி நகர்ந்துவருகின்றனர். இளைஞர்கள் முதல் முதியோர்வரை மதுபானச்சாலைகளின் அன்றாட வாடிக்கையாளராகி வருகின்றனர். இருபத்தியொரு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்கக்கூடாது என்று சட்டவிதிகள் சொல்கின்ற போதிலும் பதினைந்து வயது, பதினாறு வயதுக்காரர்களெல்லாம் 'பியர்' குடித்து கொண்டாடி மகிழும் துர்ப்பாக்கியம் இம் மண்ணிலே அரங்கேறிவருகின்றன.

தமது வருமானத்தை மட்டுமே மதுபானசாலை உரிமையாளர்கள் பார்க்கின்றனரே தவிர எமது இளம் சமூகத்தினர் அழிவடைந்து வருகின்றனர் என்பதை இவர்கள் சிந்திக்க தவறுகின்றனர்.

சிறியோர் முதல் பெரியோர் வரை பாவித்துவிட்டு வீதிகளில் விட்டெறிந்து செல்லும் பியர் ரின்கள், மற்றும் சாராயப் போத்தல்கள் என்பன நிறைந்து கிடக்கின்றன. வீதிகளில் கிடக்கும் பியர் ரின்களில் மழை நீர் உட்புகுந்து நுளம்பு பெருகி பல வகையான நோய்களில் சிக்கித் தவிக்கின்றன பொதுமக்கள் என்ன பாவம் செய்தார்கள்??

இதுஇவ்வாறிருக்க, மாணவர்களை இலக்குவைத்து பாடசாலைகளுக்கு அண்மையிலுள்ள கடைகளில் போதை மாத்திரைகள் பிடிபட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ளதை வைத்துப் பார்க்கும்போது மாணவர் சமூகத்தை சின்னாபின்னமாக்கி, அவர்களின் கல்வியினை சீரகுலைத்து, பெற்றவர்களின் எதிர்காலக்கனவுகளை சிதைவடையச் செய்து மாணவர்களை பிழையான பாதைகளுக்கு இட்டுச்செல்வதே இவ்விற்பனையாளர்களின் நோக்கமென்பதை இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

யுத்தப் பாதிப்புகளில் ஒரு சாராரும், காணாமல்போனவர்களின் குடும்பங்கள் இன்னொரு பக்கமாகவும், கணவரை இழந்த இளம் விதைவைகள் வாழமுடியாமல் தவிப்பது மற்றொரு புறமாகவும் அங்கங்களை இழந்து மற்றவர்களின் தயவை எதிர்பார்த்து வாழ்நாளை எண்ணிக் கொண்டிருக்கின்றவர்களின் அவலங்களுடன் குடா நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பெரும் நெருக்கடிகளுடன் பசி, பட்டினி வாழ்க்கையாக நகர்ந்துகொண்டிருக்க, இவ்வாறான போதைப் பாவனையாலும் இளம் சந்ததி அழிவை நோக்கியே செல்கின்றது.

இதனால் மாணவர்கள் உட்பட்ட இளம் சந்ததியினர் கொலைகாரர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் மாறிவிடுவார்கள்; மாறிவருகின்றார்கள்!!! என்னும் உண்மை ஒவ்வொருவரின் மனங்களையும் உறுத்தவேண்டும்.

இது இவ்வாறிருக்க போதையினால் பாதை மாறிச்செல்பவர்கள் பருவக்கோளாறு காரணமாக இளவயதுக் கர்ப்பம் மற்றும் பாடசாலை மாணவிகளின் கர்ப்பம் என்றும் குடாநாடு கலங்கிவருகின்றன. இத்தகைய கர்ப்பமடையும் தூண்டல்களுக்கு கைத்தொலைபேசி, மற்றும் இன்ரநெற் மூலம் இலகுவாக பார்க்கக்கூடிய ஆபாசப்படங்களும் துணைபுரிகின்றன.

இத்தோடு தனியார் வகுப்புகளுக்கென்று வரும் மாணவர்கள் சோடி சோடியாகத் திரையரங்குகளுக்கு சென்றுவருவதும் தவறுகளுக்கு துணைபோகும் சந்தர்ப்பங்களை உண்டாக்கிவருகின்றது.

யாழ். மாவட்டத்தை அண்மைக் காலங்களாக அச்சுறுத்திவரும் மற்றொரு விடயமாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றன. மொட்டாகி மலராகி, காயாக, கனியாக வேண்டிய சிறுவர்களை மொட்டுடன் கசக்கி எறியும் காமுகர் கூட்டமும் தலை விரித்தாடிவருகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் நாளும் பொழுதும் நடைபெற்றுவரும் ஒரு விடயமாகிவிட்டது.

வாழவேண்டிய பிஞ்சுகள் வாடிய மலராகி, வரும் கொடுமைகளை யாரும் தடுத்து நிறுத்துவதாக தெரியவில்லை. இத்தகைய கொடுமைகளை புரிபவர்கள் பெரும்பாலும் இரத்த உறவுகளாக இருப்பதுதான் வேதனை தரும் விடயமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்களைப் பார்த்தால் பெற்ற பிள்ளை மீது தந்தையும் தங்கைமீது அண்ணனும், பேரப்பிள்ளைமீது தாத்தா, மாமா, சிறிய தந்தை, உறவுகள் என்ன கொடுமை. எண்ணிப் பார்க்கவே முடியாத பெரும் கொடுமைகள் இப்போது இங்கே அரங்கேறிவருகின்றது. எங்கே போகின்றது யாழ்ப்பாணம்? எப்படி மாறப்போகின்றது வடபகுதி என்று பலரும் கேள்வி கேட்கும் அளவுக்கு அத்தகைய கொடிய சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் நடந்தேறிவருகின்றது!

இத்தகைய கொடுமைகளை புரிபவர்கள் மீது ஈவுஇரக்கமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியது சட்டத்தின் கடமையாகும். இச்சட்டத்தில் காணப்படும் ஓட்டைகளை பணம் கொண்டு அடைத்துவிட்டு குற்றவாளிகள் தப்பித்துவருவதும் இத்தகைய சம்பவங்கள் நடப்பதற்கு துணைபுரிகின்றன.

ஆகவே, இப்போது குடாநாட்டுப் பகுதி உட்பட வட மாகாணமெங்கும் தலை விரித்தாடிவரும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தால் மட்டுமே தமிழர் தாயகம் 2009ஆம் ஆண்டுக்கு முன்பு போல உள்ள நிலைமையாக வளர்த்தெடுக்கலாம். வளர்த்தெடுக்க முடியும். இல்லையெனில் தென் பகுதி மற்றும் வெளிநாட்டுக் கலாசாரங்களே இங்கு வேரூன்றும். சிந்திப்பது யார்?? பூனைக்கு மணி கட்டுவது யார்?? இது ஒவ்வொரு தமிழனிடமும் விடப்பட்டுள்ள கேள்வியாகும்!

– அளவெட்டி, ப. உதயகுமார் –



# விஷம் வைக்கப்பட்டதா விடுதலைப் போராளி அரபாத்துக்கு?!

**தொகுப்பு: வேணு கிருஷ்ணா**

## யசீர் அரபாத்

யசீர் அரபாத் (யாசர் அராபத், Yasser Arafat) என்று பரவலாக அழைக்கப்படும் முகம்மது யசீர் அப்துர் ரஹ்மான் அப்துர் ரவூப் அரபாத் அல்-குத்வா அல்-ஹுசைனி (ஓகஸ்ட் 24, 1929இல் பிறப்பு - நவம்பர் 11, 2004இல் மரணம்) பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக செயலாற்றியவர். அபூ அம்மார் என்று அவரது ஆதரவாளர்களால் அழைக்கப்பட்டார். 1994 இல் அமைதிக்கான நோபல் பரிசுபெற்ற மூவரில் ஒருவர். அரபாத், சுயநிர்ணய-பாலஸ்தீனம் என்ற பெயரில் இஸ்ரேலுக்கு எதிராக மிகவும் வலிமையான போராட்டம் நடத்தியவர். அவர் இஸ்ரேல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து ஈடுபட்டு பல தசாப்தங்கள் மோதலுக்கு முடிவு எட்ட முயற்சித்தார். அவற்றின் மத்தியில் முக்கியமானவை - 1991 மட்ரிட் மாநாடு, 1993 ஒஸ்லோ உடன்பாடு மற்றும் 2000 காம்ப் டேவிட் உச்சி மாநாடு.

## ஆரம்ப வாழ்க்கை பிறப்பு மற்றும் குழந்தைப்பருவம்

அரபாத் கெய்ரோ, எகிப்தில் பாலஸ்தீன பெற்றோருக்கு பிறந்தார். அவரது தந்தை, அப்தெல் ரௌஃப் அல் குட்வா அல் ஹுஸைனி, அவரது தாயார், ஜாஹ்வா அபுல் சவுத். அரபாத்தின் தந்தை தனது பரம்பரை குடும்ப நிலங்களுக்கான உரிமைக்காக போராடினார். ஏனெனில், 25 ஆண்டுகளாக எகிப்திய நீதிமன்றங்களில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், அரபாத்தின் தந்தை வெற்றியடையவில்லை. பின் சாகினி மாவட்டத்தில் ஒரு ஜவுளி வியாபாரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார் அரபாத்தின் தந்தை. அரபாத் ஏழு குழந்தைகளில் இரண்டாவது இளம் மகனாக பிறந்தார். 1933 இல், அரபாத் நான்கு வயதாக இருந்தபோது அவரின் தாய், சிறுநீரக நோயால் இறந்தார்.

## கல்வி

1944 இல் கிங் புவாட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார் அராபத். அந்த காலத்திலேயே யூதர்கள் பற்றிய வாசிப்புக்களை மேற்கொண்டார். பின் பேச்சுவார்த்தைகள் மூலம் யூத மற்றும் ஜியோனிஸம் பற்றி நன்றாக புரிந்து கொள்ள ஆரம்பித்தார். கல்லூரியில் படித்து 1950 இல் சிவில் பொறியாளர் பட்டம் பெற்றார். 1948 இல் நடைபெற்ற அரபு-இஸ்ரேல் போரின்போது கல்லூரியில் இருந்து வெளியேறி அரபுப்படைகளுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராகப் போரிட்டார்.

## திருமண வாழ்க்கை

1990 இல் யசிர் அரபாத் தனது 61 வயதில் சுஹா தாவில் என்ற 27 வயது பாலஸ்தீன கிறிஸ்தவப் பெண்ணை மணந்தார். திருமணத்திற்கு முன் சுஹா தாவிலை அவரது அம்மா யசிர் அரபாத் அவர்களிடம் பிரான்ஸில் வைத்து அறிமுகப்படுத்தினார். சுஹா தாவில் அரபாத்தின் உதவியாளராகப் பணிபுரிந்தவர். இவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் நாள் மகள் பிறந்தார். அரபாத்தின் மனைவி இவருடனான மணவாழ்க்கையை விரும்பாதவராக இருந்தார். பல முறை அவரைவிட்டு விலகிச் செல்ல விரும்பியிருக்கிறார். எனது திருமணத்தை மறுபடியும் செய்ய முடியுமென்றால் நான் அரபாத்தை திருமணம் செய்யமாட்டேன் என அவரது மனைவி சுஹா தாவில் கூறினார். 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி அரபாத் பயணம் செய்த விமானம் தரையிறங்கும்போது விபத்திற்குள்ளானது. அதில் விமான ஓட்டிகள் இருவரும் கொல்லப்பட்டனர்.

1980 களில் லிபியா, ஈராக், சவுதி அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து பண உதவி பெற்றார். அதைக் கொண்டு பலஸ்தீன விடுதலை இயக்கத்தை பலப்படுத்தினார்.

## இறப்பு

யசிரின் மரணம் தொடர்பாக பல கோட்பாடுகளைக் கூறினர். அதில் மிக முக்கியமானதாக இருப்பது நச்சு ஊட்டப்பட்டார் எனும் காரணம் ஆகும். மற்ற காரணங்களாக எயிட்ஸ் (அல்லது எச்.ஐ.வி), கல்லீரல் நோய், இரத்தத் தட்டுக்களின் சீர்கேடு எனப் பரவலாக கூறப்பட்டுவருகின்றது.

2004ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 அன்று திடீரென நோயுற்றதால் கூட்டத்தில் வாந்தி எடுத்தார். துனிஸிய, ஜோர்தானிய மற்றும் எகிப்திய மருத்துவர்களின் பரிசோதனைக்குப்பின், பிரான்சு நாட்டின் "பெர்சி இராணுவ மருத்துவமனையில்" அனுமதிக்கப்பட்ட இவர் நவம்பர் 3 ஆம் நாள் கோமாநிலைக்குச் சென்றார். நவம்பர் 11 அன்று தனது 75 ஆவது வயதில் அவர் இறந்துவிட்டார்.

செப்டம்பர் 2005இல் ஒரு இஸ்ரேலிய எய்ட்ஸ் நிபுணர் அரபாத்தின் மருத்துவ பதிவுகளை அடிப்படையாகக்கொண்டு எய்ட்ஸின் அனைத்து அறிகுறிகளும் அவருக்கு உள்ளது என்று கூறினார். எனினும், கதிரியக்க இயற்பியல் நிறுவனம் மற்றும் நியூயோர்க் டைம்ஸ் உட்பட பல ஆதாரங்களின் அடிப்படையில் விஷம் என்று கூறினர்.

## நஞ்சூட்டல்

இவரது இறப்புத் தொடர்பாகச் சந்தேகப்படுவதற்கான காரணிகளைப் பெற்றுக்கொண்ட இவரது மனைவியின் வேண்டுகோளின் பேரில் இவரது ஆடை உட்பட இறப்பின்போது இவரிடமிருந்த பொருட்கள் 2012 இல் சுவிட்சர்லாந்து நாட்டுப் பரிசோதனைக்கூடம் ஒன்றில் வேதியியற்(இரசாயனவியல்) பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. யசிர் அரபாத்தின் இறப்புக்குக் காரணம் அவருக்குப் பொலோனியம்-210 நஞ்சூட்டப்பட்டிருப்பதே என்பதை அவ்வாய்வுகள் முதலில் உறுதிப்படுத்தின.

## இறுதி ஊர்வலம்

அவரது சவப்பெட்டியில் பாலஸ்தீனிய கொடி போர்வையாக சூழப்பட்டு 11 நவம்பர் 2004 இல் பிரெஞ்சில் ஒரு சிறிய விழா நடைபெற்றது. ஒரு இராணுவ இசைக்குழு, பிரஞ்சு மற்றும் பாலஸ்தீன தேசிய கீதங்களை வாசித்தனர். பிரஞ்சு ஜனாதிபதி ஜோக் சிராக் அவரை, 'தைரியத்தின் மனிதன் எனப் பாராட்டினார். அடுத்த நாள், அரபாத்தின் உடல் மாநிலங்களில் உள்ள பிரதம மந்திரிகள் மற்றும் வெளியுறவு மந்திரிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டது. பின் பிரஞ்சு விமானப்படையின் விமானம் மூலம் விமானத்தில் பாரிஸ் இருந்து ஜெருசலேமுக்கு பறந்தது. ரமலாவில் அரபாத்தை ஒரு 'தற்காலிக' கல்லறையில், 2004இல் புதைத்தனர்.

இஸ்ரேல் அரசு ஜெருசலேமில் அரபாத்தை புதைக்க மறுத்துவிட்டது. மேலும், இஸ்ரேலிய அமைச்சர் டொமி, "ஜெருசலேம் யூத அரசர்களின் புதையிடம், அரபு பயங்கரவாதிகளின் புதையிடம் இல்லை" என்று கூறினார்.

## பலஸ்தீன மக்களின் 'தந்தை'

பலஸ்தீன மக்கள் தம் 'தந்தை' என்று மதித்துப் போற்றும் பலஸ்தீனத்தின் மாபெரும் தலைவன் யசீர் அரபாத் 11.11.2004 அன்று காலையில் தனது 75 ஆவது அகவையில் பிரான்ஸ் நாட்டு மருத்துவமனையில் உயிர் நீத்தது பலஸ்தீன மக்களுக்கு மட்டுமல்ல விடுதலை வேட்கையுடைய அனைவருக்கும் ஓர் பேரிழப்பாகும். 1929 இல் எகிப்தில் கெய்ரோ நகரில் பலஸ்தீன பெற்றோருக்கு மகனாக தோன்றிய இவர் 1933-49 வரை ஜெருசலேத்தில் தனது மாமனுடன் வாழ்ந்து 1949 இல் குடியியல் பொறியியலாளராக பட்டம் பெற்றார். 1956இல் எகிப்திய இராணுவத்தில் பணியாற்றிய இவர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை (பி.எல்.ஓ.) அவ்வாண்டே உருவாக்கினார். பி.எல்.ஓ. அமைப்பை வழிநடத்தி இவர் அந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று 1971 இல் பலஸ்தீன விடுதலை அமைப்பை ஜோர்தான் புறந்தள்ளியதால் லெபனானில் இவருடைய பணி அமைந்திருந்தது. 1974 இல் ஐ.நா. மன்றத்தில் ஒரு கையில் அமைதியின் சின்னமான ஒலிவ் இலையையும் மற்றைய கையில் துப்பாக்கியையும் ஏந்திய நிலையில் ஐ.நா. மன்றத்தில் இவர் நிகழ்த்திய முதல் உரை வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியாகும். 1982இல் லெபனான் பெய்ரூட்டில் இருந்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேல் தாக்கியதன் விளைவாக அவர் துனிசியாவுக்குச் சென்றார். 1988இல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பு என்றுகூறி இஸ்ரேல் தடைசெய்தது. பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு பல நாடுகளில் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தது. இந்நிலையிலும் தன் தாயகத்தை மீட்க யசீர் அரபாத் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவருடைய வீரம் செறிந்த வரலாறுக்கு சான்று பகரும். தம்மை அழிக்கும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு நல்குவதை எதிர்த்து வளைகுடா மோதலின்போது, இவர் சதாம் குசைனுக்கு தார்மீக ஆதரவு இராஜதந்திர அடிப்படையில் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1993இல் நோர்வேயின் தலைநகராகிய ஒஸ்லோவில் இஸ்ரேல்-பலஸ்தீன போரை முடிவிற்குக்கொண்டுவர அமைதி ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த அமைதி ஒப்பந்தத்தை நிறைவேற்றியதற்காக இவருக்கும் அன்றைய இஸ்ரேல் பிரதமர் ராபினுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை எதிர்த்து இஸ்ரேலின் அமைச்சரை யூதர்கள் சுட்டது இங்கு நினைவுகொள்ளத்தக்கது. இவை அனைத்தையும் கடந்த நிலையில் அமைதிக்காக பாடுபட்டதற்காக அரபாத்திற்கும் இஸ்ரேல் பிரதமர் ராபினுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவரின் வாழ்வின் உச்சக் கட்டமாக 1996 இல் நடைபெற்ற தேர்தலில் பலஸ்தீன மக்கள் இவரை தம் தலைவராக தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை இவர் கையில் ஒப்படைத்தனர். இவ்விதம் வாழ்நாள் முழுவதும் பலஸ்தீன மண்ணை மீட்பதற்கு தம் உயிரை துச்சமென மதித்துப் போராடிய யசீர் அரபாத்தின் இறுதிக்கால வாழ்வு துன்பம் தோய்ந்ததாகவே விளங்கியது. மூன்று ஆண்டுகளாக யசீர் அரபாத் ரம்லாவிலுள்ள மாளிகையில் இருந்து வெளியே வரமுடியாதபடி வீட்டுச் சிறையிலே வைத்து அவரை இஸ்ரேலியர் துன்புறுத்தினர்.

அரபாத் போராடிய தேசத்தின் விதி

"I give you the end of golden string;<br>
Only wind it into a ball,<br>
It will lead you in at Heaven's gate,<br>
Built in Jerusalem's wall".<br>
William Blake (Jerusalem 1820)

"உனக்கு தங்க இழையின் அந்தத்தை தருகிறேன்; அதனை பந்தாக மாத்திரம் சுற்றிக்கொள், அது உன்னை ஜெரூசலேம் மதிலில் எழுப்பப்பட்ட சுவர்க்கத்தின் வாயிலுக்கு இட்டுச் செல்லும்."

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் ப்ளேக் (கவிதை: 'ஜெருசலம் 1820')

ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீன அரசு அங்கத்துவம்கோரும் விண்ணப்பத்தை பாலஸ்தீன அரசின் தலைவர் என்ற வகையிலும், பாலஸ்தீன விடுதலை அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் தலைவர் என்ற வகையிலும் மஹ்மூத் அப்பாஸ் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு 2011 ஆண்டு சமர்ப்பித்திருந்தார்.

அந்த விண்ணப்பத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழுக் கூட்டத்தில் 29.11.1947 அன்று கொண்டுவரப்பட்ட 181 ஆவது தீர்மானத்தின் அடிப்படையிலும், அதன் பின்னர் 15.11.1988 அன்று பாலஸ்தீனம் மேற்கொண்ட பாலஸ்தீன தனிநாட்டுப் பிரகடனத்தை, 15.12.1988 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தில் 43/177 இலக்க தீர்மானத்தின்மூலம் ஏற்றுக்கொண்டதன் பிரகாரமும் அந்த விண்ணப்பத்தை அப்பாஸ் சமர்ப்பித்திருந்தார். அந்த விண்ணப்பத்தில் அவர் இரு நாட்டு தீர்வுமூலம் சமாதானமாக இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினைக்கான தீர்வு காணவிழையும் தனது உறுதியையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த விண்ணப்பமே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் குழுக் கூட்டத்தில் 138க்கும் அதிகமான நாடுகள் பாலஸ்தீனத்தை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவமற்ற அவதானிப்பவர் நாடாக (Non- member observer state) தரமுயர்த்தியிருந்தது. பாலஸ்தீனத்தின் ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமைகோரும் விண்ணப்பம் அம்முறையும் புதுப்பிக்கப்பட்டது. ஆனால் முழு உறுப்புரிமைக்கான விண்ணப்பமாக 2011இல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையினால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கையை 2012இல் இம்முறை வழங்கப்பட்ட அந்தஸ்து தொடர்பான வரைபுத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனம் இஸ்ரேல பிரிவினை தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டு (29, நவம்பர், 1948) சரியாக அறுபத்தைந்து வருடங்களின் பின்னர் பாலஸ்தீனம் மீதான் அங்கத்துவமற்ற அவதானிப்பவர் நாடு என்ற தீர்மானம் நிறைவேறியிருந்தது. பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கு 1974ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டது. அப்போது யசீர் அரபாத் பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவராக இருந்தார், அங்கு அவர் முழங்கினார். "உலகப் புகழ்பெற்ற இன்றைய நாள், ஒரு கையில் ஒலிவ் கிளையை தாங்கிக் கொண்டு மறுகையில் சுதந்திரப் போராளியின் துப்பாக்கியைத் தாங்கி வந்துள்ளேன். நான் மீண்டும் சொல்கிறேன் எனது கையிலிருந்து ஒலிவ் கிளையை விழச்செய்துவிடாதீர்கள். (Today I come bearing an olive branch in one hand, and the freedom fighter's gun in the other. Do not let the olive branch fall from my hand. I repeat, do not let the olive branch fall from my hand.) இந்த வார்த்தைகளை யசீரின் வாய்க்குள் போட்டவர் பாலஸ்தீன தேசியக் கவிஞன் மஹ்மூத் தர்வீஸ். இன்று இருவரும் உயிருடன் இல்லை, அவர்களின் கனவு நனவாக கால்கோள் இடப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும் நாட்களும் வெகுதூரத்தில்".

இந்த தீர்மானம்மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் இரு நாட்டுப் பிரிவினை திட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் 29.11.1947இல் மேற்கொள்ளப்பட்ட பொழுது பாலஸ்தீனியர்கள் அதனை எதிர்த்தனர். அவர்கள் இஸ்ரேல் உருவாகுவதை எதிர்த்தனர். தங்களின் நாடு பிடுங்கப்பட்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பொழுது மறுத்த அந்த இரு நாட்டு கொள்கையை மீண்டும் 65 வருடங்களின் பின்னர் அரபியர் அங்கீகரித்துள்ளனரா என்ற கேள்வியும் இங்கு எழாமலில்லை.

ஐ.நா அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரம் வழங்கப்பட்ட போப்பாண்டவரின் அதிகாரத்திற்குட்பட்ட வத்திக்கான் வரிசையில் அடுத்ததாக பாலஸ்தீனம் சேர்ந்துகொள்கிறது. ஆனாலும் இந்த பிரகடனத்தில் உள்ள அனுகூலங்களை பெற்றுக்கொள்வது

# புத்தாண்டுப் பலன்கள் 2014

## இப்படி இருக்கிறது

## பொதுப்பலன்

எப்போதும் ஆங்கிலப் புதுவருடம் ஜனவரி 1ஆம் திகதி கன்னியா லக்னத்தில் உதயமாகும். நட்சத்திரம், கிழமை, கிரக நிலைகள் மட்டும் மாறுபடும். 2014ஆம் ஆண்டின் கூட்டு எண்- 7. இது கேதுவின் எண்- மூல நட்சத்திரத்தில் பிறப்பதால், அதுவும் கேதுவின் நட்சத்திரம்- வருடம் பிறப்பது கேது திசை இருப்பில. எல்லாம் கேதுமயம் என்பதால், இந்த 2014 விநாயகரின் அருள்கடாட்சத்தோடு பிறக்கிறது. அசுவினி, மகம், மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் ஜாதகரீதியாக நடப்பு கேது தசை, கேது புத்தி நடப்பவர்களுக்கும் 2014 புதுவருடம் இதமான வருடமாக இனிய வருடமாகத் திகழும்.

1-1-2014 என திகதி, மாதம், வருடம் எல்லாவற்றையும் கூட்டினால் 9 வரும். இது செவ்வாயின் எண். புதுவருடம் கன்னியா லக்கினத்தில் பிறக்கிறது. லக்கினத்தில் செவ்வாய் இருக்கிறார். செவ்வாயின் ராசியான மேஷத்தில் தசாநாதன் கேது வருட எண் நாயகன் இருக்கிறார். அந்தக் கேதுவையும் செவ்வாய் 8ஆம் பார்வை பார்க்கிறார்.

2014 தனுசு ராசியில் பிறக்கிறது. அதன் அதிபதி குரு ராசிக்கு 7இல் லக்கினத்துக்கு 10இல் இருக்கிறார். ராசியையும் பார்க்கிறார் லக்கினாதிபதி புதனையும் பார்க்கிறார்.

ஆகவே மிதுன ராசி- மிதுன லக்னம், கன்னி ராசி- கன்னி லக்னம், தனுசு ராசி- தனுசு லக்கினம் ஆகியவற்றில் பிறந்தோருக்கெல்லாம் 2014 மிகச் சிறந்த வருடமாகவும் யோகமான வருடமாகவும் அமையும். அவரவர் ஜாதகத்தில் என்ன தசாபுத்திகள் நடந்தாலும் சரி - எந்த ராசி, லக்கினத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் சரி- மேலே குறிப்பிட்ட நட்சத்திரத்திலும் ராசி- லக்கினத்திலும் பிறந்தவர்களுக்கு 2014 அற்புதமான வருடமாகவும் அதிர்ஷ்டம் நிறைந்த வருடமாகவும் அமையும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

### மேஷம்

மனோநிலையை நொடிப் பொழுதில் புரிந்துகொள்ளும் அசாத்திய ஆற்றல் பெற்றவர்களே! நீங்கள் துவண்டு வருவோருக்கு தோள்கொடுக்கும் சுமை தாங்கிகளே! இந்த புத்தாண்டு பிறப்பின்போது புதன் உங்களின் சாதகமான வீடுகளில் செல்வதால் நீங்கள் சொல்லும் வார்த்தையை எல்லோரும் தட்டாமல் ஏற்றுக்கொள்வார்கள். வெளிநாட்டு வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்புவரும். இதுவரை கல்வியில் பின் தங்கியிருந்த பிள்ளைகள் இனி நன்றாகப் படிப்பார்கள். உங்கள் மகனுக்கு அதிக சம்பளத்துடன் புது வேலை கிடைக்கும்.

உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானமான 9ம் வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் பழைய பிரச்சினைகளுக்கு புதிய கோணத்தில் தீர்வு காண்பீர்கள். இதுவரை தடைப்பட்டிருந்த காரியங்கள் இனி அதிவேகமாக முடியும்.

உங்களின் பரம்பரைச் சொத்து நியாயமான முறையில் உங்களுக்கு வந்துசேரும். மேலும், தந்தைவழி உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். வருடப்பிறப்பின் போது உங்கள் ராசிநாதனான செவ்வாய் 6ம் வீட்டில் பலம்பெற்று அமர்ந்திருப்பதால் மனஉளைச்சல்கள் முற்றிலும் நீங்கும். நீங்கள் பேசும் பேச்சில் முதிர்ச்சி தெரியும். பாதிப்பணம் தந்து முடிக்கப்படாமலிருந்த சொத்தை மீதிப்பணம் தந்து பத்திரப் பதிவுசெய்வீர்கள். உங்களின் உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் நிற்பதால் புதிய முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு பிறகு கால தாமதமாக தள்ளிப்போய் முடியும். கடுமையான பணிச்சுமை இருக்கும். ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 4ம் வீட்டிலேயே அமர்வதால் எப்படியாவது இழுபறியாக இருந்த காரியங்களெல்லாம் முடிவடையும். உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகரிக்கும்.

4.2.2014 முதல் 24.3.2014 வரை மற்றும் 16.7.2014 முதல் 14.10.2014 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாய் பலவீனமாவதால் ஆரோக்கிய குறைவு, சிறுசிறு விபத்துகள், உடன் பிறந்தவர்கள் மற்றும் உறவினர்களுடன் மனக்கசப்புகள் மற்றும் ஏமாற்றங்கள் வந்துநீங்கும். 20.6.2014 வரை உங்கள் ராசிக்குள்ளேயே கேது பகவானும், ராசிக்கு 7ம் வீட்டில் ராகுவும் நிற்பதால் தலைச்சுற்றல், தூக்கமின்மை, செரிமானக் கோளாறு, மனஇறுக்கம் வந்துசெல்லும். குடும்பத்தில் சலப்புகள் வந்துநீங்கும்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை உங்கள் ராசியை விட்டு கேது விலகி 12ம் வீட்டிலும், ராகு 6ம் வீட்டிலும் அமர்வதால் பெரிய நோய் இருப்பதைப் போன்ற மனோபயத்திலிருந்து வெளியே வருவீர்கள். எதையோ இழந்ததைப்போல் முகவாட்டத்துடன் காணப்பட்டீர்களே! இனி முகம் மலரும். மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். அவரின் ஆரோக்கியம் சீராகும். திருமணத் தடைகள் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

இந்தாண்டு முழுக்க சனி 7ல் நின்று கண்டகச் சனியாகவும், வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் 8ல் அமர்ந்து அஷ்டமத்துச் சனியாகவும் வருவதால் கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம், ஈகோ பிரச்சினையால் பிரிவுகளும் வரக்கூடும்.

**வியாபாரிகளே!** மற்றவர்களின் பேச்சை கேட்டு அனுபவமில்லாத தொழிலில் முதலீடு செய்து சிக்கிக் கொள்ளாதீர்கள். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொண்டு செயற்படத் தொடங்குவீர்கள்.

**உத்தியோகத்தர்களே!** கடுமையாக உழைக்கவேண்டிய காலகட்டம் இது. நேரம் காலம் பார்க்காமல் உழைத்தால் வெற்றியை உறுதி செய்யலாம்.

கன்னிப்பெண்களே! தேர்வுகளில் வெற்றிபெறுவீர்கள். புதிய நண்பர்களின் நட்பால் உற்சாகம் உண்டு. காதல் எண்ணத்தை தள்ளிவைத்துவிட்டு உயர்கல்வியில் கூடுதல் கவனம்செலுத்துங்கள். கல்யாணம் தாமதமாகி முடியும். பெற்றோரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**மாணவர்களே!** விரும்பிய பாடப்பிரிவில் கூடுதல் செலவுசெய்தும், சிலரின் சிபாரிசின் பேரிலும் சேரவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**அரசியல்வாதிகளே!** தலைமையின் கவனத்தைப் பெறுவீர்கள். தலைமையிடம் சிலர் உங்களைப் பற்றி புகார் பட்டியல் வாசிப்பார்கள்.

இந்த 2014ஆம் ஆண்டு போராட்டமாக இருந்தாலும் உங்கள் புத்திசாலித்தனத்தால் வெற்றிபெறுவீர்கள்.

### ரிஷபம்

மதியாதார் முற்றம் மிதிக்காமல் மனதில் பட்டதை பளிச்சென்று பேசுபவர்களே! உண்மையை உயிர்க்காற்றாய் சுவாசிப்பவர்களே! உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் சனியும் ராகுவும் வலுவாக அமர்ந்திருக்கும்போது இந்த புத்தாண்டு பிறப்பதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சோம்பல் விலகும். புத்துணர்ச்சியும் துணிச்சலும் பெருகும். குழந்தை பாக்கியம் கிட்டும். எட்டாவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் திடீர் பயணங்கள் அதிகரிக்கும்.

சிறுசிறு விபத்துகளும் வந்துபோகும். பயப்படாதீர்கள். வீண் வறட்டு கௌரவத்திற்காக சேமிப்புகளைக் கரைத்துக் கொண்டிருக்காதீர்கள்.

வெகுநாட்களாக அவருக்கு இருந்த நோய் விலகும். நீங்கள் காத்திருந்த அயல்நாடு செல்லவேண்டிய விசா கிடைக்கும். சிலருக்கு புதுவேலையும் கிடைக்கும். ஆனால், வருடத்தின் இறுதியில் 18.12.2014 முதல் சனி 7ல் அமர்ந்து கண்டகச் சனியாக வருவதால் கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. வாழ்க்கைத்துணைக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள், முதுகு மற்றும் மூட்டுவலி போன்றவை வந்து நீங்கும்.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால் எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் பணவரவு உண்டு. திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு 3ம் வீட்டிலேயே அமர்வதால் ஒரே நேரத்தில் பல்வேறு வேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டிவரும். இளைய சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். 20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 12ல் கேது தொடர்வதால் நீண்டநாட்களாக போக நினைத்த குலதெய்வக் கோயிலுக்கு சென்றுவருவீர்கள். ராகுவும் ஜூன் 20ஆம் திகதி வரை 6ம் வீட்டில் நிற்பதால் மறைமுக எதிரிகளால் ஆதாயமடைவீர்கள்.

சொந்தபந்தங்கள் மதிக்கும்படி நடந்துகொள்வீர்கள். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். 21.6.2014 முதல் வருடம் முடியும்வரை கேது இலாப வீட்டில் அமர்வதால் உங்களின் செல்வாக்கு கூடும். கௌரவப் பதவிகள் தேடிவரும். ஆனால், ராகு 5ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும். மகளின் திருமணத்திற்காக வெளியில் கடன் வாங்கவேண்டி வரும்.

**வியாபாரிகளே!** நஷ்டங்கள் குறைந்து இலாபம் அதிகரிக்கும். சந்தை நிலவரத்தை அறிந்துவைத்திருப்பீர்கள். நூதனமான முறையில் வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**உத்தியோகத்தர்களே!** உங்களின் நிர்வாகத் திறமை கூடும். இதுவரை பாரபட்சமாக நடந்துகொண்ட மேலதிகாரி இனி சரியானபடி நடந்துகொள்வார்.

**கன்னிப் பெண்களே!** சாதுரியமாகப் பேசி காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். கல்வியில் கவனத்தோடு இருப்பீர்கள். காதல் இனிக்கும்.ஆனாலும், பெற்றோரின் சொல்படி கேட்பீர்கள். உங்களின் ரசனைக்கேற்ப நல்ல வரன் அமையும். பெற்றோரை தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.

**மாணவர்களே!** புத்தக அறிவைவிட பொதுஅறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**அரசியல்வாதிகளே!** சக போட்டிக் கட்சியினரைக்கூட அனுசரித்துப் போகும் மனப்பக்குவம் பெறுவீர்கள். அவர்களின் தந்திரமான காய்நகர்த்துதலை புரிந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள்.

**கலைத்துறையினரே!** இத்தனை நாள் நீங்கள் உழைத்த உழைப்பிற்கு நல்ல பலன் கிடைக்கும். மூத்த கலைஞர்களோடு நீங்கள் கொண்டிருந்த நல்ல நட்புறவால் சாதிப்பீர்கள்.

இந்த 2014ம் ஆண்டு உங்களின் விவேகத்தை அதிகப்படுத்தி செயலில் விரைவைக் கூட்டி வெற்றிக்கனியை தருவதாக அமையும்.

### மிதுனம்

விழுவதெல்லாம் எழுவதற்கே என்று நம்பிக்கையுடன் போராடி முதலிடத்தை பிடிப்பவர்களே! பிறரை மகிழ்வித்து மகிழ்பவர்களே! உங்கள் ராசிக்கு 7ம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் ஒட்டுமொத்த திறமைகளையும் வெளிப்படுத்த வெறியோடு உழைப்பீர்கள். மனதில் உள்ளதை மறைக்காமல் பேசுவதால் பல நண்பர்களை இழந்திருப்பீர்கள். ஆனால், இப்போது அனைவரும் உங்களை புரிந்துகொண்டு வருவார்கள். உங்களின் சொந்த உழைப்பினால் . நல்ல வாய்ப்புகளை உருவாக்குவீர்கள். சில இடங்களில் வளைந்து கொடுத்தும் சில நேரங்களில் மௌனமாக இருந்தும் சாதித்துக் காட்டுவீர்கள்.

அழகும் இளமையும்கூடும். திருமணம் தள்ளிப்போனவர்களுக்கு விரைவில் திருமணம் கூடிவரும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். நீண்ட நெடுநாட்களாக தள்ளிப்போன விஷயங்கள் முடியும். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உங்களின் ராசிநாதனான புதன் 7ம் வீட்டில் அமர்ந்திருக்கும்போது இந்தாண்டு பிறப்பதால் நிறைய புதிய யோசனைகள் பிறக்கும். நீண்டநாட்களாக நிலவிவந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பீர்கள். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

12.6.2014 வரை குரு உங்கள் ராசிக்குள்ளேயே அமர்ந்து ஜென்ம குருவாக இருப்பதால் நிற்கநேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பீர்கள். கூடுதல் பதவியோடு பணிச்சுமையும் இருக்கும். குடும்பத்திற்குள் சண்டை சச்சரவு வந்துவிலகும். எனவே, மூன்றாம் நபரின் தலையீட்டை தவிர்க்கப் பாருங்கள். வாழ்க்கையின்மீது திடீரென்று வெறுப்புணர்வு வந்துபோகும். அதனால், அவ்வப்போது வெளியூர்களுக்கு குடும்பத்தோடு சென்றுவாருங்கள்.

ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை உங்கள் ராசியைவிட்டு குரு விலகி 2ம் வீட்டில் தொடர்வதால் பணவரவிற்கு பஞ்சமிருக்காது. பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்றுசேருவீர்கள். கூடாதபழக்கங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு இலாப வீட்டில் கேது இருப்பதால் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் எதிர்நீச்சல் போட்டு சமாளிப்பீர்கள். இதனால் பொறுமையோடு இருக்கும் மனப்பக்குவம் கிடைக்கும்.

21.6.2014 முதல் வருடம் முடியும்வரை உங்கள் ராசிக்கு ராகு 4ஆம் வீட்டிலும், கேது 10லும் அமர்வதால் எடுத்த வேலைகள் எதுவும் சட்டென்று முடியாது. உத்தியோகத்தில் நெருக்கடிகள், இடமாற்றங்கள் வந்து செல்லும்.

இந்தாண்டு முழுக்க சனி 5இல் நிற்பதால் மனதில் இடதா, வலதா என்கிற குழப்பம் நிலவியபடி இருக்கும். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று உங்களால் எந்த முடிவையும் எடுக்க முடியாது.

18.12.2014 முதல் 6ம் வீட்டில் அமர்வதால் உங்களுக்கு ஆதரவு கூடும். இதுவரை உங்களை எதிர்த்தே பேசியவர்கள் அமைதியாக இருப்பார்கள்.

**வியாபாரிகளே!** தொட்டது துலங்காமல் நஷ்டப்பட்டீர்களே! பாக்கியை வசூலிப்பதே பெரிய போராட்டமாக இருந்ததே! இந்த நிலைமையெல்லாம் மாறும். பற்று வரவு கணிசமாக உயரும்.

**உத்தியோகத்தர்களே!** ஜூன் 21ஆம் திகதி முதல் கேது 10ல் அமர்வதால் வேலை விஷயமாக அலைச்சல்கள் இருக்கும். மேலதிகாரியின் குறைகளை மனதிற்குள்ளேயே வைத்துக்கொள்ளுங்கள்.

**கன்னிப் பெண்களே!** சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். உங்களின் பலம், பலவீனத்தை உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு செயற்படுவது நல்லது. வேற்றுமொழி பேசுபவர்கள் நண்பர்களாவார்கள்.

**மாணவர்களே!** வகுப்பறை படிப்பைத் தாண்டி மற்ற திறமைகளையும் வெளிப்படுத்துங்கள். சோம்பலை உதறி அதிகாலையில் எழுந்து படியுங்கள்.

**அரசியல்வாதிகளே!** மக்களின் மத்தியில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சகாக்கள் சிலர் உங்கள்மீது அதிருப்தியடைவார்கள்.

இந்த 2014ம் ஆண்டின் முற்பகுதி கொஞ்சம் உங்களின் பொறுமையை சோதித்தாலும் பிற்பகுதியில் சாதிப்பீர்கள்.

### கடகம்

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களே! உங்களின் யோகாதி பதியான செவ்வாய் ராசிக்கு 3ம் வீட்டில் அமர்ந்திருக்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி எல்லாம் உண்டாகும். தைரியமாகவும், தன்னிச்சையாகவும் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு, மனை வாங்குவீர்கள். நிலுவையிலிருந்த வழக்கில் திருப்பம் ஏற்படும். பழைய கடனைத் தீர்க்க வழி பிறக்கும். பிள்ளைகளால் உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் சந்திரன், சூரியன் அமர்ந்திருக்கும்போது இந்த ஆண்டு பிறப்பதால் சின்னச்சின்ன வாய்ப்புகள்தானே பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்காதீர்கள்.

சரியாகப் பயன்படுத்தி முன்னேறப் பாருங்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்கிற பழமொழியை நினைவில் கொள்ளுங்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். ராசிக்கு 6ம் வீட்டில் புதன் அமர்ந்திருக்கும்போது இந்தாண்டு பிறப்பதால் நெருங்கிய சுற்றத்தினர் மற்றும் பால்ய நண்பர்களுடன் மெல்லிய விரோதப்போக்கு வரக்கூடும்.

ஜூன் 12ஆம் திகதி வரை குரு உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் நிற்பதால் வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் இருக்கும். இதனால் ஒன்றுக்கு இரண்டாக செலவுகளும் கூடும். எனவே, கொஞ்சம் சிக்கனமாக இருங்கள்.

ஆனால், 13.6.2014 முதல் வருடம் முடியும்வரை குரு உங்கள் ராசிக்குள் நுழைந்து ஜென்ம குருவாக அமர்வதால் ஆரோக்கியம் பாதிக்கும். வேலைச்சுமையால் டென்ஷன் அதிகரிக்கும். ஏதோ தனக்கு பெரிய நோய் இருப்பதைப்போல மனப்பிரமை வந்துநீங்கும்.

20.6.2014 வரை உங்கள் ராசிக்கு 10இல் கேதுவும், 4ம் வீட்டில் ராகுவும் நீடிப்பதால் அடுக்கடுக்காக நிறைய வேலைகள் வந்துகொண்டேயிருக்கும். பணிச்சுமையால் திணறுவீர்கள். உங்களில் சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றங்கள், சம்பளப் பிரச்சினை, மறைமுக நெருக்கடிகள் வந்துநீங்கும். ஜூன் 21ஆம் திகதி முதல் வருடம் முடியும்வரை ராசிக்கு 9ம் வீட்டில் கேது தொடர்வதால் பரம்பரைச் சொத்து விஷயங்கள் சம்பந்தமாக சில பிரச்சினைகள் தலைதூக்கும். தந்தையாருடன் மனஸ்தாபங்கள் வரக்கூடும்.

'ஆனால், ராகு 3ம் வீட்டில் அமர்வதால் பயமும் படபடப்பும் வந்துநீங்கும். மனோபலம் அதிகரிக்கும். தள்ளிப்போன விஷயங்கள் முடியும். இளைய சகோதரவகையில் இருந்த பிணக்குகள் நீங்கும்.

**வியாபாரிகளே!** இந்தாண்டு கொஞ்சம் வியாபாரத்தில் அவ்வப்போது இலாபமும் நஷ்டமும் மாறிமாறித்தான் இருக்கும். ஜூன் மாதம் முதல் ஜென்ம குரு தொடங்குவதால் புதிய நட்புகளோடு திடீரென்று அறிமுகமாகும் நபரை நம்பி முதலீடுகள் செய்யவேண்டாம்.

**உத்தியோகத்தர்களே!** அலுவலகத்தில் உங்களின் முன்னேற்றம் சம்பந்தமான விஷயங்கள் யாவும் இழுபறியாகத்தான் இருக்கும். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பாருங்கள். நீங்கள் பொறுப்பாக நடந்துகொண்டாலும் அதிகாரிகள் குறைகூறத்தான் செய்வார்கள்.

**கன்னிப் பெண்களே!** காதல் விவகாரத்தை தள்ளி வையுங்கள். பெற்றோருக்குத் தெரியாமல் அநாவசியமாக வேறெந்த விஷயங்களிலும் ஈடுபடவேண்டாம். போராடி உயர்கல்வியில் வெற்றிபெறுவீர்கள். திருமண முயற்சிகள் தாமதமாகும்.

**மாணவர்களே!** அதிகாலையில் எழுந்து படிக்க பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள். தொடக்கத்திலிருந்தே அன்றைய பாடங்களை அன்றே படியுங்கள்.

**அரசியல்வாதிகளே!** தலைமையின் கருத்துக்கு எதிரான கருத்தை சக தொண்டர்களிடம் கூட பகிர்ந்துகொள்ள வேண்டாம். தலைமையின் ஆணையை நீங்கள் மீறுவது போன்ற தோற்றத்தை உருவாக்காதீர்கள்.

**கலைத்துறையினரே!** கிசுகிசுத் தொல்லைகள் வரும். உங்களின் படைப்புகளை இரகசியமாக வையுங்கள். எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

இந்த 2014ம் ஆண்டு சின்னச் சின்ன சுகவீனங்கள் இருந்தாலும் பெரிய சாதனைகளை படைக்கும் சக்தியை தருவதாக அமையும்.


(தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## யார் புத்திசாலி?



ஒரு முனிவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தனர். இருவரும் பலசாலிகள். புத்திசாலிகள். ஒருமுறை தங்களில் யார் புத்திசாலி என்பதில் இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. விஷயம் முனிவரிடம் வந்தது. அவர் சீடர்களிடம், சீடர்களே! இன்று ஏனோ எனக்கு அதிகமாகப் பசிக்கிறது. சமையல் முடியத் தாமதமாகும். அதோ! இரண்டு பேரும் அதோ அந்த மரத்தில் இருக்கும் பழங்களைப் பறித்து வாருங்கள், என்றார்.

குருவிடம் மிகவும் பணிவாக நடந்துகொள்ளும் அந்த சீடர்கள் மரத்தை நோக்கி ஓடினர். மரத்தை நெருங்க முடியாமல், முட்செடிகள் சுற்றி நின்றன. முதல் சீடன் சற்று பின்னோக்கி வந்தான். பின்னர் முன்னோக்கி வேகமாக ஓடினான். ஒரே தாண்டில் மரத்தை தொட்டான். பழங்களை முடிந்தளவுக்கு பறித்தான். மீண்டும் ஒரே தாவில் குருவின் முன்னால் வந்து நின்று, பார்த்தீர்களா! கணநேரத்தில் கொண்டு வந்துவிட்டேன், என்றான் பெருமையோடு.

இரண்டாமவன் ஒரு அரிவாளை எடுத்துவந்தான். முட்செடிகளை வெட்டி ஒரு பாதை அமைத்தான். அப்போது சில வழிப்போக்கர்கள் அலுப்போடு வந்தனர். அவர்கள் வெட்டப்பட்ட பாதை வழியே சென்று, பழங்களைப் பறித்து சாப்பிட்டனர். மரத்தடியில் படுத்து இளைப்பாறினர். சிஷ்யனும் தேவையான அளவு பழங்களைப் பறித்து வந்தான்.

இப்போது முனிவர் முதல் சீடனிடம், இரண்டாவது சீடன்தான் அதிபுத்திசாலி என்றார். முதலாமவன் கோபப்பட்டான். சுவாமி! இன்னும் போட்டியே வைக்கவில்லை. அதற்குள் அவனை எப்படி சிறந்தவன் எனச் சொன்னீர்கள்? என்றான். முனிவர் அவனிடம், சிஷ்யா! நான் பழம் பறிக்கச்சொன்னதே ஒரு வகை போட்டிதான்! நீ மரத்தருகே தாவிக்குதித்து, பழத்தைப் பறித்தது சுயநலத்தையே காட்டுகிறது. ஏனெனில், அதை எனக்கு மட்டுமே தந்தாய். நான் மட்டுமே பலன் அடைந்தேன்.

இரண்டாம் சீடனோ பாதையைச் சீரமைத்ததால், எனக்கு மட்டுமின்றி ஊராருக்கும் இன்னும் பல நாட்கள் பழங்கள் கிடைக்கும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கச் செய்பவனே அதிபுத்திசாலி. என்றான். இங்கே செயல் ஒன்றுதான். ஆனால், செய்த விதத்தில்தான் வித்தியாசம்.

## வாரம் ஒரு திருக்குறள்

**கள்ளுண்ணாமை**

**கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து**
**மெய்யறியாமை கொளல்.**



விலைப்பொருள் கொடுத்துக் கள்ளுண்டு தன் உடம்பைத் தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று அறியாத அறியாமை உடையதாகும்.

குறள்:925

## கலண்டர்





மனிதன் காலத்தை அளவிட எண்ணினான். முதலில் பயிர்த்தொழில் செய்யும் காலங்களைக் கவனித்தான். நடவு செய்வது முதல் அறுவடை செய்வது வரையிலான காலத்தைக் கணக்கிட்டான். இது முதல் முயற்சி. தொடர்ந்து எகிப்தியர்கள் ஆண்டுக்கு ஒருமுறை நைல் நதியில் வெள்ளம்வருவதை அறிந்து வெள்ளத்தைக் காலம் அளக்கும் காரணியாகக் கொண்டார்கள்.

ஒரு மதகுரு ஒருமுறை வெள்ளம் வருவதற்கு இடைப்பட்ட காலத்தில் 12 முறை சந்திரன் தோன்றி மறைவதைக் கவனித்துவிட்டார். இது '12 மூன்ஸ்' என்று அழைக்கப்பட்டு பின்னர் மன்த்ஸ் என்றாகி உள்ளது. பின்னர் சில குறிப்பிட்ட நட்சத்திரங்கள் தோன்றி மறைவதை அடிப்படையாகக் கொண்டு 365 நாள்கள் எனப்பிரித்தனர். எகிப்தியர்கள் தான் கலண்டர் முறைக்கு வித்திட்டவர்கள் எனலாம்.

இக்கலண்டர் முறை உரோம சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசரால் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட சிறு சிக்கல்கள் குழப்பங்களைக் களைந்து போப் கிரிகோரி என்பவர் தீர்வு கண்டுள்ளார். இன்று நம்மிடம் உள்ள கலண்டர் கிரிகோரி கலண்டர் ஆகும்.

## ரஷ்யாவில் கிறிஸ்துமஸ்

உலக நாடுகள் எல்லாவற்றிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை டிசம்பர் 25ஆம் திகதிதான் கொண்டாடுகிறார்கள். ஆனால், ரஷ்யாவில் மட்டும் கிறிஸ்துமஸ் தினம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதமே கொண்டாடப் படுகிறது. ரஷ்யாவிலுள்ள பழமைவாத கிறிஸ்தவர்கள் ஜனவர் 7ஆம் திகதி கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.




## எதிலிருக்குது?


**அக்கா அக்கா புரதச்சத்து எதிலிருக்குது?**
**பருப்பு கடலை பட்டாணியில் அது இருக்குது!**
**அக்கா அக்கா மாச்சத்து எதிலிருக்குது?**
**உருளைக்கிழங்கில் அதிகமாக அது இருக்குது!**

**அக்கா அக்கா கொழுப்புச்சத்து எதிலிருக்குது?**
**வறுத்த உணவில், மாமிசத்தில் அது இருக்குது!**
**அக்கா அக்கா நார்ச்சத்து எதிலிருக்குது?**
**காய்கறியில் பழங்களிலே அது இருக்குது!**

**அக்கா அக்கா இரும்புச்சத்து எதிலிருக்குது?**
**முருங்கைக்கீரை முருங்கைக்காயில் அது இருக்குது!**
**அக்கா! அக்கா! நன்று எனக்கு ஐயம் தீர்ந்தது!**
**சரி, சத்தான உணவை உண்டு நலமாய் வாழ்ந்திடு!**



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 15.01.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1025**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1023**


**யே.கிறிஸ்துராஜா, 6ஆம் வட்டாரம்,**
**நெடுந்தீவு மத்தி.**

பரிசுக்குரியவர்: 1023

பாராட்டுக்குரியவர்கள்

01. ஜி.யதுளன், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
02. மு.சர்மிளா, கச்சாய் வீதி, கொடிகாமம்.
03. ம.சிந்துபைரவி, அரியாலை, யாழ்ப்பாணம்.
04. அ.கவின், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
05. H.B.F.ஷீபா, கிராண்ட் பள்ளிவாசல் றோட், புத்தளம்.
07. கி.தஸ்வினி, உடப்பு, புத்தளம்.
08. ம.அபிஷா, காலி.

## பெயர்கள் எப்படி வந்தன?



**கடிகாரம் :**

கடிகை என்றால் நாழிகை என்று பொருள். நாழிகையை அளக்கும் கருவி ஆரமாக வந்தபோது கடிகாரம் என்ற சொல் தோன்றியிருக்கலாம்.




**கெஜட் :**

1566ஆம் ஆண்டு இத்தாலிய அரசாங்கத்தின் மிக முக்கியமான செய்திகளைப் பெரிய பலகையில் எழுதி வெனிஸ் நகரத்தின் முக்கியமான வீதிகளில் குறிப்பிட்ட இடங்களில் வைத்தார்கள். அதைப் பார்த்துப் படிக்கும்போது மக்களிடமிருந்து கட்டணமாக 'கெஜட்டா' என்னும் இத்தாலிய நாணயம் வசூலிக்கப்பட்டது. பின்னர்தான் அரசாங்கச் செய்திப் பத்திரிகைக்கு கெஜட் எனப் பெயர் வந்து அதுவே நிலைத்துவிட்டது.



**பண்டேஜ் :**

பண்டைக்காலத்தில் எகிப்தில் பிணங்களைப் பாதுகாத்து வைப்பதற்காகப் பிணத்தின் தலை முதல் கால்வரை போர்த்தி வைக்கும் பழக்கத்திலிருந்துதான், இன்று மருத்துவ உலகில் பழக்கத்திலிருக்கும் பண்டேஜ் முறை வந்தது.



**ஏக்கர் :**

நிலத்தின் அளவைக் குறிக்க ஏக்கர், ஏக்ரா என்று சொல்கிறோம். அந்தச் சொற்கள் வழக்குக்கு வந்த விதம் இப்படித்தானாம். யோக் என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பே ஏக்கர், ஏக்கரா என்பது. யோக் என்றால் நுகம் என்பது பொருள். நுகத்தில் கட்டிய மாட்டைக்கொண்டு விடியற்காலை முதல் இருட்டும்வரை ஓட்டக்கூடிய நில அளவிற்குத்தான் ஏக்கர் என்ற பெயர் ஏற்பட்டது.

**இதுவரை**

**உகண்டா முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் அந்தரங்கச் செயலாளரை தன் பக்கம் இழுக்கிறான் அமீன். சியம்பாவை வலையில் வீழ்த்த பயன்பட்ட அழகியை அமீன், சியம்பா முன்பாகவே சுட்டுத் தள்ளுகிறான்...**

**இனி...**

முதலைக்கறியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த அமீனுக்கு கறி ருசி திருப்தியாக இல்லை. பவ்வியமாக நின்று கொண்டிருந்த தன் உதவியாளனைப் பார்த்தான். அமீன் சாப்பிட ஆரம்பிக்கும் முன்பாக, அமீனுக்கான உணவை உண்டு பார்த்து பரிசீலிப்பது உதவியாளன்தான்.

சியம்பாவின் செயலாளரது உடல்



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி (19)**

இப்போதும் அங்கேதான் கிடந்தது. அமீன் கட்டளையிடாமல் எந்தக் காரியமும் செய்யக்கூடாது: அதனால் உடலை அங்கிருந்து அகற்றவில்லை.

இப்போது தன் உதவியாளரிடம் அமீன் கூறினான்: "அந்த உடம்பில் இருந்து இரண்டு விரல்களை வெட்டிப்போடு!"

அமீன் உண்மையாகச் சொல்கிறானா, கேலி செய்கிறானா என்று தெரியாமல் அந்த உதவியாளன் திணறினான்.

ஏதோ இரண்டு வெண்டைக்காய் முறித்துப்போடு, என்று சொல்வது போல் சர்வ சாதாரணமாக கூறிவிட்டு முதலைக் கறி யை சப்புக்கொட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

இடி அமீன் மனித மாமிசம் சாப்பிடுவான் என்பதும், மனித இரத்தம் குடிப்பதில் இன்பம் காணுவான் என்பதும் அப்போது இரகசியமாக இருந்தது.

இதனால்தான் உதவியாளனால் அமீன் கட்டளையை நம்பமுடியாதிருந்தது. "என்ன தாமதம்?" என்று அமீன் உறுமிய உறுமலில், தான் எப்போது கத்தியை எடுத்தேன் எப்படி விரலை வெட்டினேன் என்று அவனுக்கே தெரியாதளவு வேகத்தோடு செயற்பட்டான்.

கோழிக்கால் சாப்பிடும் பாவனையோடு கைவிரலை இடி அமீன் இரசித்துச் சாப்பிடுவதைக் காண அவனுக்கு வயிற்றை குமட்டியது. இடி அமீனைப் பார்க்கவே பயமாக இருந்தது.

முதலைக் கறியையும், கைவிரல்கள் இரண்டையும் சாப்பிட்டு முடித்து ஏப்பம்விட்ட இடி அமீன், தன் வயிற்றைத் தடவிக்கொண்டே, "வெளியே போய் சொல்லுவாயா?" என்றான்.

"இ...இ...இல்லை" என்று அவன் உடம்பு நடுங்கிய நடுக்கத்தைக் கண்டு உரத்துச் சிரித்த அமீன், "இனி இந்த உடலை அகற்றிவிடு!" என்றான்.

உகண்டா அதிபரானதும் நாட்டின் பல பாகங்களுக்கும் நேரடியாக விஜயம்செய்து, அங்குள்ள மக்களையும் அமீன் சந்திக்கத் தொடங்கினான்.

அமீனின் இந்த அணுகுமுறை மக்களைக் கவர்ந்தது. அதற்குமுன் இருந்த அதிபர்கள் மாளிகையில் இருந்து நிர்வாகம் நடத்தினார்கள்.

இடி அமீன் ஒரு பகுதிக்குச் செல்கிறான் என்றால், முதல் நாள் மாலையில் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்படும்.

இரவோடு இரவாக மேடை போட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு விடும் ஹெலிகெப்டரில் இடிஅமீன் வந்துசேருவான். அதற்குமுன்னரே அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் கார்களிலும், ஹெலிகொப்டர்களிலும் வந்திறங்கிவிடுவர்.

மேடையில் இருந்து கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவான். இறுதியாக மேடையில் கம்பீரமாக நின்று அமீன்பார்க்கும் தோரணையில் மொத்தக் கூட்டமும் அமைதியில் உறைந்துபோகும்.

அந்தப் பகுதிக்குரிய முக்கிய பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு உத்தரவு போட்டு விட்டு ஹெலியில் பறந்து விடுவான்.

இடி அமீன் இட்ட கட்டளையை நிறைவேற்றி முடிக்கும்வரை குறிப்பிட்ட அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் தூக்கமே வராது.

கூட்டங்களில் கலந்துகொள்ளும் அமீனின் கண்கள் அலைபாயும். அக்கண்களில் வளப்பமான அழகிகள் பட்டுவிட்டால்போதும், இருப்பே கொள்ளாது.



அமீனின் குறிப்பறிந்து உதவியாளர்கள் அருகில் செல்வார்கள், எத்தனையாவது வரிசையில் அந்த அழகி என்ற விபரத்தை காதோடு கூறிவிட்டு அமர்ந்திருப்பான்.

கூட்டம் முடிந்து அமீன் புறப்படும் போது அந்த அழகி ஹெலிகொப்டருக்குள் இருந்தாக வேண்டும்.

முரண்டுபிடிக்கும் அழகிகள் விடயத்தில் அமீனின் பலவீனம் மக்களிடையேயும் ஓரளவு தெரிந்தே இருந்தது.

அதனால் இடிஅமீனின் கண்களில் பட்டுவிடாமல் இருக்குமாறு தன் பெண் பிள்ளைகளுக்கு பெற்றவர்கள் பலர் கண்டிப்பான கட்டளையே போட்டிருந்தனர்.

"இடி அமீன் கொடூரமானவன். உகண்டாவில் சர்வாதிகாரம் தலை கால் தெரியாமல் ஆடுகிறது" என்று சர்வதேச செய்திகளில் எல்லாம் கூறப்பட்டுவந்தது.

தனது தடலாடிப் பாணியிலேயே பதிலடி கொடுக்க முடிவு செய்தான் இடி அமீன்.

கொல்லப்பட்டவர்கள், தப்பியோடியவர்கள்போக மீதியாக சிறையில் இருந்த ஒபேடேயின் ஆதரவாளர்களை பகிரங்கமாக விடுதலை செய்தான்.

விடுதலை செய்யப்படுவதற்குத் தெரிவான நாற்பது பேரும் அமீன் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

அமீனைக் கண்டதும் அத்தனைபேரும் சல்யூட் அடித்தனர்.

"இப்போது சல்யூட் அடிக்கிறீர்கள். விட்டிருந்தால் என் உடம்புக்கு புல்லட் அடித்திருப்பீர்கள்!" என்றுகூறி அமீன் சிரித்த சிரிப்பில், தாங்கள் விடுதலையாகப் போவதாகக் கூறப்பட்டது சுத்தமான பொய் என்றே அவர்கள் நினைத்தனர். அதனால் அவர்களின் முகங்களில் இருந்த உற்சாகம் வடிந்துவிட்டது.

"அடே குளிரில் நடுங்கும் கோழிக்குஞ்சுகள் போல ஏனடா நடுங்குகிறீர்கள்? இந்த அமீன் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்கு கெட்டவன்" என்று கூறிய அமீன், சட்டென்று நீங்கள் நல்லவர்களா? கெட்டவர்களா? என்றான்.

யாரும் பதில்பேசும் நிலையில் இல்லை. அதனால் அமீனே பதிலையும் கூறவேண்டியிருந்தது.

"பாதி நல்லவர்கள், மீதி கெட்டவர்கள்!" என்று இடியென நகைத்தபோதும், அருகில் நின்ற சிப்பாயிடம் அமீன் துப்பாக்கியை பெற்று அவர்களில் ஒவ்வொருவராக குறிபார்த்தபோதும், அத்தனை பேரும் தங்கள் உயிரைக் கையில் பிடித்தபடியே நின்றிருந்தனர்.

அந்த அவதியை ரசித்த இடி அமீன் அவர்களில் மூன்று பேரை ஒவ்வொருத்தராக சுட்டுப்போட்டான்.

நீள் வரிசையில் மூன்றுபேரின் இடம் வெற்றிடமானது. இரத்தம் சிந்தியபடி மூன்று பேர் சாவை அணைத்துக்கொண்டு இருந்தனர்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 554

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **15.01.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 554
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 552 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சா | 2 ர | 3 ங் | 4 கா | | 6 செ |
| 7 கு | 8 ல் | | 10 ந் | | 12 ந் |
| 13 ந் | 14 ந | 15 ன் | 16 த | 17 சு | 18 த |
| 19 த | 20 க | 21 வி | 22 ல் | | 24 மி |
| 25 ல | | 27 லை | | 29 பா | 30 ழ் |
| 31 ம் | 32 ச | 33 டா | 34 கா | 35 க | |

**இடமிருந்து வலம்**

01. நூல் அச்சிடும் நிலையம்.
07. ஓவிய உலகம் என்று அழைக்கப்படும் (சீனாவில் செனஜென் நகரில்) இடம்.
11. சரிய; ஒதுங்க.
15. மாமிசங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
19. சாமர்த்தியமின்மை; சமாளிப்பின்மை. (குழம்பியுள்ளது)
25. தாம் என்பதன் திரிபுச்சொல். (திரும்பியுள்ளது)
28. சமுத்திரக்கல்; நடந்ததைக் கண்டவர்கள். (குழம்பியுள்ளது)
32. இலங்கை புகையிரத பாதைகளில் உள்ள சந்திப்புகளில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

01. உடைப்பகட்டு; ஆடம்பரம்.
02. வீடு; தலைவன். (குழம்பியுள்ளது)
03. அனைத்துக்கும் முதல்வன் (குழம்பியுள்ளது)
05. பொய்வார்த்தை; கட்டு வார்த்தை. (குழம்பியுள்ளது)
06. தேநீரில் உள்ள இந்த உப்பு, உடம்பில் உள்ள செல்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்குமாம். ( திரும்பியுள்ளது)
20. குருட்டுத்தன்மை; அறிவின்மை. (திரும்பியுள்ளது)
28. அழகுள்ளவள்; சுந்தரி. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 552 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.சாமினி, பரந்தன், கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ப.டிலக்ஷனா, பூவரசங்குளம், வவுனியா.
02. எம்.ரெம்சி, கடற்கரை வீதி, மன்னார்.
03. சி.சவிந்தா, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
04. எம்.புவிராஜ், மாலுசந்தி, நெல்லியடி.
05. செள.கம்சா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
06. சு.கவியரசன், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
07. எம்.அயான், ஜின்னாநகர், திருகோணமலை.
08. தி.கவிதா, கோவில் வீதி, மாத்தளை.
09. அ.சுபாஸ்கரன், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.







## இளையராஜாவுக்கு வைரமுத்துவின் வேண்டுதல்

இளையராஜா விரைவில் உடல் நலம் பெற்றுவர வேண்டும் என்று கவிப்பேரரசு வைரமுத்து கங்காரு படத்தின் இசை வெளியீட்டு விழாவில் உருக்கமாகக் கூறினார்.

வி. ஹவுஸ் புரொடக்‌ஷன்ஸ் சார்பில் சுரேஷ் காமாட்சி, எஸ். ரவிச்சந்திரன் தயாரிக்கும் படம் 'கங்காரு' படத்தில் பிரபல பின்னணிப் பாடகர் ஸ்ரீனிவாஸ் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். பாடல்கள் வைரமுத்து.

'கங்காரு' பாடல்கள் வெளியீடு விஜய் டி.வி சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் நடந்தது. ஏ.ஆர்.ரகுமான் வெளியிட்டார். வைரமுத்து பெற்றுக்கொண்டார். சென்னை ஆர்.கே.வி ஸ்டுடியோவில் ஆடியோ சிடியை ஊடகங்கள் முன்னிலையில் சீமான் வெளியிட கவிப்பேரரசு வைரமுத்து பெற்றுக்கொண்டார்.

விழாவில் வைரமுத்து பேசும்போது,

"இந்த சபையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த இசை வெளியீட்டு விழாக்களுக்கெல்லாம், எங்களுக்கெல்லாம் மூலமாக இருந்தவர். தமிழ்நாட்டு பொக்கிஷமாக இன்னும் இருப்பவர். கிராமத்து இசையை உலகத்தின் செவிகளுக்குக் கொண்டு சேர்த்தவர். தமிழ்நாட்டின் இசையை வெள்ளை மாளிகை வரைக்கும் விநியோகித்தவர்.

அந்த மகாகலைஞன் உடல்நலம் இல்லாமல் இருக்கிறார். அவர் முழுநலம் பெற்று மீண்டும் வந்து இன்னும் முப்பது ஆண்டுகளுக்கு இசையமைத்திட வேண்டும் என்று இந்த சபையில் என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள் கிறேன்" என்று இளையராஜாவின் உடல்நலம் பற்றி அவர் கூறியது அனைவரிடமும் உருக்கத்தை ஏற்படுத்தியது.



## மீண்டும் ரம்பா

ஒரு காலத்தில் தனது நடிப்பாலும், அழகாலும் ரசிகர்களின் தூக்கத்தை கெடுத்து கனவுத் தேவதையாக வலம் வந்தவர் ரம்பா. திருமணத்திற்கு பின்னர் கணவர் மற்றும் குழந்தையுடன் வெளிநாட்டில் செட்டிலாகி குடும்பம் நடத்திக்கொண்டிருந்த அவரை, மீண்டும் நடிக்க பலர் முயற்சி செய்தும் நோ சொல்லி தட்டிக்கழித்தவர், தற்போது ஓ.கே என்றிருக்கிறாராம்.

மனசுக்குப் பிடித்தமான தொழில், நல்ல சம்பளம் கொடுத்தால் யார்தான் வேண்டாம் என்பார்கள். அதனால்தான் நடிக்க சம்மதம் சொன்னேன் என்கிறார் ரம்பா.

வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்ததும் அடுத்த ரவுண்டை ஆரம்பிக்க இருக்கிறார்.

இந்த தகவல் தெரிந்த சினிமா இயக்குனர்கள், ஹீரோ-ஹீரோயின்களுக்கு அழகான அக்கா அல்லது அண்ணி கதாபாத்திரங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்ய முடிவு செய்திருக்கிறார்களாம்.



## மோகன்லாலுக்கு முதலிடம்!

விஜய், மோகன்லால் இணைந்து நடித்துள்ள 'ஜில்லா' படப்பிடிப்பை நடத்தி, படத்தையும் முடித்துவிட்டார் இயக்குனர் ஆர்.டி.நேசன். இப்போது டைட்டில் போடும் நேரத்தில் அவர் முன்னரே எதிர்பார்த்த அந்த தர்மசங்கடமான சூழ்நிலை வந்துவிட்டது.

விஜய் தமிழ்நாட்டில் நம்பர் ஒன் இடத்தில் இருப்பவர். மோகன் லாலோ 35 வருட காலமாக மலை யாள சினிமா வின் எவர்கிரீன் ஹீரோ.

முழுப்படத்தையும் இயக்கி முடித்துவிட்ட இயக்குனர் ஆர்.டி.நேசனுக்கு டைட்டிலில் யார் பெயரை முதலில் போடுவது என்பதில் குழப்பம். ஆனால் இயக்குனரின் மனப்போராட்டத்தை புரிந்துகொண்டு, விஜய்யின் பெயரைத்தான் முதலில் போடவேண்டும் என இயக்குனரிடம் முன்பே சொல்லிவிட்டார் மோகன்லால்.

ஆனால் விஜய்யோ, மோகன்லாலின் சீனியாரிட்டிக் மரியாதை கொடுக்கும்விதமாக, டைட்டிலில் மோகன்லால் பெயர்தான் முதலில் வரவேண்டும் என்று உறுதியாகச் சொல்லிவிட ஒருவழியாக நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார் இயக்குனர் நேசன்.

## கர்நாடகா செல்லும் 'வீரம்'

சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித், தமன்னா, விதார்த், சந்தானம் மற்றும் பலர் நடித்துள்ள திரைப்படம் வீரம். இப்படம் இம்மாதம் 10ஆம் திகதி பொங்கல் விருந்தாக திரைக்கு வருகிறது.

இந்நிலையில் வீரம் படத்தை கன்னடத்தில் ரீமேக் செய்ய உள்ளனர். இதுகுறித்து கன்னட பட தயாரிப்பாளர் கே.மஞ்சு கூறுகையில், வீரம் படத்தின் கன்னட ரீமேக் உரிமையை பெற்றிருக்கிறேன் என்றும் விரைவில் நடிகர், நடிகைகள், இயக்குனர்கள் தெரிவு நடக்க உள்ளது எனவும் கூறியுள்ளார்.

## சூப்பர் ஸ்டாருடன் மீனா!

மீனா திருமணத்துக்கு பிறகு மலையாளத்தில் மோகன்லால் ஜோடியாக டிரிஷ்யம் என்ற படத்தில் நடித்தார். இப்படம் சமீபத்தில் ரிலீசாகி வெற்றிகரமாக ஓடியது. இதை தமிழில் ரீமேக் செய்யும் உரிமையைப்பெற பலர் போட்டியிட்டனர். இறுதியில் நடிகை ஸ்ரீப்ரியா கணவர் ராஜ்குமார் கைக்கு கிடைத்துள்ளது. இவர் '22 பிமேல் கோட்டயம்' என்ற மலையாள படத்தை 'மாலினி 22 பாளையங்கோட்டை' என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்துவருகிறார்.











## விஷாலுடன் டூயட் பாடும் ஸ்ருதி

ஹரி இயக்கவிருக்கும் படத்தில் விஷாலுடன் ஜோடி சேரவிருக்கிறாராம் ஸ்ருதிஹாசன். பாண்டிய நாடு படத்தின் வெற்றியை தொடர்ந்து விஷால் நடித்துவரும் படம், நான் சிவப்பு மனிதன். திரு இயக்கி வரும் இந்தப் படத்தில் விஷாலுக்கு ஜோடியாக லட்சுமி மேனன் நடிக்க, இன்னொரு முக்கிய கேரக்டரில் இனியாவும் நடிக்கிறார்.

பாண்டிய நாடு படத்தை தொடர்ந்து இந்தப் படத்தையும் விஷாலின் 'விஷால் பிலிம் பேக்டரி' நிறுவனம் தயாரிக்கிறது.

நான் சிவப்பு மனிதன் படத்தை தொடர்ந்து ஹரி இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார் விஷால். இந்தப் படத்தில் விஷாலுடன் ஸ்ருதி ஹாசன் முதன் முதலாக ஜோடி சேரஇருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சமீரா ரெட்டிக்கு டும் டும்!



வாரணம் ஆயிரம், அசல், வேட்டை, வெடி, நடுநிசி நாய்கள் உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் சமீரா ரெட்டி. மோட்டார் பைக் நிறுவன அதிபர் அக்ஷய் வர்தேவுடன் கடந்த 2 வருடங்களுக்கு முன் சமீராவுக்கு நட்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவர்களது நட்புக்காதலாக மாறியது. தற்போது அவரது காதல் அம்பலத்துக்கு வந்துள்ளது. கடந்த வாரம் சமீரா, அக்ஷய் திருமண நிச்சயதார்த்தம் பாந்தராவில் உள்ள சமீராவின் வீட்டில் இரகசியமாக நடந்தது.

இதில் நெருங்கிய நண்பர்கள் மட்டும் கலந்துகொண்டனர். இதுகுறித்து சமீரா கூறுகையில், எங்களுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது உண்மைதான் என்றும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் திருமணம் நடக்க உள்ளது எனவும் கூறியுள்ளார்.

## கராத்தே மாஸ்டராகும் நயன்தாரா

ஜெயம்ராஜா மீண்டும் தன் தம்பியை வைத்து ஒரு படம் இயக்கிக் கொண்டிருக்கிறார். பெயரிப்படாத இப்படத்தில் ஜெயம்ரவி ஹீரோவாக நடிக்க, நயன்தாரா ஹீரோயினாக நடிக்கிறார்.

மேலும் படத்தில் ஹொக்கி விளையாட்டு வீரராக ஜெயம் ரவி நடிக்கிறாராம். நயன்தாரா கராத்தே மாஸ்டராக நடிக்கிறாராம்.

இவர்கள் இருவரும் பொலிஸ் அதிகாரிகளாகி, வில்லன்களின் சதித்திட்டங்களை எப்படி முறியடிக்கிறார்கள் என்பதை அக்ஷன் பொறி பறக்க படத்தில் சொல்கிறார்களாம். இதில் நயன்தாராவுக்கு ஹீரோவுக்கு இணையான வேடம் என்பதால், அக்ஷன் காட்சிகளில் ஆச்சரியப்படும் அளவுக்கு நடித்துக்கொண்டு இருக்கிறார்.

## சிம்புவின் முதல் காதலி நலம்

தமிழ் சினிமாவில் சிம்புவின் முதல் படமான காதல் அழிவதில்லை படத்தில் அவருக்கு நாயகியாக நடித்தவர் சார்மி. இதனைத் தொடர்ந்து ஆஹா எத்தனை அழகு, காதல் கிசு கிசு போன்ற படங்களில் நடித்த இவருக்கு சொல்லிக்கொள்ளும்படியாக படங்கள் அமையவில்லை. இதனைத் தொடர்ந்து அறிமுகமான தெலுங்கு உலகில் பல வெற்றிப்படங்களை கொடுத்த இவரை தற்போது தெலுங்கு பட சேனல்களில் பாடல்களில் மட்டுமே பார்க்கமுடிகிறது.

இந்நிலையில் நாளிதழ் ஒன்றிற்கு அளித்தபேட்டியில், நிறைய நட்புக்காக நடனம் ஆடி இருக்கேன். எனக்கு ஒரு பாட்டுக்கு ஆடுவதில் தயக்கம் இல்லை. நாம ரீச் ஆகணும். அதுதான் முக்கியம் என்று கூறியுள்ளார்.

மேலும் சிம்புவின் முதல் நாயகி நீங்கதானே, இப்பவும் டச்ல இருக்கீங்களா என்ற கேள்விக்கு பதிலளித்த இவர், நடுவுல டச் இல்லை. அதனால பேசலை. ஒரு நிகழ்ச்சியில் சந்தித்தபோது ஆர்வமா, “எப்படி இருக்கீங்க, உங்க லைஃப் எப்படிப் போகுது, என்ன படம் பண்றீங்க?” என்று கேட்டார்.

சீனியாரிட்டிக்கு
மாகன்லால்
தியாகச்

ர் மீனா!

பிறகு
ல்லால்
ன்ற
படம்
ற்றிகரமாக
ரீமேக்
பற பலர்
வில் நடிகை
மார்
. இவர்
என்ற
லினி 22
ற பெயரில்
வருகிறார்.

# தேன் கிண்ணம்

# புத்தாண்டு



பொற்காலம் தங்கிட
புத்தாண்டு வேண்டும்
பொழுது புலர்ந்திட
புதுவாழ்வு வேண்டும்
இத்தரை லயித்திட
இலௌகீகம் வேண்டும்
இன்னல்கள் நீங்கிட
இறையன்பு வேண்டும்
அச்சம் மறந்திட
ஐக்கியம் வேண்டும்
அகதிநிலை மாறிட
இயல்பு நிலை வேண்டும்
வானம் பொய்த்திட
வளங்கள் வேண்டும்
வறுமை போக்கிட
பசுமை வேண்டும்
ஊர் மனை சிறந்திட
உழைப்போர் வேண்டும்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

## புது வருசம் பிறக்கிறது...



புது வருசம் பிறக்கிறது
புதுசாக எதச் சொல்ல?

காணாமல் போனோரின்
கண்ணீரைக் கூறிடவா?

அகதிகளாய் கைதிகளாய்...
அடைபட்டு சிறைகளிலே
சகதிகளாய், சலனத்துள்
சஞ்சரிக்கும் மானிடர்கள்
அவலத்தை அனுஅனுவாய்...
ஆய்ந்து; பதின்மூன்றின்
சாகசத்தை, சண்டாள
சரித்திரத்தைச் சொல்லிடவா?

புது வருசம் பிறக்கிறது
புதுசாக எதைச் சொல்ல?

ஆன்மீகம் என்ற
அடக்குமுறை [illegible]கத்தில்
பள்ளிகளை, கோயில்களை
பச்சோந்தி நாடகத்துள்
கச்சிதமாய்... உடைத்தெறிந்த
கதைகளினைக் கூறிடவா?

மாற்று மதத்தவரின்
மாண்புகளில் கைவைத்து
நாற்றம் எடுக்கின்ற
(அ) நாகரிக சேட்டைகளால்
வேட்டுவைக்கின்ற
விசர்முற்றி உலகத்தை
மாற்றிய இப் பதின்மூன்று
மரணித்து, பதினான்கில்
காலூன்றி எமை நோக்கி
கனிகின்ற புத்தாண்டை
வரவேற்று வாழ்த்திடவா?
வசைபாடித் தூற்றிடவா?

புதுவருசம் பிறக்கிறது...
புதுசாக எதச்சொல்ல?

எப்போதும் போல
எழுத்தாளர், கவிஞர்கள்
ஒப்பாரி வைப்பார்கள்
உன்னை வரவேற்க.
இப்போதும் இன்தமிழால்
இதயத்தைக் கல்லாக்கி
ஒப்புவிக்க ஒண்ணாமல்
உறைபனியாய்... உதிரம்
சப்பென்று போயுள்ள
சமூகத்து நிலைமைகளை
செப்பமாய் ஆக்கி
செதுக்குகின்ற ஆசானாய்...
வருவீரேல்... வாழ்த்துகிறோம்.

இல்லையெனில்...
இதற்கு எதிர்மாறாய்
விடைபெற்ற ஆண்டின்
விட்ட பணி தொடர்வதற்கு
குடைபிடிக்கும் நிழலாகி
கூவுகின்ற கோகிலமாய்...
நடைபயில வாராதே
நாசம் தான் இதைவிட
சென்றுவிடு; புத்தாண்டே
சிரம்தாழ்த்தி வேண்டுகின்றோம்.

புதுவருசம் பிறக்கிறது
புதுசாக எதச் சொல்ல?


சாய்ந்தமருதூர், கேயெம்மே அஸீஸ்.

## மகிழ்வுடனே வரவேற்போம்

புலரும்
புத்தம் புதிய ஆண்டில்
தத் தம் மனங்களைத் தூய்மையாக்கி
நித்தம் இறைபாதம் தொழுதேற்றி
மானிலம் செழித்து,
இல்லங்கள் தோறும்
உள்ளன்போடு உறவுகளை மதித்து - வந்த
இப்புதிய ஆண்டை
மகிழ்வுடனே வரவேற்று
சாதி, மத, பேதமின்றி - எதிர்கால
சந்ததி நிமிர்வுக்காய்
கலை, கலாசார, பண்பாட்டு,
விழுமியங்கள் பேணி, பெரியோர்
ஆசியுடன் - 2014ஆம் ஆண்டை
வரவேற்று மகிழ்ந்திடுவோம்.

து.திலக்,
யாழ்.உரும்பையூர்.







## பிழை போகாமல் அரவணைப்பாய்

வேண்டத்தக்கது அறிந்து - தலை
விதியினை மாற்ற வாராய்,
வேண்ட முழுவதும் உவந்து - விலை
விஞ்சா(த) வரம் தாராய்,
ஆண்ட பரம்பரை சிறந்து - கலை
ஆற்றிட இடம் கொடுப்பாய்,
அண்ணனோ தம்பியோ உணர்ந்து - குலை
யாமல் ஆள வழி சமைப்பாய்,
பெண்குலம் நோவதறிந்து - மலை
பெரியதென சட்டம் இயற்றுவாய்,
பேறென குழந்தையை நீயுணர்ந்து - பிழை
போகாமல் அரவணைப்பாய்,
விண்ணகத்தோரும் மண்ணகம் வந்து- நிலை
விரும்பிட 'ஜய' வருடமே பிறப்பாய்,
வீதிகள், வீடுகளில் வில்லங்கம் நீங்கிட - முழு
வல்லமையோடு பிறந்து வாராய்!



கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

## புறப்பட்டு வா புத்தாண்டே!



எங்கள்
ஏழை எளியவர்களை
வறியவராக்கி
சிறைப்பட்டுக் கிடக்கின்ற
செல்வங்களை எல்லாம்
விடுதலையாக்கி
வறியவர் வாழ்வில்
வசதிகளாக்கப்
புறப்பட்டு வா புத்தாண்டே!

கல்யாணக்
கனவினில் - ஏழை
கன்னியர் தூக்கம்
கணவான்கள்
கிடைக்காது
கண்களில் ஏக்கம்
மகிழ்ச்சியே
இல்லாத பெண்
மனங்களில் வீக்கம்
சீதன வில்களை
உடைத்து எறிந்து சீதைக் கிரங்கும்
இராமனைப் போலவே
புறப்பட்டு வா புத்தாண்டே!

வறுமை யென்னுங்
கருமை யகலப்
பெருமை யொக்கும்
அருமை யாண்டாய்
புறப்பட்டு வா புத்தாண்டே!



பாண்டியூர் - பொன்.நவநீதன்.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# கர்ப்ப காலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள்

### இரட்டைக் குழந்தைகள்

100 கர்ப்பங்களில் மூன்று வீதமானவை இரட்டைக் கர்ப்பங்களாக இருக்கும். பரம்பரையில் இரட்டைக் குழந்தைகள் உள்ளவர்கள் மற்றும் குழந்தை தங்குவதற்காக மாத்திரைகள் பாவித்தவர்களுக்கு (clemephene) இரட்டை அல்லது அதற்கு மேலும் குழந்தை தங்கும் சாத்தியம் அதிகம்.

**இரட்டைக் கர்ப்பம் எவ்வாறு உண்டாகிறது?**

இது இரண்டு வழிகளில் நிகழும்.

1. தாயின் 2 முட்டைகள் கப்பனின் 2 விந்துகளுடன் கருக்கட்டுதல். இதன்விளைவாக ஒவ்வாத இரட்டையர் (Non Identical).
2. கருக்கட்டிய முட்டை பின்னர் இரண்டாகப் பிரிதல். இதன்போது உருவாகும் இரட்டையர் ஒத்த இரட்டையர் எனப்படும்.

இரட்டைக் குழந்தைகள் என்பது சிலர் நினைப்பதுபோல் "ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்" அல்ல. ஏனெனில் இரட்டைக் கர்ப்பங்களில் சிக்கல்கள் எழும் வாய்ப்பு அதிகம்.



**இரட்டைக் கர்ப்பத்தில் உள்ள சிக்கல்கள்**

1. கருச்சிதையும் சாத்தியம் அதிகம்.
2. குறைமாத பிரசவங்கள்.
3. குழந்தைகளின் வளர்ச்சி குன்றல்.
4. பிரசவத்தின்போது சிக்கல்கள்.
5. இரட்டைகளில் ஒன்று பாதிப்புறுதல்.
6. ஒட்டிய இரட்டையர்
7. இரத்தச்சோகை.
8. உயர்குருதி அமுக்கம்.

எனவே இரட்டைக் குழந்தைகளை கருத்தரித்த தாய்மார் நிபுணத்துவ ஆலோசனை பெறுதல் நன்று. மேலதிக போசனையுடைய உணவு மற்றும் இரும்புச்சத்துக் குளிகைகள் என்பன எடுத்தல் வேண்டும். ஒழுங்காக 'கிளினிக்' போவதும் அவசியம். பிரசவத்திற்கு நிபுணத்துவ வசதியுள்ள வைத்தியசாலைக்கு செல்லவேண்டும்.

**தலை திரும்பாம்மை (Breech)**


95 சதவீதமான குழந்தைகள், 36 கிழமையை (9மாதம்) அண்மித்ததும் தலைகீழாக திரும்பிவிடும். தலை முதலில் வரும் பிரசவங்கள் ஏனைய பிரசவங்களைவிட சிக்கல் குறைந்தவை. 3-4 வீதமான குழந்தைகள் தலை திரும்பாமல் அதாவது கால் பகுதி கீழ்நோக்கிய வண்ணம் இருக்கும். இவ்வாறு இருப்பது (Breech) சிக்கலான பிரசவமாக கருதப்படும். எனவே இத் தாய்மார்கள் சத்திரசிகிச்சை வசதியுள்ள வைத்தியசாலைக்கு செல்லவேண்டும்.

**"காலால் பிறப்பதன் பிரச்சினை என்ன?"**

பிறக்கும் குழந்தையின் உடலில் மிகப்பெரிய பகுதி தலையாகும். எனவே குழந்தையின் தலை தாயின் இடுப்புக்குழிக்கூடாக வெளியே வந்துவிட்டால், ஏனைய உடற்பகுதிகள் மிக இலகுவாக வெளியே வந்துவிடும். ஆனால் காலால் பிறக்கும் குழந்தைகளில் கால் பகுதி சிறியதாதலால், அது தாயின் கருப்பை வாய் முற்றாக விரிவடைய முன் கீழே வந்துவிடும். ஆனால் தலைவர போதாமலிருக்கும், இதனால் தலை இறுகும் அபாயம் உள்ளது. இதைவிட காலால் பிறக்கும் குழந்தைகளுக்கு, எலும்பு, நரம்புகளில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

எனவே இவ்வாறு தலை திரும்பாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் சத்திர சிகிச்சை மூலமான பிரசவமே நல்லது என அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**குழந்தை திரும்பாமல் இருப்பதன் காரணம் என்ன?**





வீட்டில் வேலை அதிகம் செய்யாதவர்களுக்குத் தலை திரும்பாது என்பதில் உண்மை எதுவுமில்லை. தாயின் கருப்பையின் அமைப்பு, சூல்வித்தகம் (placenta) கீழே இருத்தல். மற்றும் குழந்தையின் அசைவுக் குறைவு என்பனவே குழந்தை திரும்பாமைக்கான பொதுக் காரணங்களாகும். எனினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காரணங்கள் எதுவும் இருப்பதில்லை.

**(தொடரும்)**

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே
வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்
(வடபுலத்தான் எழுதுவது...)
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!




# லேடிஸ் ஸ்பெஷல்



## கை - கால் மூட்டுகளின் கறுப்பு நீங்க...

கை, கால் மூட்டுகளில் கறுப்பாக இருக்கிறது. நன்கு தேய்த்துக் குளித்தாலும் அந்த நிறம் மாறவில்லை. இதற்கு என்னதான் தீர்வு? ஒரு சிறிய கொய்யாப்பழத்தை எடுத்து மிக்ஸியில் போட்டு அரைத்தால் 'ஸ்க்ரப்' போல வரும். அத்துடன் ஒரு எலுமிச்சைப் பழத்தின் சாறை எடுத்துக்கலந்து கை, கால், மூட்டுகளில் நன்கு தேய்த்து மசாஜ் செய்து கழுவவும். பிறகு அந்த இடத்தில் மாய்ஸ்சரைசர் பூசவும். இப்படிச்செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பால், தேன், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றை சம அளவு எடுத்துக் கலக்கி, கறுப்பான இடங்களில் பூசி, 10 நிமிடங்கள் கழித்து கழுவி விடவேண்டும். இதுவும் நல்ல பலன் தரும். தேவைப்பட்டால் பாதாம் பவுடர் சேர்த்துக்கொள்ளலாம். ஒரேஞ்சு தோல் பவுடர், பால் இவற்றை சமஅளவில் எடுத்து ஒன்றாக குழைத்து முட்டிகளில் பூசி பத்து நிமிடத்துக்கு பிறகு கழுவிவந்தாலும் சீக்கிரமே கறுப்பு நிறம் மாறும்.

## தேங்காய் பர்பி



**தேவையான பொருட்கள்**

தேங்காய்த் துருவல் - 1 கப்
ஏலக்காய் -3, முந்திரிப்பருப்பு - 8,
சீனி - 1 கப்
பச்சைக்கற்பூரம் - 1 சிட்டிகை
நெய் - 1 கரண்டி

**செய்முறை:**

தேங்காயை நைசாகத் துருவிக் கொள்ளவும். ஏலக்காயையும், பச்சைக் கற்பூரத்தையும் சிறிது சீனியுடன் சேர்த்து, நைசாகப் பொடித்துக் கொள்ளவும். முந்திரிப் பருப்புகளைச் சிறுதுண்டுகளாக தூளாக்கிக் கொள்ளவும். எல்லாப் பொருள்களையும் நன்றாகக் கலந்து ஒரு மைக்ரோவேவ் பாத்திரத்தில் மூடாமல் வைக்கவும்.

3 ½ நிமிடங்கள் மைக்ரோ ஹையில் வைக்கவும். நடுவில் ஒருமுறை லேசாகக் கிளறிக் கொடுக்கவும். மைக்ரோவேவிலிருந்து எடுத்த கையோடு, நெய்தடவிய தட்டில் கொட்டிச் சமமாகப் பரப்பவும். சிறிது சூடு ஆறத்தொடங்கியதும், நெய் தடவிய கத்தியால் 3 செ.மீ. சதுரக்கட்டிகளாக வெட்டவும். மூன்றரை நிமிடங்களில் தேங்காய் பர்பி தயார்.

## 250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-401**

**கேள்வி: கை, கால் மூட்டுகளின் கருமை நீங்க பூசவேண்டியது என்ன?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 15. 01.2014**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 401
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 399 இற்கான விடை :- ஒரேஞ்சு ஜூஸ், பச்சை திராட்சை ஜூஸ், லெமன் ஜூஸ், தக்காளி ஜூஸ்,

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- க.வினோதா, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

401

பெயர் : ....................

முகவரி : ....................


....................

தே.அ. அட்டை இல : ....................

விடை : ....................

....................

கையொப்பம் : ....................



## டீன் ஏஜ் பெண்கள் புரிந்துகொள்ள வேண்டியவைகள்

நிறையும் கலந்த கலவையாய் இன்றைய டீன்ஏஜ் பெண். அவள் இப்போதெல்லாம் எங்களை மதிப்பதில்லை என்று பெற்றோரும், நாங்கள் சொல்வதையே அவர்கள் கேட்பதில்லை என்று மகள்களும் பரஸ்பரம் குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றிய ஒரு அலசல். பெற்றோர்கள் சொல்பவை:

அவள் எங்கள் முகத்தை பார்த்தே பேசுவதில்லை. முன்னால் போய் நின்றால்கூட பார்க்காதது மாதிரி கடந்து விடுகிறாள். அவள் பேசும் வார்த்தைகளில் கனிவும், மென்மையும் இல்லை.

இவ்வளவு காலமும் என் பின்னாலே நடந்தாள். பக்கத்து வீட்டுப்பையன் முறைத்தால்கூட என்னிடம் ஓடிவந்து சொல்வாள். இப்போது எதையும் சொல்வதில்லை. நாங்கள் எப்போதும் அப்பா-அம்மாவாக அப்படியே தானே இருக்கிறோம். இவள் மட்டும் ஏன் மாறிப்போனாள்...!

நாங்கள் சொல்வதற்கு செவி சாய்ப்பதில்லை. அதனால்தான் திட்டுகிறோம்.

"செல்போன் வாங்கிக் கொடுத்தால்தான் வெளியே செல்லும்போது எங்கே செல்கிறேன் என்று சொல்லிக்கொண்டு போவேன்" என்கிறாள். ஆனால் அதை தவறாக பயன்படுத்தினால் என்ன செய்வது?

உபதேசத்தை காது கொடுத்து கேட்பதில்லை. தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டால் என்ன செய்வது?

தோழிகளோடு எப்போதும் சுற்றுவதற்கு போய்விடுகிறாள். வீடு என்று ஒன்று இருப்பதே அவளுக்கு மறந்துவிட்டது.

கேட்டதை எல்லாம் நாங்கள் வாங்கிக்கொடுத்தும் படிப்பில் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறாள்.

பொக்கெட் மணியாக நிறைய பணம் கேட்கிறாள். ஆண்களோடு பார்ட்டிகளுக்கு செல்ல ஆசைப்படுகிறாள்.

இத்தகைய குறைகளை தான் இன்றைய டீன்ஏஜ் பெண் மீது பெற்றோர் கூறுகின்றனர். பெற்றோர் தன் குழந்தைகளுக்கு எந்த பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காகத்தான் கூறுவார்கள். இதை டீன்ஏஜ் பெண்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

## உங்கள் சமையலறையில்!



வாழைப்பழங்களை சீப்பு சீப்பாகத்தான் வாங்கவேண்டும். அதை எதன் மீதும் வைக்கக்கூடாது. ஒரு கயிற்றில் கட்டி தொங்கவிட்டு உபயோகித்தால் விரைவில் பழுக்காமல் இருக்கும். தர்ப்பூசணியின் தோல் சீவி, சிறுசிறு துண்டுகளாக நறுக்கவும். அதில் மிளகுத்தூள் அல்லது மிளகாய் தூள் தூவி, எண்ணெயில் வதக்கிப் பொரியல் செய்யவும். வித்தியாசமான சுவையுடனும் மணத்துடனும் இருக்கும்!

கர்ப்பிணிகள் தினமும் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு உலர்ந்த திராட்சையை சாப்பிட்டுவந்தால் பால் நன்கு சுரக்கும்.

தக்காளிப்பழத்தில் கல்சியம் சத்து அதிகம். கர்ப்பிணிகள் தினமும் உணவில் தக்காளி சேர்த்துக்கொண்டால் பிறக்கும் குழந்தைகளுக்கு எலும்பு வளர்ச்சி நன்றாக இருக்கும். பற்களும் உறுதியாக இருக்கும். வில்வப் பழத்தோடு தேனும் சீனியும் சேர்த்து 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் தோல் நோய்கள் நெருங்காது.

தர்ப்பூணிப் பழத்தின் வெள்ளைப் பகுதியைத் தூக்கி எறியவேண்டாம். அதை சீ[illegible] அரிசியுடன் சேர்த்து அரைத்து தோசை வார்க்கலாம். உளுந்து தேவையில்லை. தோசை பிரமாதமாக இருக்கும்.

## பிரசவத்திற்குப் பின் வயிற்றுச் சதையை குறைக்க...



தாய்மைப்பேற்றை அடைந்த எல்லா பெண்களும் பிரசவத்திற்குப் பிறகு வயிற்றுப் பகுதியில் சேர்ந்த சதையை எப்படி குறைப்பது என்று கவலைப்பட ஆரம்பித்துவிடுகின்றனர். வயிற்றுச்சதை என்று பார்க்கும்போது இரண்டு வகை கொழுப்புத்திசுக்களால் இந்த சதை உருவாகிறது.

வயிற்றுப் பகுதியில் பல காரணங்களால் அதிக சதை சேர்கிறது. கருவுற்றிருக்கும்போது வயிற்றைச் சுற்றிலும் இயற்கையாகவே எடை அதிகரித்துவிடுகிறது. பிரசவத்திற்கு பின்பு இந்த எடையை குறைப்பது சிரமமாகத்தான் இருக்கும். எனினும் வயிற்றுக் கொழுப்பை குறைப்பதற்கான மிகச் சிறந்த ஆலோசனைகள் உள்ளன.

அவற்றின்படி நடந்தால் விரைவில் வயிற்று சதையை குறைக்கலாம். பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் பைக்கெட் பண்டங்களை தவிர்த்துவிட்டு, வீட்டில் சமைத்து சாப்பிடவேண்டும். இதனால் ஆரோக்கியமற்ற கொழுப்புக்கள் சேர்வதை தவிர்க்கலாம்.

காலத்துக்கு ஏற்றபடி பல ரகங்களில் கிடைக்கும் புதிய காய்கள் மற்றும் பழங்கள் உடலுக்கு மிகவும் ஏற்றவை. இவை உடலுக்கு வித்தியாசமான சத்துப்பொருட்களை அளிக்கின்றன. நடைப்பயிற்சியை மிஞ்சிய உடற்பயிற்சி ஏதும் இல்லை. எனவே, அதற்கான நேரம் மற்றும் இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

இருப்பினும் அதற்குமுன் மருத்துவரிடம் கலந்தாலோசியுங்கள். உடலை பார்த்துக்கொள்ளும் பரபரப்பில் தாய்ப்பால் அளிக்கத் தவறுவது குழந்தைக்கு மட்டுமல்ல, உங்கள் உடலையும் பாதிக்கும்.

எனவே மார்பகப் புற்றுநோய் அண்டாமல் இருக்கவும், மார்பகச்சதைகள் இளைக்கவும் தாய்ப்பால் கொடுப்பது மிகவும் அவசியம். மேற்கூறியவற்றையெல்லாம் தவறாமல் செய்துவந்தால், வயிற்றுத் தசை குறைவதை நன்கு காணலாம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஹமாசும் ஏனைய இயக்கங்களும் செயற்படும் விதத்திலும் தங்கியுள்ளது.

ஹமாஸ் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கெதிரான தனது கொள்கைப் பிரகடனத்தை மாற்றிக்கொள்ள வேண்டிநேருமா என்ற கேள்விக்கான விடையும் இஸ்ரேலின் எதிர்கால நடவடிக்கைகளிலும், இவ்விரு நாடுகளின் சர்வதேச ராஜ்ஜிய நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது.

பாலஸ்தீன அதிகார சபையை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் (UNESCO) அங்கீகரித்து ஏற்றுக்கொண்டபொழுது அமெரிக்க காங்கிரஸ் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்துக்கான உதவியை நிறுத்திக்கொண்டது. இந்த தீர்மானத்தின் பின்னரும் அமெரிக்கா வாஷிங்டனிலுள்ள பாலஸ்தீன அதிகார சபை அலுவலகத்தை மூடிவிடுவதென்றும், பாலஸ்தீனத்துக்கான நிதி உதவிகளை நிறுத்திவிடுவதாகவும் பல எச்சரிக்கைகளை தமது செனட் சபை உறுப்பினர்கள் மூலம் விடுத்துள்ளது. ஆக மொத்தத்தில் அமெரிக்காவினால் பாலஸ்தீன மக்கள் காலங்காலமாக தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். அமெரிக்கா மத்திய கிழக்கின் மீதான தனது ஆதிக்கத்தை தக்கவைத்துக்கொள்ள இஸ்ரேலின் அடாவடித்தனத்தை, இஸ்ரேலின் தற்காப்பு நடவடிக்கை என்ற கோதாவில் கட்டவிழ்த்துவிட அனுமதித்துள்ளது. இதன் மூலம் இஸ்ரேலின் அடாவடித்தனத்துக்கு வக்காலத்து வாங்குகின்ற ஒரு உபாயத்தையும், மறுபுறம் சமாதானத்தை அமெரிக்கா தலையிட்டே ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணப்பாட்டையும் தோற்றுவித்து செயற்படுவதுடன், அதற்குத் துணையாக பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளினை கொண்டு பல்வேறு அழுத்தங்களை (நிதி உதவி மறுப்பு உட்பட) பாலஸ்தீன அதிகார சபைக்கு மட்டுமே பிரயோகிக்கின்ற செயற்பாட்டினை செய்துவருகிறது. அந்த வகையில் பாலஸ்தீனம் ராஜ்ஜிய ரீதியில் தனது அந்தஸ்தை சர்வதேச அவையில் தரமுயர்த்தியிருக்கிறது. அதன் பலாபலன்களை இனிவரும் காலங்களில் காணமுடியும். அதற்கான அரசியல் முதிர்ச்சியும் அனுபவமும் அப்பாஸிடம் நிறையவே இருக்கிறது. மக்களின் செல்வாக்குமிகு காஸா பிரதேச அதிகாரத்தைக் கொண்டுள்ள ஹமாசும் பாலஸ்தீனத்தில் பல பகுதிகளிலும் மக்களின் நலன் சார்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அனுபமுடையவர்கள் மக்களின் செல்வாக்கை பெரிதும் பெற்றவர்கள் என்பதால் வரும் காலங்களில் பாலஸ்தீன ஆட்சி அதிகாரக்கொள்கைகளில் எத்தைகய சமரசம் சாத்தியமானது என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனெனில், அரசியல் கொள்கைகளில் ஒன்று, "இரு மக்கள் இரு நாடு" "இது PLOஇன் கொள்கை. மற்றயது ஒரே நாடு, பாலஸ்தீனம்தான், இஸ்ரேல் என்று ஒரு நாடே இல்லை. இருக்கவும்கூடாது. "இது தீவிரவாத ஹமாஸ் இயக்கத்தின் கொள்கை. ஆனால் நடைமுறையில் "இரு மக்கள் இரு நாடு" சாத்தியம்போல் தெரிந்தாலும், ஒரே நாடு, இஸ்ரேல்தான், பலஸ்தீனம் என்று ஒரு நாடே இல்லை, இருக்கவும் கூடாது" என்று இஸ்ரேலிய யூத இராணுவம் நினைக்கிறது.

கியூபா வெனிசுலா ஆகிய தென்னாமெரிக்க நாடுகள் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களை ஐ.நா. தீர்மானங்களை அலட்சியப்படுத்தும் அகங்காரத்தை, மனித இனத்துக்கெதிரான இஸ்ரேலின் குற்றங்களை கடுமையாக கண்டித்தே பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் வெனிசுலாவின் பிரதிநிதி ஜோர்ஜ் வலேரோ பிரிசினோ (JORGE-VALERO BRICENO) தனது உரையில் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்ற நாடு ஒரு தலைப்பட்சமாக உருவாக்கப்பட்டு அங்கு ஏழு இலட்சம் பாலஸ்தீனியர்கள் • வெளியேற்றப்பட்ட 'நகப்' என அழைக்கப்படும் பேரழிவு வரலாற்றை, அதே அரபுச்சொல்லை குறிப்பிட்டதன்மூலம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு வரலாற்றை பிரித்தானியாவின் வரலாற்றுத் துரோகத்தை தனது உரையில் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருந்தார். பல ஆதரவு நாட்டின் பிரதிநிதிகளும் தங்களின் ஆதரவு உரையில் பாலஸ்தீன மக்களின் வரலாற்று சோகங்களை இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு அடாவடித்தனங்களை சுட்டிக்காட்டினர்.

## அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் ராஜ்ஜிய தோல்வி

"இன்றைய பெரும் பிரகடனம் மங்கிப்போகும், பாலஸ்தீன மக்கள் நாளை விழித்தெழுந்து தங்களின் வாழ்க்கையில் நிலையான சமாதனம்வரும் என்ற வாய்ப்பு பின்னோக்கி சென்றுவிட்டது என்பதைத் தவிர தங்களின் வாழ்க்கையில் வேறு ஏதும் மாற்றத்தைக் காணமாட்டார்கள்" என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் சுசான் ஈ ரைசின் (Susan E rice) கருத்து, பாலஸ்தீனத்தின் மீதான அமெரிக்காவின் கை நழுவிச்செல்லும் ஆதங்கத்தின் பிரதிபலிப்பாகும்.

அது மாத்திரமல்ல ஜியோனிச குரலுக்கு முட்டுக்கொடுக்கும் விதத்திலே பராக் ஒபாமா 2011இல் ஐ.நா சபை. குழுக் கூட்ட உரையிலும் ஐ.நா பாலஸ்தீன பிரச்சினை குறித்து, பாலஸ்தீன சுதந்திர தேசம்குறித்து ஐ.நா முடிவெடுப்பது எந்த விளைவையும் தராது, சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பரஸ்பரம் பேசியே முடிவெடுத்தால் மட்டுமே நிலையான தீர்வினை அடையமுடியும் என்று பாலஸ்தீன சுயாட்சி பிரகடனம் சபையேறாமல் தடுத்தவர். அம்முறையும் அத்தீர்மானம் குறித்த பிரேரணையை முன்னெடுக்கவேண்டாம் என்று அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா, அப்பாசை கேட்டிருந்தார். ஆனால் அப்பாஸ் மறுத்துவிட்டார். அதேவேளை பிரித்தானியாவும் முதலில் அப்பாசின் ஆதரவுக் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்தது. ஆனால், சில நாட்களின் பின்னர் நிபந்தனையுடனான ஆதரவு வழங்கவிரும்புவதாக அப்பாசுக்கு அறிவித்தது. பாலஸ்தீனம் சர்வதேச நீதிமன்றிற்கு (International Court of Justice), சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு (International Criminal Court) ஆகியவற்றுக்கு அங்கத்துவம் கோரி விண்ணப்பிக்கக் கூடாது என்றும் நிபந்தனையற்ற சமாதானத்துக்கு இஸ்ரேலுடன் செல்ல வேண்டும் என்றும், அதிலும் குறிப்பாக மறைமுகமாக இஸ்ரேலுக்கு எதிராக, குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது என்ற கோதாவிலும் ஒரு உறுதியினை வழங்கினால் மட்டுமே தாங்கள் ஆதரவளிக்கமுடியும் என்று கோரிக்கை விடுத்தும் ஆனால், ரமலாவில் உள்ள பாலஸ்தீன அதிகாரம் இந்த நிபந்தனைகளை ஏற்கவில்லை. அப்பாஸ் அதனையும் நிராகரித்தே தனது பிரேரணையை முன்னெடுத்தார். 2012இல் காசாவில் நடந்த பாலஸ்தீன பொதுமக்கள் மீதான மிலேச்சத்தனமான இஸ்ரேலிய இராணுவத்தின் படுகொலைகளை பசுமையாய் நினைவில் கொண்டிருந்த சர்வதேச சமூகம் பாலஸ்தீன நாடு தொடர்பில் ஒரு முன் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

"எது இஸ்ரேலை அச்சுறுத்துகிறதோ, அது அமெரிக்காவையும் அச்சுறுத்துகிறது. எது இஸ்ரேலை பலப்படுத்துகிறது அது எங்களையும் பலப்படுத்துகிறது. ("What threatens Israel threatens America, what strengthens Israel strengthens us.") என்று திருமதி கிளிங்டன் அமெரிக்காவின் குரலாய் தமது இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டை மிகத் துல்லியமாகத் தெரிவித்துள்ளார். அவரின் வார்த்தைகள் காசாவில் அமையப்போகும் 3000 புதிய வீடுகளையோ கிழக்கு ஜெருசலேத்தில் ஈ ஒன்று எனப்படும் பாதையை அடைத்து அங்கு எதிர்காலத்தில் அமையப்போகும் பாலஸ்தீன தலைநகரை இல்லாமல் செய்கின்ற, பாலஸ்தீன நாட்டை துண்டாடுகின்ற நடவடிக்கைகளை இஸ்ரேல் முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ள பின்னணியில் சொல்லப்பட்டதாகும். மேலும் ஐ.நா பொதுக் குழுத் தீர்மானத்தை நிராகரிப்பதாக நெட்டன் யாகூ அறிவித்திருந்தார். அத்துடன் ஒஸ்லோ ஒப்பந்தப்படி பாலஸ்தீன அதிகார சபையின் பெயரால் வசூலிக்கும் பாலஸ்தீன அதிகார சபைக்கு வழங்கும் வருட வரிப்பணமான 120 மில்லியன் அமெரிக்கா டொலரை பாலஸ்தீன அதிகார சபையின் கடன்களுக்காக திரும்பச் செலுத்தப்போவதில் என்று வேறு 2012இல் இஸ்ரேல் அறிவித்தது. சென்றவருட இஸ்ரேலின் தாக்குதல்களின் பின்னர் எய்தப்பட்ட யுத்த நிறுத்தமீறலை அடுத்தும் ஐ.நா. தீர்மானத்தின் பின்னரும் முதலாவது காஸா பகுதியில் எல்லை மதில் கொலையும் துப்பாக்கிச் சூடும் இஸ்ரேலின் யுத்தநிறுத்த மீறலாக, பாலஸ்தீனத்தின் மீதான ஆத்திரமூட்டும் செயற்பாடாக அமைகின்றன. பாலஸ்தீன அதிகார சபை என்றுமில்லாதவாறு அரசியல் ராஜ்ஜிய நடவடிக்கைகளை, சர்வதேச நீதிமன்றுகளை அணுகவேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டிருந்தது.

மொத்தத்தில் அந்த தீர்மானம் எல்லா விதத்திலும் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் அரசியல் கபடத்தனத்துக்கும் இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனத்துக்கும் எதிராக பாலஸ்தீன அதிகாரத்தின் ராஜ்ஜிய அணுகுமுறைக்கு கிடைத்த பாரிய வெற்றி என்பதனை மறுக்கவும் முடியாது. யசீர் அரபாத் நஞ்சூட்டப்பட்டே கொல்லப்பட்டிருக்கிறார் இஸ்ரேலே பொறுப்பு! இப்படித்தான் பலஸ்தீன மக்கள் கூறுகின்றனர்.

பாலஸ்தீனத்தின் முன்னாள் தலைவர் யசீர் அரபாத்தின் மரணத்தை விசாரித்துக் கொண்டிருந்த பலஸ்தீனக் கமிட்டி, இஸ்ரேல் மட்டும்தான் இந்த விஷயத்தில் இருக்கும் ஒரே சந்தேகப்படக்கூடிய அமைப்பு என்று முன்பு கூறியது.

2004இல் அரபாத்தின் மரணம் குறித்த மிகச் சமீபத்திய விஞ்ஞான அறிக்கைகள் அவர் முதுமையாலோ, உடல் நலக்குறைவாலோ இறக்கவில்லை, மரணமும் இயற்கையாக நிகழவில்லை என்பதைக் காட்டுவதாக இந்த குழு கூறியது.

முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவதற்கு தனது விசாரணைகள் தொடரும் என்றும் அந்தக்குழு கூறியது. அதே வேளை இஸ்ரேல், அரபாத்தின் மரணத்தில் தனக்குத் தொடர்பிருப்பதாகக் கூறப்படுவதை நிராகரித்துள்ளது.

சில காலத்திற்கு முன்னதாக வந்த சுவிஸ் நாட்டு வல்லுநர் குழு அறிக்கை ஒன்று, தோண்டியெடுக்கப்பட்ட பலஸ்தீனத் தலைவர் அரபாத்தின் உடலில் சாதாரண-மாக இருக்கும் கதிரியக்கப் பொருளான போலோனியத்தின் அளவைவிட, 18 மடங்கு அதிகம் இருந்தது என்று கூறியது.

அதனால் அவர் நஞ்சூட்டப்பட்டு - படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் எனப் பலஸ்தீன மக்களால் நம்பப்படுகிறது!

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் நஞ்சூட்டப்படவில்லை என ரஷ்யா இப்போது தெரிவித்துள்ளது.

அரபாத்தின் மரணம் இயற்கையானது என ரஷ்ய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு மூன்று குழுக்கள் யசீர் அரபாத்தின் மரணம் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

யசீர் அரபாத்தின் ஆடைகளில் உயர் மட்ட கதிரியங்க போலோனியம் கண்டறியப்பட்டதாக சுவிஸ் விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

எனினும், கதிரியக்க போலோனிய தாக்கமே யசீர் அரபாத்தின் உயிரிழப்புக்கு காரணம் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை. இதனிடையே யசீர் அரபாத் நஞ்சூட்டப்பட வில்லை என பிரான்ஸ் விஞ்ஞானிகளும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரமல்லாவிலுள்ள தமது வீட்டில் வைத்து உணவருந்திய பின்னர் சுகவீனமுற்ற யசீர் அரபாத் சிலவாரங்களின் பின்னர் பிரான்சிலுள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

2004 ஆம் ஆண்டு தனது 75 ஆவது வயதில் யசீர் அரபாத் சாவு எய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யசீர் அரபாத்தின் பாரியாரின் வேண்டுகோளுக்கு அமைய பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன முன்னாள் தலைவர் யசீர் அரபாத்தின் மரணத்தில் மர்மம் இருப்பதாகவும், அவரை மெல்லக்கொல்லும் விஷம்கொடுத்தும், கதிர்வீச்சு மூலமும் கொல்லப்பட்டதாக பல்வேறு தகவல்கள் வெளியானது.

ஆனால், இதனை உறுதிசெய்ய முடியாதநிலை இருந்துவந்தது. இதனால் அவரது உடல் உறுப்புகளை எடுத்து பல்வேறு நாடுகள் ஆய்வுகளை மேற்கொண்டன. அரபாத்தின் உடல் உறுப்புகளை ஆய்வுசெய்த சுவீஸ் நாட்டின் நிபுணர்குழுவினர் யசீர் அரபாத் விஷம் கொடுத்து கொல்லப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை எனக் கடந்த மாதம் அறிவித்தது.

இந்நிலையில் ரஷ்ய நாட்டின் நிபுணர் குழுவினரும் அரபாத்தின் உடல் உறுப்புகளைக் கொண்டு, அவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய தீவிர உடல்கூறு சோதனை நடத்தியது.

இப்போது ரஷ்ய நிபுணர்குழுவும் யசீர் அரபாத் விஷம் கொடுத்து கொல்லப்பட வில்லை என்றும் அவரது மரணம் இயற்கையானது எனவும் அறிவித்துள்ளதாக அந்நாட்டின் செய்தி நிறுவனம் கடந்த வாரம் தெரிவித்து உள்ளது.

போலோனியம் என்ற விஷம் வைத்து யசீர் அரபாத் கொல்லப்பட்டுள்ளார். மனைவி சுஹாபலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் போலோனியம் என்ற விஷம் வைத்துக் கொல்லப்பட்டதாக அவருடைய மனைவி சுஹா இன்னும் நம்புகிறார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் திகதி தனது 75 ஆவது வயதில், பிரான்ஸில் உயிரிழந்தார். அவரது மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க அப்போது அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை.

2006ஆம் ஆண்டில் ரஷ்யாவின் முன்னாள் உளவுத்துறை பிரிவினரும், ரஷ்ய அரசின் விமர்சகருமான அலெக்சாண்டர் லிட்வினென்கோ படுகொலை செய்யப்பட்டபின், அரபாத்தும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்தது. இதனால், 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவரது உடற்பகுதியில் எஞ்சியிருந்த பாகங்கள் தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

பிரான்ஸ், சுவிட்சர்லாந்து மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளிலும் இந்த சோதனைகள் தனித்தனியே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் சுவிட்ஸர்லாந்தின் லூசேன் சட்டவைத்திய நிலையத்தின் கதிரியக்கப் பிரிவில் பணிபுரியும் எட்டு விஞ்ஞானிகள் மொத்தம் 75 மாதிரிகளில் ஆராய்ச்சி மேற்கொண்டு தங்களின் முடிவுகளை தெரிவித்துள்ளனர்.

இவற்றில் அரபாத்தின் இரத்தம், சிறுநீர்க்கறைகள் பட்டிருந்த துணிகளில் உயர் கதிர்வீச்சு தன்மைகொண்ட போலோனியம் படிமங்கள் இருந்ததை இந்தக் குழுவினர் உறுதிசெய்துள்ளனர்.

ஸ்விட்சர்லாந்து நாட்டின் தடவியல் அறிக்கையை ஆய்வுசெய்த யசீர் அரபாத்தின் மனைவி சுஹா பாரிஸ் நகரில் வைத்து செய்தியாளர்களுக்கு தெரிவித்திருப்பதாவது, எனது கணவர் (யசீர் அரபாத்) இயற்கை மரணத்தால் உயிர் இழக்கவில்லை. அவர் போலோனியம் என்ற விஷத்தால் கொல்லப்பட்-டுள்ளார் என்பதற்கான அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

அவரது மரணம் இயற்கையானது அல்ல. அரசியல் படுகொலைதான் என்ற எனது சந்தேகம் இப்போது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகியுள்ளது.

இந்த படுகொலை தொடர்பாக எந்த நாட்டையும் எந்த தனிநபரையும் நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் உயிரிழப்புக்கு நஞ்சூட்டப்பட்டமை காரணம் அல்ல என பிரான்ஸ் விஞ்ஞானிகளின் ஆய்வு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவான தொற்று நோய் காரண-மாகவே அவர் உயிரிழந்ததாக கசிந்துள்ள இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பலஸ்தீனத் தலைவரின் உடலில் எதிர்பாராத உயர்மட்ட அளவில் நச்சுத் தன்மை கொண்ட போலோனியம் காணப்பட்டதாக சுவிட்ஸர்லாந்து விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வறிக்கையில் இதற்குமுன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமது நாட்டு தலைவர் இஸ்ரேலால் நஞ்சூட்டப்பட்டதாக நம்பும் பெரும்பாலான பலஸ்தீனயர்களுக்கு சுவிஸ் விஞ்ஞானிகளின் அறிக்கை ஆதரவாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயத்தில் சிறந்த ஐரோப்பிய நிபுணர்களிடம் காணப்படும் முரண்பாடு வருத்தம் அளிப்பதாக யசீர் அரபாத்தின் பாரியார் தெரிவித்துள்ளார்.


பலஸ்தீன விடுதலை அமைப்பை 35 ஆண்டுகளாக தலைமைதாங்கிய யசீர் அரபாத் 1996ஆம் ஆண்டு நாட்டின் முதலாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு கடுமையாக சுகவீனமுற்ற யசீர் அரபாத் 2 வாரங்களின் பின்னர் பாரிஸ்சிலுள்ள பிரான்ஸ் இராணுவ வைத்திய வைத்தியசாலையொன்றுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். எனினும் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தனது 75ஆவது வயதில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது

பிரகஸ்பதி

# தீராப் பிரச்சினையாய் யானைகளின் அட்டகாசம்

**யுத்தம்** நிறைவுபெற்ற பின்னர் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திக்கும் யானைகள் மக்கள்மீது அட்டகாசம் நடத்துவதற்கும் தொடர்பிருக்குமா என்ற சந்தேகம் பலருக்கும்



ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் யானைகளினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க முடியாத நிலைமையே இருந்துவருகிறது.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான காடுகளைக் கொண்ட மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் யானைத்தாக்குதல்களால் பெருந்தொகையான எல்லைப்புற மக்கள் அச்சத்துடனேயே வாழ்க்கை நடத்தும் நிலை தோன்றியுள்ளது. இந்த யானைகளின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் இந்த வாரத்தில் ஆராயலாம்.

யானைகளின் தாக்குதல்களால், 2009ஆம் ஆண்டுக்குப்பின்னர் சுமார் 30 பேர்வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கில் காயமடைந்துள்ளனர். அதனைவிடவும் பெருந்தொகையான வீடுகள், பயன்தரு மரங்கள், சொத்துக்களும் நாசமாகியிருக்கின்றன.

யானைகள் கொலைகாரர்களைப் போன்று பார்க்கப்படும் சூழல் மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கிறது. மக்கள்மீது இப்போது குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படும் நிலை தோன்றி வருவதனையும் அவதானிக்கமுடிகிறது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் மக்கள் தமது வாழ்வாதாரங்களுக்காக இருக்கின்ற தொழிலான விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தொழில்களை சுதந்திரமாகச் செய்யப் புறப்பட்டனர். அவ்வேளை காடுகளில் இருந்த யானைகள் மக்களைத்தாக்க முற்பட்டன. அத்துடன், இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி விவசாயத்தில் ஈடுபட்டதுடன், இருப்பிடங்களையும் அமைத்துக்கொண்டனர். இவை யானைகளால் தாக்கப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் யானைகளுக்கு தமிழில் சொல்வதை விடவும் சிங்களத்தில் பேசினால் அவை சொல் கேட்கின்றன என்றும் சகலரும் சொல்லக் கேள்விப்பட்டோம். இதன் காரணமாக யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களே பெருமளவில், பாதிக்கப்பட்டு வந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர் பற்று, கிரான், வாகரை உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே யானைகளின் அட்டகாசம் அதிகமாக இருக்கிறது. தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றமை குறித்து மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பிவருகின்றனர்.

யானைகளிலிருந்து பாதுகாப்பதற்காக தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டன. அவை சரியான பராமரிப்பு இன்மை காரணமாக பயனற்றுப் போயின. அதற்கு மக்களும் ஒரு காரணமாக சொல்லப்படுகின்றனர். அதாவது, மாவட்டத்தல் பல கிலோமீற்றர்கள் நீளமான பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவை முழுவதையும் வன பரிபாலனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பராமரித்துக் கொண்டிருக்க முடியாது. எனவே பொதுமக்கள் அருகிலிருக்கும் வேலிகளைப் பராமரித்து புற்கள் வளர்வதை தடுத்து, சுத்தம்செய்து பாதுகாக்கவேண்டும் என்பது அவர்களது கருத்தாக இருக்கிறது.

அத்துடன், விவசாயிகள் தவிர கால்நடை வளர்ப்பாளர்களும் ஒரு கவலையீனமான வகையிலேயே பாதுகாப்பு வேலிகள் தொடர்பில் செயற்படுகின்றனர். இவர்கள் கால்நடைகளுக்காக இந்த வேலிகளை வெட்டிவிடும் செயற்பாடுகளும் நடைபெற்றிருக்கின்றன. இதனால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

தீர்வு விரைவுபடுத்தப்படாத சரியான தீர்வு முன்வைக்கப்படாத எந்த ஒரு விடயமும் சிறந்ததொரு பயனைத் தந்துவிடுவதில்லை என்பதற்கு இந்த யானைத் தொல்லைப் பிரச்சினை நல்லதொரு உதாரணமாகும். குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதனைத் தவிர்த்து உறுதியான தீர்வுக்கு வழி தேடவேண்டும் என்பது இப்போதைய நிலையாக இருக்கிறது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பல்வேறு தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டு, அதனால் அம்பாறையில் இருந்து இயங்கிக் கொண்டிருந்த வனபரிபாலன சபையினர் மட்டக்களப்பிலும் தமது காரியாலயப்பிரிவு ஒன்றினைத்திறந்து செயற்படும் நிலை தோன்றியிருந்தது. அவர்கள் இப்போது தனி அலகாகவும் இயங்கிவருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள யானை அச்சுறுத்தலை இல்லாமல் செய்வதற்கு ஓரே வழி யானைகளைப் பிடித்து வேறு இடத்திற்கு கொண்டுவிடுதலே ஆகும். இதனைச் செய்துதருவதற்கு பத்தரமுல்லவில் உள்ள வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதே. அனைவரதும் வேண்டுகோளாக இருக்கின்றது.

மட்டக்களப்பின், கிரான், செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி, ஓட்டமாவடி, வாகரை, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள எல்லைக் கிராமங்களில் வசித்துவரும் அதிகமான மக்கள் தமது ஜீவனோபாயமாக விவசாயச் செய்கையை மேற்கொள்கின்றனர்.

மிக வறிய நிலையில் இருக்கும் இவர்களின் குடியிருப்புக்குள் காட்டு யானைகள் புகுந்து ஆட்களைக் கொன்றும், பயிர்களை அழித்தும், வீடு வாசல்களை சேதப்படுத்தியும் வருகின்றன. இதனால் அங்குள்ள மக்கள் சதாபீதியுடன் காலம் கழிக்கின்றனர். நாளாந்த கருமங்களிலும் ஈடுபடமுடியாமல் தவிக்கின்றனர் என்பதே வெளிப்படையாகும்.

காட்டு யானைகளின் தொல்லைகளுக்குத் தீர்வைத் தரும் வகையில், வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்கத் தாமதிக்கும் போதெல்லாம், மேட்டுநிலப் பயிர்களான சோளன், கச்சான் போன்றவற்றுடன் தென்னை, வயல் நிலங்களையும் கரும்பு போன்றவற்றையும் யானைகள் அழித்துவருகின்றன.

யானைகள் பலரது உயிரைக் குடித்துவிட்டமை காரணமாக இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப்பின்னர் வீட்டுக்கு வெளியில் வருவதையும் தவிர்த்துவருகின்றனர். இருந்தாலும் வீடுகளுக்குள் நுழைந்து உணவுப் பொருட்களை உண்ண முயற்சிக்கும் யானைகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள வழியில்லாது இருக்கிறது.

மின் தடுப்பு வேலி சுமார் 75 கிலோ மீற்றருக்கு மேல் அமைக்கப்பட்டாலும், அவை பராமரிக்கப்படாமையினால் வீணாகிப்போயுள்ளது. ஆனாலும் குறிப்பிட்ட பகுதிகளுக்கு வேலி அமைத்துப் பிரயோசனம் இல்லை என்றவகையில் தொடர்ச்சியான வேலியை அமைக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டு தற்போது அதற்கான

**"மட்டக்களப்பின் அனேகமான நிலப்பரப்பையுடைய பகுதிகளில் ஏற்படும் யானைகளின் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது மாவட்டத்தின் வாழ்வாதாரத்துக்கு முக்கியமான பகுதியாகும் என்ற அடிப்படையில் விரைந்த நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது விரைவுபடுத்தப்பட வேண்டும். அதேநேரம், யானைகளின் பிரச்சினைகள் தீர்வுக்குட்படுத்தும் விடயத்தில் மக்களின் அக்கறையின்மையும் தடைகளை ஏற்படுத்தும் என்றவகையில் மக்களின் ஒத்துழைப்புகள் இன்றியமையாததாகும்."**

நகர்வுகள் எடுக்கப்பட்டுவருகிறது.

யானைகள் சங்கிலிகளுடன் பொது மக்களின் பகுதிகளுக்குள் நுழைந்து தாக்கிவருகின்றமை காரணமாக வெளியேற்றவோ, வேலியினை விரைவாக அமைக்கவோ விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கத்தை பாதிக்கப்பட்டு வரும் மக்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

யானைத்தாக்கத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உயிரிழப்புக்கும் வீடுகள், பயிர்ச்சேதங்களுக்கு சிறியளவிலான பணத்தொகைகளை வழங்கி எந்தவிதமான முழுநிவாரணமும் கிடைத்துவிடப் போவதில்லை. என்பதனால், விரைந்த நிரந்தர முடிவுகள் எட்டப்படுவது சிறப்பானதாக இருக்கும்.

இதற்கிடையில் கடந்த வாரத்தில், அம்பாறை மாவட்டத்துக்கான யானை வேலியை மட்டக்களப்பு மாவட்ட பிரதேசத்துக்குள் அமைக்கும் நடவடிக்கையினை உடனடியாக இடைநிறுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையொன்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்தால் முன்வைக்கப்பட்டு இருந்தது.

அம்பாறை மாவட்டத்தினை சேர்ந்தவர்கள் மட்டக்களப்புக்குள் வேலி அமைப்பதாக மாகாணசபை உறுப்பினரின் கவனத்துக்கு அப்பிரதேச மக்கள் கொண்டுவந்ததை அடுத்து அப்பகுதிக்கு சென்ற மாகாண சபை உறுப்பினர் யானை வேலி அமைக்கும் பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலாளர் ஆகியோரிடம் தொடர்புகொண்டு இதுதொடர்பில் கவனத்துக்கு கொண்டுசென்றதாகவும் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கச்சக்கொடி சுவாமி மலை கிராம சேவையாளர் பிரிவுக்குள் அம்பாறை மாவட்டத்தினை சேர்ந்த வன ஜீவராசி திணைக்களம், ஊர்காவல் படையினர், இராணுவத்தினர் இணைந்து இந்த நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர்.

பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட 17ஆம் கட்டையில் இருந்து கச்சக்கொடி சுவாமிமலையில் உள்ள விகாரை வரையில் இந்த வேலிகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்தவர்களின் ஒப்பங்கள் உள்ள சுமார் 800 ஏக்கர் காணிகள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்படுகின்றன.

உண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கான யானை வேலி அமைக்கப்படவேண்டுமானால் பதுளை சந்தியில் இருந்து மயானம் வரையான பகுதி மட்டுமே அம்பாறை மாவட்டத்துக்குரிய பகுதியாகவுள்ளது. ஆனால் அதனையும் தாண்டி எழுந்தமானமாக இந்த யானை வேலிகள் அமைக்கப்படுகின்றன. இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுசென்றேன். யானை வேலிகள் அமைப்பது தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர். இதனை உடனடியாக தடுத்துநிறுத்துமாறு அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்பது துரைரெட்ணத்தின் கருத்தாக இருக்கிறது.

கடந்த மாதத்தின் நடுப்பகுதியில் (டிசம்பர்) சுமார் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் யானைகளின் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளனர். இந்தக் குடும்பங்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. இதனையடுத்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்த யானையை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் இந்த யானைகள் அகற்றப்படவில்லை.

மாவட்டத்தில் யானைகள் தொடர்ந்தும் பிரச்சினைகளாக உள்ளன என்ற அடிப்படையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேசங்களிலுள்ள காட்டுப்பகுதி யானைகளின் வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை என்பதே தெரிகிறது. அந்த அடிப்படையில் இந்த யானைகளை சரணாலயங்களில் கொண்டு சென்று விடுவதே பொருத்தமாக இருக்கும் என்பது மக்களது கருத்தாக இருக்கிறது.

மட்டக்களப்பின் அனேகமான நிலப்பரப்பையுடைய பகுதிகளில் ஏற்படும் யானைகளின் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது மாவட்டத்தின் வாழ்வாதாரத்துக்கு முக்கியமான பகுதியாகும் என்ற அடிப்படையில் விரைந்த நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது விரைவுபடுத்தப்பட வேண்டும். அதேநேரம், யானைகளின் பிரச்சினைகள் தீர்வுக்குட்படுத்தும் விடயத்தில் மக்களின் அக்கறையின்மையும் தடைகளை ஏற்படுத்தும் என்ற வகையில் மக்களின் ஒத்துழைப்புகள் இன்றியமையாததாகும்.



## விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா

# லட்டு தின்ன ஆசையா?

பங்களாதேஷ் நாட்டில் நிலவும் அரசியல் குழப்பநிலைகள், உற்சாகமானதொரு சுற்றுப்போட்டியொன்றை பங்களாதேஷ் கிரிக்கெட் ரசிகர்கள் இழக்கப்போகிறார்கள் போலத் தெரிகிறது.

முன்னதாக 2014 மார்ச் மாதத்தில் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப்போட்டிகள் பங்களாதேஷின் - மிர்பூர், சிட்டாகொங்; சிலெட் நகரங்களில் நடப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் டிசம்பர் 8ஆம் திகதி சிட்டகொன்சில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தால் 19 வயதுக்குட்பட்ட தமது கிரிக்கெட் அணியை மேற்கிந்தியத் தீவுகள் திரும்பப் பெற்றுக்கொண்டது. இதேபோல குழப்பநிலைகள் தொடர்ந்தால் நாங்கள் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு வரமாட்டோம் என்று பாகிஸ்தானும் கூறிவிட்டது.

இந்நிலையில் ஐ.சி.சி வேறு வகையில்தான் யோசிக்க வேண்டியுள்ளது போலத்தெரிகிறது. அப்படியாயின் போட்டிகள் கல்கத்தா ஈடன் சார்ட்ன் மைதானத்துக்கும் ஜார்கண்டிலுள்ள ராஞ்சி மைதானத்துக்கும் மாற்றப்படும் நிலையே காணப்படுகின்றது.

இந்திய கிரிக்கெட் சபை இதற்கு சம்மதித்தாற்போலத்தான் தெரிகிறது. ஐ.பி.எல் போட்டிகள் இந்தியத் தேர்தலை ஒட்டி வேறு தேசங்கள் தேடிப் போகும் நிலைகண்டு, இந்திய ரசிகர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், எதிர்பாராத லட்டாக, இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம் இந்திய ரசிகர்களுக்கு வாய்ப்பாகப் போகிறது. ஆமாம் என்றுதானே மகிழ்ச்சியுடன் பதில் அளிப்பார்கள் இந்தியர்கள்.

இதேவேளை பெப்ரவரியில் இலங்கை அணி, பங்களாதேஷில் மேற்கொள்ளவுள்ள சுற்றுப்பயணம் மற்றும் இந்திய, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஸ் அணிகள் கலந்துகொள்ளும் ஆசியக் கோப்பை ஒருநாள் போட்டிகளுக்கு என்ன நடைபெறும் என்று தற்போதைக்கு ஒன்றும் கூறமுடியவில்லை.



# அங்கீகாரம்

கணிசமான காலம் டெஸ்ட் பந்துவீச்சாளர் தரவரிசை ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருந்த தென்.ஆபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் தற்போது இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட அவரது அணியைச் சேர்ந்த வேர்ணன் பிலென்டர் தரவரிசை ஒன்றைக் கைப்பற்றியுள்ளார். இந்தியாவிற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஏழு விக்கெட்டுக்கள் சாய்ந்ததன் மூலம் இந்தப் பெறுபேறு கிடைத்துள்ளது. இந்த ஆட்டத்தில் ஸ்ரெய்ன் ஒரு விக்கெட் மாத்திரமே பெற்றிருந்தார். பிலென்டர் தரவரிசை ஒன்றைப் பெற்றது மாத்திரமன்றி இன்னொரு சாதனையையும் பதிவுசெய்துள்ளார். அதிவேகமாக 100 விக்கெட்டுக்கள் சாய்த்த முதல் தெ.ஆபிரிக்க பந்துவீச்சாளர் என்ற சாதனையை அவர் பதிவுசெய்துள்ளார். இவர் நூறு விக்கெட்டுகள் எடுக்க, எடுத்துக்கொண்ட டெஸ்ட் போட்டிகள் பத்தொன்பது மட்டுமே. தரவரிசை ஒன்றைப் பெற்றுக்கொண்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

மேலும் ஸ்ரெய்னுடன் இணைந்து பந்து வீசியது என்பது மிகவும் கௌரவமானதாகவும் நான் நினைக்கிறேன். எனது அணிக்கு நிறையப் பங்களிப்புச் செய்யக் கிடைத்தமைக்கும் நான் அதிர்ஷ்டம் செய்தவனாக இருக்கிறேன். மேலும் ஸ்ரெய்ன் ஓயாது உழைக்கும் ஒரு பந்துவீச்சாளர், அதனானலேயே தொடர்ச்சியாக அவர்களால் அணிக்குச் சிறந்த பெறுபேறுகளைக் கொடுக்க முடிந்தது என்றும் கூறியுள்ளார்.

டெஸ்ட் தரவரிசையில் பந்துவீச்சில் தரவரிசை ஒன்றைப் பெறும் ஏழாவது வீரர் பிலென்டர் ஆவார். முன்னதாக ஓப்ரிபோக்னர், ஹியூடேபீல்ட், பீட்டர் பொலக் ஆகியோர் இந்த முதல் தரத்தை எட்டியிருந்தவர்கள். இவர்கள் 1914 -1970 காலத்தில் சாதித்தவர்கள்.

அண்மைக் காலம் என்றால் அலன்டொனல்ட், ஷோண் பொலக், அடுத்து வேர்ணன் பிலென்டர் வருகிறார்.

# விடை பெறுகிறார்



தென்.ஆபிரிக்க கிரிக்கெட் ஜாம்பவான் ஜக்கலிஸ் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். அண்மைக் காலங்களில் ஓய்வு பெற்ற வீரர்கள் வரிசையில் ரிக்கி பொன்ரிங், மற்றும் சச்சினுக்கு இணையாகப் பேசப்பபடும் ஒரு நபர் இவர் மட்டுமே. முப்பத்தெட்டு வயதான கலிஸ் 18 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் 165 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 13174 ஓட்டங்களும் 292 விக்கெட்டுக்களும் எடுத்தவர்.

டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கையைப் பொறுத்தவரை இவர் தெ.ஆபிரிக்க அதிகூடிய ஓட்டங்கள் பெற்றவராகவும், டெஸ்ட் வரலாற்றில் நான்காவது இடம்பெற்றவராகவும் இருக்கிறார். முதல் இடத்தில் சச்சின், அடுத்து ரிக்கிபொன்டிங் மற்றும் ராகுல் டிராவிட் மூவருமே இவருக்கு மேலே நிற்பவர்கள். இவரது டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கையில் 44 சதங்களும் 58 அரைச்சதங்களும் அடக்கம். 2015 பெப்ரவரியில் அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் ஒன்றுக்காக இங்கு வரவிருக்கும், நிலையில் இந்த முடிவை எடுப்பது எனக்குக் கஸ்டமானதாகவே இருந்தது. இருந்தும் சரியான நேரத்தில் எடுத்த சரியான முடிவென்றே இதனை நினைக்கிறேன் நான். தென்.ஆபிரிக்க கிரிக்கெட்டுக்கு என்னால் இயன்ற பணியைச் செய்திருக்கிறேன் என்றே நம்புகிறேன்.

நான் முற்றுமுழுதாக கிரிக்கெட்டை விட்டு விலகவில்லை. எனது உடற்தகுதியும், விளையாட்டுத் திறனும் உயர்பட்சமாக இருக்கும்நிலையில் ஒருநாள் போட்டிகளில் விளையாடவே உத்தேசித்துள்ளேன் என்று ஜக்கலிஸ் கூறியுள்ளார்.

கலிஸ் இங்கிலாந்தின் மிடிலெசெக்ஸ் மற்றும் கிளமோர்கன் பிராந்திய அணிகளிலும் 1990களில் வெற்றிகரமாக விளையாடியவர்.

இவருக்கு 2015 உலகக் கிண்ண ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் சந்தர்ப்பம் நிறைய இருப்பதாகவே தென்.ஆபிரிக்க பயிற்றுனரும், ஏனையோரும் நம்புகின்றனர்.

இதுவரையில் 325 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 11574 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். பதினேழு சதங்களும், 86 அரைச்சதங்களும் பெற்றுள்ளார். இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் கலிசின் இறுதியும், 166ஆவதுமான டெஸ்டாக இருக்கும்.

# இது வேஷம்



இங்கிலாந்து அணியின் சுழல் பந்துவீச்சாளர் கிரேம் சுவானும் அதிரடியான கருத்துக்கள் கூறுவதில் வல்லவர். இதனால் சிக்கல்களிலும் மாட்டிக்கொள்பவர். ஆனால் தளராத மன உறுதியும் கிரிக்கெட்டில் மிகத் திறமையும் கொண்டவர். அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஆஷஸ் தொடரில் இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மீதமிருந்த நிலையில் 3-0 என்ற தோல்விநிலையில் இங்கிலாந்து வீரருக்கு நிறையவே அழுத்தங்கள் இருந்தன என்பது உண்மை.


இதற்கு சுவானும் உட்பட்டுப் போனார். இந்த நிலையில் தான் சுவான் தடாலடியாக ஒரு முடிவை அறிவித்தார். அதாவது இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மீதமிருந்த நிலையில் தான் இங்கிலாந்து அணியில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவிப்பை வெளியிட்டார். இது இங்கிலாந்து அணியில் மட்டுமல்ல சர்வதேச கிரிக்கெட் உலகிலும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

என்ன இருந்தாலும் அணி நொந்து போயுள்ளநிலையில் இவர் இப்படி அணியைக் கைவிடலாமா என்ற கேள்விகள் எழுந்தன. இதற்கிடையில் ''சிலர் தங்கள்நிலை தெரியாமல் நடந்துகொள்கிறார்கள்'' என்றொரு அறிக்கையை சுவான் விட, அது இன்னொரு சர்ச்சையை உருவாக்கியது. அந்த விமர்சனம் இங்கிலாந்து வீரர்களைக் குறிப்பாக கெவின் பீட்டர்சனை குறி வைத்துத்தாக்கியுள்ளார் என்று கண்டனங்கள் எழுந்தன. இந்த நிலையில் அணித் தலைவர் அலிஸ்ரர் குக், தான் சுபானுடன் பேசியதாகவும், அந்தக் கருத்தில் அவர் கூறவில்லை என்று கூறினார் என்றும், எனவே விடயம் அத்தோடு முடிந்துவிட்டது என்றும் சமாளித்திருக்கிறார். எது எப்படியோ சுவானின் திறமையில் யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் இவரது திடீர் விலகலுக்கு நாங்கள் புரிந்துகொண்டதற்கும் மேலால் ஏதேதோ காரணங்கள் இருக்கவேண்டும். இருந்தபோதிலும் என்னதான் அவருடைய பக்கத்துக்கு நியாயங்கள் பலமாக இருந்தாலும் (சிலவேளை அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் பார்வையாளராக வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட) ஐந்தாவது டெஸ்ட் போட்டியின் முடிவின் பின்பே தனது விலகல் விடயத்தைக் கூறியிருக்கவேண்டும்.

அதுதான் ஒரு தேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வீரனுக்கான அழகாக இருந்திருக்கும். இப்போது சுவான் நடந்துகொண்டுள்ள முறை கிரிக்கெட் மற்றும் விளையாட்டு நாகரிகக் கோட்பாடுக்குச் சமாந்திரமாகச் செல்கிறதா என்பது விடைதெரியாத வினாதான்.

# காத்திருப்பு



பூநகரி, து.ஷாந்.

**அன்று** நிசாந்தனுக்கு மனம் இருப்புக் கொள்ளவே இல்லை. அவனுக்கு நாளை நடக்க இருக்கும் சம்பவத்தை நினைத்துப் பார்க்க ஒரு புறம் சந்தோசமாயும் மறுபுறம் பயமாகவும் இருந்தது. இவ்வாறு நாளை நடக்கவிருக்கும் சம்பவம்தான் என்ன? அவனது இந்த மனக் குழப்பத்திற்கு காரணம்?

வேணு! வேணு வேறு யாருமல்ல நிசாந்தன் உயிருக்கு உயிராகக் காதலிக்கும் நிசாந்தனின் காதல் தேவதை. வேணுவைப் பற்றிச் சொல்வதென்றால் சுமாரான அழகு, அடக்கம், அமைதி நிறைந்த ஒரு பெண் பதுமை என்று சொல்லலாம். இந்த அமைதியான சுபாவம் எந்தப் பெண்ணையும் ஏறிட்டுப்பார்க்காத நிசாந்தனையே ஈர்த்தது.

* * * * * * *

நிசாந்தன் தனது இன்ப அவஸ்தையில் தனது காதல் வரலாற்றை மன ஏட்டிலிருந்து புரட்டினான்.

நிசாந்தனது குடும்பம் ஓர் நடுத்தர வசதியுள்ள குடும்பம். இவன் க.பொ.த உயர்தரம் எழுதி பல்கலைக்கழத்தில் தெரிவாகிய ஒரு மருத்துவபீட மாணவன். இவன் தனது பல்கலைக்கழக கல்விக்காக யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். பல்கலைக்கழகம் வந்த முதல் நாளன்றே அவனது மனதினுள் ஏதோ இனம் புரியாத சலனம் ஏற்பட்டது. அவனால் அதை என்னவென்று சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆண்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே சத்தம் போட்டுப்பேசுவதும் நாகரிகம் என்ற பெயரில் கலாசாரத்திற்கு ஒவ்வாத ஆடைகளை அணிந்துகொண்டு திரியும் சில பெண்களுக்கு மத்தியில் அமைதியாக நிற்கும் அந்தப் பெண்ணை பார்த்த அந்த நொடியிலேயே அவனது நெஞ்சில் காதல் மலர் மலர்ந்தது.

அதுவரை காதல் பாடல்கள், காதல் கவிதைகள் ஏன் காதல் என்ற வார்த்தையே பிடிக்காமல் இருந்தவன் காதல் பாடல்களை ரசித்து கேட்கத் தொடங்கினான். கவிதை கவிதையாய் எழுதினான். அவனைப் பார்ப்பதற்காகவே ஒவ்வொரு நாளும் விடியற்காலையிலே சென்று அவளின் வருகைக்காக காத்திருப்பான்.

அவள் காணாத நேரத்தில் அவளையே பார்த்துக் கொண்டிருப்பானே தவிர அவளிடம் சென்று தனது காதலை சொல்லப் பயந்தான். ஒருவேளை அவள் எனது காதலை மறுத்துவிட்டால்! என்ன செய்வது? என்று அவனுக்குப் பயம்.

இருந்தும் அவன் அவளுடன் நட்பாகப் பழக முயற்சித்தான். முதலில் கண்டால் ஒரு சிரிப்பு, வணக்கம் என்பவற்றுடன் ஆரம்பித்த பழக்கம் தமது சொந்தப் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ளுமளவிற்கு நெருக்கம் அதிகரித்தது.

இருந்தும் நிசாந்தன் தனது காதலை வேணுவிடம் சொல்லவே இல்லை. எதற்கும் ஒரு காலம் வரும் என்று காத்திருந்தான்.

ஆனால் அதற்கு அவசியமில்லை என்றே வேணுவின் நடவடிக்கைகள் நிசாந்தனை எண்ணச் செய்தன. அவளும் தன்னைக் காதலிக்கின்றாள் என நிசாந்தன் ஊகித்துக் கொண்டாலும் பெண்ணின் மனதுதான் புரியாத புதிராயிற்றே. இதை எவ்வாறு முடிவு பண்ணுவது என யோசித்தவனுக்கு சில சம்பவங்கள் நிழலாடியது.

வேணுவின் பேச்சில் தென்பட்ட உரிமை, அவன் விரிவுரைக்கு வராதபோது அவனைத் தேடுவது; ஏன் அவன் ஒரு கிழமை வீட்டிற்குப் போய் வந்ததற்கு "ஏன் என்னிடம் சொல்லாமல் போனீங்க?", "நான் சரியாப் பயந்திட்டன்" என்று கூறியமை. எல்லாவற்றையும் கொண்டு அவள் தன்னைக் காதலிக்கிறாள் என அர்த்தம் செய்து கொண்டான்.

இருந்தும் வருகின்ற தைப்பொங்கலன்று வேணுவின் பிறந்தநாள். அன்று தனது காதலை அவளிடம் சொல்லலாம் எனக் காத்திருக்கிறான்.

* * * * * * *

அவன்; நாளை தைப்பொங்கல். தனது காதலை வேணுவிடம் எப்படியும் சொல்லிவிடவேண்டும் அவள் என்னை ஏற்றுக்கொள்வாளா? என்ற ஏக்கத்துடன் நாளைய விடியலுக்காக காத்திருக்கிறான்.

[யாவும் கற்பனை]

சிரிப்பதற்கு...

## தவறணையில் இருவர்

ஒரு சாராயத் தவறணையில் அளவிற்கு மிஞ்சிக் குடித்துவிட்டு தள்ளாடித் தள்ளாடி நடக்க முடியாத நிலையில் இருவர் விழுந்து கிடந்தனர்.

**ஒருவர்** : நான் உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன்.

**மற்றவர்** : எனக்கும் உங்கள் முகத்தைப் பார்த்த மாதிரியிருக்கு.

**ஒருவர்** : நான் வெள்ளவத்தையில் இருக்கிறது? நீங்கள்?

**மற்றவர்** : நானும் அங்க தான் இருக்கிறது.

**ஒருவர்** : நான் உருத்திரா மாவத்தையில் 57 ஆம் ஒழுங்கையில் இருக்கிறேன்.

**மற்றவர்** : (வெறியில் நானும் அந்த ரோட்டில் தான். கிட்ட வந்திட்டியள்.

**ஒருவர்** : 7ஆம் நம்பவர் 6 ஆம் மாடியில் 5ஆம் நம்பரில்

**மற்றவர்** : ஐயோ நானும் அங்கேதானே இருக்கிறேன்.



இந்த உரையாடலைக் கேட்டு அங்கு குடித்துக்கொண்டு நின்றவர், இவை என்ன கதைக்கினம் ஒன்றும் விளங்கவில்லை என்று கேட்க, கடைக் காரன், தகப்பனும் மகனும் நிறைவெறியில் ஒருவரை ஒருவர் யாரென்று தெரியாமல் கதைக்கினம் என்றார்.

நூல் விமர்சனம்

# தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம்



வணிகமயமாக்கப்பட்ட வலிகள் என்ற பெயரிலான நூல் ஒன்று வெளிவந்துள்ளது. ஜீவநதியின் 27 ஆவது வெளியீடாக வெளிவந்திருக்கும் இந்நூலில் 16 கட்டுரைகள் அடங்கியுள்ளன. ஜீவநதியில் வெளிவந்த 15 கட்டுரைகளையும் ஷதவிர இல் வெளிவந்த ஒரு கட்டுரையையும் தொகுத்து ஜீவநதி இந்நூலை வெளியிட்டுள்ளது.

நுங்கு வழிகள், நளதமயந்தி, புழுவிற்கும் சிறகு முளைக்கும், ஆகிய கவிதைத் தொகுப்புகளையும் பின் நவீனத்துவம் தொடர்பான வித்தியாசமான சிறுகதைகளையும் எழுதிய இ.சு.முரளிதரன் கட்டுரைகளைத் தொகுத்து இந்நூல் வெளிவந்துள்ளது. இக்கட்டுரைத் தொகுப்பில் வெளிவந்த 16 கட்டுரைகளையும் அதன் பொருள் அடிப்படையில் மூன்று வகையினதாக வகுத்து நோக்கமுடிகிறது.

சினிமாவில் வணிகமயம் புகுந்துள்ள தன்மையினை ஒவ்வொரு துறைகள் ஊடாக வெளிப்படுத்தும் ஏழு கட்டுரைகளையும், வணிகமயமாக்கலைத் தாண்டி ஒளிர்விடும் தமிழ்ச் சினிமா தொடர்பான விடயங்களை நான்கு கட்டுரைகளிலும் வணிகநோக்கை விடுத்து உலகத்தரமான சினிமா தமிழ் உருவாகவேண்டும் என்கின்ற முனைப்பில் பிறமொழித் திரைப்படங்களில் சிறந்த திரைப்படங்கள் குறித்த் விடயங்கள் ஐந்து கட்டுரைகளிலும் என 16 கட்டுரைகளையும் மூன்றுவிடயப் பரப்பில் உள்ளடக்க முடிகின்றது.

தமிழ் திரைப்படங்கள் பெயர் வைத்தல் என்பது வணிகநோக்கில் அமைந்திருக்கும் தன்மை தமிழ் திரைப்படத் தலைப்புகள் ஒரு குறும்பார்வை என்ற கட்டுரையின் ஊடாக எடுத்துக் கூறப்படுகின்றது. காலந்தோறும் தமிழ்த் திரைப்படங்கள் தலைப்புக்கள் சூத்திரம் பாரினில் சுத்திக்கொண்டிருக்கும் தன்மையை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

தரமான தலைப்புக்களோடு எதிர்காலத்தில் தமிழ்ச் சினிமா வெளிவருமா என்ற ஏக்கத்தோடு நிறைவுசெய்கிறது.

தமிழ்த் திரைப்படங்களில் நகலெடுப்பு என்ற இன்னொரு கட்டுரை கமல்ஹாசனை முன்வைத்து எழுதப்பட்டுள்ளது. சினிமா சார்ந்த தொழில்நுட்ப அறிவும், ஓரளவு இலக்கிய பரிச்சியமும் உடைய கமலஹாசன், உலக சினிமா பற்றிய தேடல் மிகுந்தவர். இத்தகைய தேடலின் விளைவாக உன்னத திரைப்படங்களை உருவாக்குவதை விடுத்து வணிகநோக்கில் நகல் எடுப்பதில் அதிக நாட்டம் கொண்டுள்ள தன்மையை அவரது படங்கள்மூலம் அலசுவதாக அமைகிறது.

வணிக வெற்றியை மட்டுமே மையப்படுத்தி வருகின்ற சினிமாக்கள் குறியீடுகளையும் அதற்கேற்றாற் போல கையாளுகின்றன என்ற விடயத்தை தமிழ்த் திரைப்படங்களில் குறியீடு ஆழமறியாத ஒரு தேடல் என்ற கட்டுரை பொருளாகக் கொண்டுள்ளது.

''தமிழ்த் திரைப்படங்களில் கலை இயக்குநர்களின் வகிபாகம்'' என்றும் கட்டுரை கலை இயக்குநர்களின் வணிகநோக்கோடு பணியாற்றுவதைக் சுட்டுகின்றது. கலை இயக்குநரின் உழைப்பு பார்வையாளரின் புரிதல் வியூகத்தை விட்டு விலகிவிடுவதால் உரிய அங்கீகாரத்தை கலை இயக்குநர் பெற முடியவில்லை.

வர்மக்கலையும் தமிழ் சினிமாவும் கால்கோள் நிலைக் குறிப்புகள் என்ற கட்டுரை வர்மக்கலையை வணிகநோக்கோடு காட்சிப்படுத்தியிருக்கும் பாங்கினை விபரிக்கின்றது. தமிழ் சினிமாக்களில் நோக்கு வர்மம், தட்டுவர்மம் குறித்த படிமங்கள் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றது என்பதை ஆய்வு செய்கிறது.

கட்டுரைத் தொகுப்பின் தலைப்பாக அமைந்த தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம் வணிகமயமாக்கப்பட்ட வலிகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அமைந்துள்ளது. ஈழம் குறித்த பாசாங்குத்தனமற்ற படைப்புருவாக்கம் நிகழாத சூழலில், இதுவரை வெளியான விண்ணான விம்பங்களின் வீரியத்தை இக்கட்டுரை பதிவுசெய்ய முயல்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இந்தவகையில் தமிழ் சினிமா வணிக நோக்கில் அமைந்த தன்மையை கூறும் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இந்த வரிசையில் கனவுருவ வரைபுகளால் கருத்தியல் திருட்டு என்ற கட்டுரை அனைத்துக் கலைச் செயற்பாடுகளிலும் வணிகமயமான தயாரிப்பாக அமைந்த ''Ineeption" என்ற ஆங்கில திரைப்படம் தொடர்பாக ஆராய்வதாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மணிரத்திரனம் சினிமாவில் நிஜமாந்தர்களின் நிழல் என்ற கட்டுரை மணிரத்தினத்தின் திறமைகளை அலசுகின்றது. சீரியசான திரைக்கதையில் சமரசப் பணியோடு ஜனரஞ்சக மசாலாக்களைக் கலந்துவெற்றியைத் தொடும் நுட்பத்தைக்கொண்ட மணிரத்தினத்தின் இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த வகையில் ஒளிர்வூட்டும் வகையில் அமையும் தமிழ் சினிமா தொடர்பான கட்டுரைகள் நான்கு இடம்பெறுகின்றன. சினிமாவின் உன்னதங்களை எடுத்துச்காட்டும் வகையில் யப்பான், ஈரான், ஆப்கானிஸ்தான், சிங்களம், இத்தாலி போன்ற மொழிகளில் வெளியான திரைப்படங்கள் தொடர்பான விமர்சனங்களை உள்ளடக்கியதாக ஐந்து கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

இந்தவகையில் Rashomon (யப்பான்), children of heaven (ஈரான்), புறஹந்த களுவற(சிங்களம்), ஒசாமா (ஆப்கானிஸ்தான்), Bieyele Thief (இத்தாலி) போன்ற உன்னத திரைப்படங்கள் தொடர்பான விமர்சனங்கள் அமைகின்றன.

— பூ.நகுலன் —

# வறுமை தாண்டவமாடும் மட்டக்களப்பு?

"**யுத்தம்** முடிவடைந்து அபிவிருத்திக்காக 50 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ள நிலையில் வறுமை தாண்டவமாடும் ஒரு மாவட்டமாக மட்டக்களப்பு எப்படி முதலிடத்திற்கு வந்தது?"

மாவட்ட அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஏறாவூர் நகர பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமூகநலப்பணிகளுக்கு உபகரணங்களும் தளவாடங்களும் கையளிக்கும் நிகழ்வு ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

"நாடு பூராகவும் வறுமை குறைவடைந்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் வறுமையில் உழன்று உச்ச நிலைக்குச் சென்றிருப்பது தலைக்குனிவை ஏற்படுத்தியிருக்கிறது" என்றும் அவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

"யுத்தம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்காக 50 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை அரசு செலவிட்டுள்ள நிலையில் வறுமை தாண்டவமாடும் ஒரு மாவட்டமாக மட்டக்களப்பு முதலிடத்திற்கு வந்துள்ளது.

யுத்தம் இடம்பெற்றபோது எமது மாவட்டத்தின் வறுமை நிலைமை 12 சதவீதமாகத்தான் இருந்தது. யுத்தம் நிறைவடைந்து 6 ஆண்டுகள் முடிந்துவிட்ட தறுவாயில் எமது வறுமை நிலைமை 20 சதவீதத்தை எட்டிப்பிடித்திருக்கின்றது.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இந்த நிலைமையை உற்றுக் கவனித்தால் எங்கோ ஒரு பிரச்சினை இருப்பதை நாம் அவதானிக்க முடியும். இதனைக் கண்டறிவதற்கு ஆழமான ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்" என்றும் அவர் கூறினார்.

வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சிறுவர் பூங்காக்கள் என்று பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஆனால் வீடுகளிலே வாழ்கின்ற மக்கள் வறுமையோடு காலங்கழிக்கின்றார்கள். வறுமையை நாங்கள் போக்காத வரையிலே எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் கூறினார்.

வறுமையைப் போக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த 2014 ஆம் ஆண்டை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற ஆண்டாகப் பிரகடனம் செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றாரவர்.

எமது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழே நேரடியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 1400 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கமநல சேவை அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், திவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் இதைப்போல இன்னும் எமது அமைச்சின் கீழ்வரும் எல்லா உத்தியோகத்தர்களையும் அதிகாரிகளையும் அழைப்பித்து எமது அமைச்சைச் சேர்ந்த துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்டு கலந்துரையாடி இவர்களுக்கு பொருளாதார அபிவிருத்தியை நோக்கி எவ்வாறு பயணிக்கலாம் என்பது பற்றி பயிற்சியளித்திருக்கின்றோம். அதன் மூலம் இவர்களைக் கொண்டு அபிவிருத்தி மாற்றங்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

யுத்தம் இடம்பெற்றபோது கடற்றொழில், விவசாயம் என்று எதுவுமே செய்ய முடியாதிருந்தது, பசளை, எரிபொருள், உழவு இயந்திரங்கள் என்பனவற்றை எடுத்துச் செல்லமுடியாது, சுதந்திரமாக நடமாட முடியாது இவ்வாறெல்லாம் நெருக்கடிகளை எதிர்கொண்டும் நாம் அப்போது வறுமையில் 12 சதவீதமாகத்தான் இருந்தோம்.

மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருக்கும் நானும் இந்த நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

ஆகவே பொறுப்புக் கூறவேண்டிய நாம் எல்லோருமாகச் சேர்ந்து மனிதாபிமான அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்குப் இர்வு பகலாகப் பாடுபடவேண்டும். ஆகவே அடுத்துவருகின்ற மூன்றாண்டுகளில் இந்த வறுமையை ஆண்டொன்றுக்கு ஐந்து வீதம் என்கின்ற அடிப்படையில் குறைத்துவிட திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றோம்.

2014 ஜனவரி முதல் வாரத்தில் இருந்து ஒவ்வொரு பிரதேசசெயலகம் ரீதியில் தாண்டவமாடும் இந்த வறுமையை ஒழிப்பதற்காக கிராமம் கிராமமாகச் சென்று அடையாளம் கண்டு அதற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து செயற்படத் தீர்மானித்துள்ளோம். எடுக்கப்படும் தீர்மானங்கள் உரிய காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவ்ட்டத்திலே காத்தான்குடிதான் ஆக வறுமை குறைந்த பிரதேச செயலகப் பிரிவு, கிரான் பிரதேச செயலகப் பிரிவு தான் ஆக வறுமையான இடம். அரசடிக் கிராம சேவையாளர் பிரிவு வசதியான இடமாகவும் ஊத்துச்சேனை கிராம சேவையாளர் பிரிவு மிகவும் வறுமையான இடமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(03 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## "அமெரிக்கா அச்சம் கொள்கிறது..."

சட்டலைட் மூலம் ட்ராக்கிங் செய்யும் சிஸ்டம் பற்றி உங்களுக்கு எந்தளவுக்கு பரிச்சயம்? இன்று உலக அளவில் இரு சிஸ்டங்கள் மட்டுமே பாவனையில் உள்ளன. முதலாவது சிஸ்டம் உங்களுக்கு நன்கு தெரிந்ததுதான். அதுதான், GPS (Global Positioning System). இப்போது கார்கள் மற்றும் செல்போன்களில்கூட வந்துவிட்டது. அமெரிக்க சிஷ்டம் அது.

அமெரிக்க சிஷ்டம் GPS போல உள்ள இரண்டாவது சிஸ்டத்தை ரஷ்யா வைத்திருக்கிறது. அதுதான், நாம் மேலே குறிப்பிட்ட GLONASS. ஐரோப்பிய ஒன்றியம் கலிலியோ (Galileo positioning system) சிஸ்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அது, 2020ஆம் ஆண்டுதான் பரணமாக இயங்கத் தொடங்கும். அதேபோல சீனாவும், பெய்டோ (Beidou navigation system) சிஷ்டத்தை 2020ஆம் ஆண்டு கொண்டுவரப்போகிறது.

மொத்தத்தில், இன்று களத்தில் உள்ளவர்கள் அமெரிக்காவும், ரஷ்யாவும்தான். இந்த இரு சிஷ்டங்களும், பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. அதேநேரத்தில், அமெரிக்கா தமது இராணுவ விவகாரங்கள், உளவுத்துறை விவகாரங்கள் எல்லாவற்றுக்கும் GPS சிஸ்டத்தின் சங்கேத ட்ரான்ஸ்மிஷனை பயன்படுத்துகிறது. ரஷ்யாவும் GLONASS மூலம் அதையே செய்கிறது.

அமெரிக்க GPS சிஷ்டத்தின் சிக்னல்களை உபயோகிக்க ரஷ்யா உட்பட, கிட்டத்தட்ட அனைத்து நாடுகளுமே அனுமதி கொடுத்துள்ளன. காரணம், அதுதான் பிரபல சிஸ்டம். GPS இல்லாமல் யாரும் இயங்க முடியாது என்ற நிலை உள்ளது. ரஷ்ய சிஸ்டத்தை தமது நாட்டில் தடை செய்யப் பார்க்கிறது அமெரிக்கா.

இப்போது புரிந்திருக்கும் இதன் பின்னணி.

அமெரிக்கா இந்த விஷயத்தில் இறுக்கமாகவே நிற்கிறது. ரஷ்யா அதற்கு என்ன பதிலடி கொடுக்க போகிறது என்பது இன்னமும் தெளிவாக தெரியவில்லை. அமெரிக்க GPS சிஷ்டத்தின் சிக்னல்களை ரஷ்யாவில் தடைசெய்ய முடியும். ஆனால், அப்படி செய்தால், பெரிதாக எதுவும் நடந்துவிடாது.

ஆனால், ரஷ்யாவின் கைகளில் இப்போது 'எட்வார்ட் ஸ்னோடன் என்ற ட்ரம்ப் கார்ட் இருக்கிறது. புத்தாண்டில் அந்த ட்ரம்ப் கார்ட்டை எப்படி போட்டு விளையாடப் போகிறதோ ரஷ்யா?

## இளவரசரின் கழுத்தில் விழுகிறது தூக்கு?

சவூதி இளவரசர் ஒருவர் தன்னுடன் தங்கியிருந்த சக சவூதி அரேபியர் ஒருவரை கொலை செய்துவிட்டார். பொதுவாக சவூதியில், கொலையாளி சார்பில், கொலை செய்யப்பட்டவர் குடும்பத்துக்கு ஒரு பெருந்தொகையை கொடுத்து விட்டால் அவர்கள் மன்னித்துவிடுவார்கள். கொலையாளி தண்டனையில் இருந்து தப்பிவிட முடியும்.

ஆனால் இந்த வழக்கை பொறுத்தமட்டில் இளவரசர் தரப்பில் தரக்கூடிய தொகையை பெற்றுக்கொண்டு, மன்னிப்பு வழங்கக் கொலை செய்யப்பட்டவர் குடும்பம் முன்வரவில்லை.

இதையடுத்து சவூதி இளவரசருக்கு மரண தண்டனையை நிறைவேற்றும் நிலை உருவாகி உள்ளது. இதற்கான அனுமதியை சவூதி பட்டத்து இளவரசர் சல்மான் வழங்கி விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

சவூதி அரேபியாவில் கொடிய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது வாடிக்கை. இந்த ஆண்டில், கடந்த மே மாதம் வரையில் அங்கு 47 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பொதுவாக மன்னர் குடும்பத்தில் யாருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதில்லை. வெகு அபூர்வமாகத்தான் இது நடக்கும்.

# சுயவிமர்சனம் செய்துகொள்ளுமா மலையக மக்கள் முன்னணி?!

**1990** ஆம் ஆண்டுகளில் வேகமாக தொடங்கி வேகமாக செல்வாக்கு சரிந்த கட்சியாக ஆகியது மலையக மக்கள் முன்னணி. அதன் அடிப்படை காரணங்களில் ஒன்று 1994இல் சந்திரிக்கா அரசுடன் இணைந்தது. அடிப்படை அரசியல் விடுதலைக்கான கொள்கைகளைக் கொண்டிருந்த கட்சி பின்னர் வெறும் "தேர்தல் அரசியலுக்காக" தன்னை தயார்படுத்தும் குறுகிய நிலைக்கு தள்ளப்பட்டது.

கட்சியை அரச சார்புக் கட்சியாக இழுத்துச்செல்வதிலும் பாரிய பங்காற்றியவர்கள் , கட்சிக்குள் இன்னமும் உள்ளார்கள். அவர்கள் அனைவரும் களையெடுக்கப்பட்டால் மட்டும் கட்சி தேறிவிடும் என்று கருத முடியாது.

கட்சி முற்றிலும் புனருத்தாபனம் செய்யப்படவேண்டும். கட்சியில் இன்னும் மிஞ்சியுள்ள மலையக விடுதலையில் பிரக்ஞையுள்ள தோழர்கள் தேர்தல் அரசியலிலிருந்து வெளியில் வருவது முதலில் முன் நிபந்தனையானது என்றே கருதப்படுகிறது. "தேர்தல் அரசியல்", "அரசியல் அதிகாரம்" என்பன மலையக அரசியலைப் பொறுத்தளவில் மக்களை நெருங்க முக்கியமான காரணி என்கிற வாதம் எப்போதும் முன்வைக்கப்பட்டு



வந்திருக்கிறது.

அமைச்சுப் பதவி அதன் கண்களை இருட்டாக்கியது. புதிய வேடதாரிகளினதும், கொள்ளையர்களினதும், சந்தர்ப்பவாதிகளினதும் புகலிடமாகியது.

மலையகத்தின் சாபக்கேடான இலங்கை தொழிலாளர் காங்கிரசை எதிர்கொள்வதென்றால் "தேர்தல் அரசியல்", "தொண்டு அரசியல்", "அதிகார அரசியல்", "நிவாரண அரசியல்" என்பன தவிர்க்க இயலாத ஒன்றென்கிற வாதமும் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது.

ம.ம.மு ஒரு புரட்சிகர கட்சியாக பார்க்கவில்லை. ஆனால் மலையகம் பற்றிய மிகத் தெளிவான பார்வை அவர்களிடம் அன்று இருந்தது. இன்றும் மலையக அதிகார அலகு, மலையக தேசியம் குறித்த கோஷத்தை முன்வைக்கக்கூடிய தலைவர்கள் அதில் மட்டுமே உள்ளார்கள்.

கட்சியை பாதுகாப்பதற்கு நிதிப் பலத்தை நாடுவதற்காக ஒருகட்டத்தில் மிக மோசமான சக்திகளை உள்ளே நுழைய விட்டது மட்டுமல்ல, அவர்களுக்கு தேர்தலில் இடம் கொடுத்து, பிரதிநிதித்துவத்தையும் கிடைக்கச்செய்து ஈற்றில் தலைமையை கைப்பற்றும் நிலைக்கு கொண்டுசென்றது.

ம.ம.மு மீது இது போன்ற விமர்சனங்கள் பலவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம். அதற்கான சுயவிமர்சனத்துக்கான தேவை கட்சிக்குள்ளிருப்பவர்கள் செய்வதன் மூலம் மட்டுமே சரி செய்ய முடியுமென்று நம்புகிறேன்.

சமூக விடுதலை, சமூக மாற்றம் குறித்த அலங்காரமான கோஷங்களுடன் வெளிவந்த ஒரு கட்சியின் அழிவுப்பாதை எப்படிப்பட்ட காரணிகளால் சிதைவடைய இயலும் என்பதற்கு ம.ம.மு ஓர் சிறந்த உதாரணம்.



# நாணம் வேண்டும்



தடைபோட்டு தடைபோட்டு
ஊரார் தடுக்க கிளைவிட்டு
கிளைவிட்டு
காதல் செழிக்கும்!

குறைசொல்லி குறை
சொல்லி ஊரும் எதிர்க்க.
வேர் விட்டு வேர் விட்டு
காதல் நிமிரும்!

காதலர் சந்திக்கும்
போது ஒரு யுகம்கூட
ஒரு நொடியாகிறது!
காதலர் சந்திக்காது
இருக்கையில் ஒரு நொடிகூட
ஒரு யுகமாகி விடுகிறது!

கண் பார்க்க காதல் வரும்
ஆனால் கண்ணுக்கு
தெரியாமல் காதல் வளரும்!

செந்தமிழின் சுவைபோல
காதல் இனிக்கும்!
செம்பூவின் மணம்போல
காதல் மணக்கும்!

பார்க்கின்ற இடமெல்லாம்
காதல் இருக்கும்!
பார்க்கின்ற
பொருளெல்லாம்
காதல் மலர்த்தும்!

அசை போட்டு
அசைபோட்டு மனது
சிலிர்க்க கைவீசி கைவீசி
காதல் நடக்கும்!

முத்தம் இடும் போது
கிடைக்கும் இதம்
பெரிதா? இட்ட முத்தத்தை
நினைக்கையில் கிடைக்கும்
இதம் பெரிதா? பட்டி
மன்றமே நடக்கலாம்.

பேசிக்கொண்டிருக்கையில்
பெறும் இன்பம் பெரிதா?
பேசியதை அசை போட்டு
பெறும் இன்பம் பெரிதா?
ஆராய்ச்சியே செய்யலாம்.

காத்திருப்பது சுகமா? காக்க
வைப்பது சுகமா?
தொடத் தொட சுகமா?
எப்போது தொடலாம் என்ற
தவிப்புடன் தொடாதிருப்பது
சுகமா?

அழகின் புதிர்களை
அறிவது சுகமா? அறியும்
தவிப்பில் துடிப்பது சுகமா?

மூடிவைத்த கனிகளை
சுவைப்பது சுகமா?
நாளது வரும் வரை
பசியுடன் தவித்து
காத்திருப்பது சுகமா?
எதிர்பார்த்திருப்பதே சுகம்!

காய்ந்தமாடு கம்பில்
விழுந்த கதையாக காமம்
தலைக்கேறி அவசரமாய்
ஆடிமுடிப்பது அபசுரம்!

மோகம் முப்பது நாள்
ஆசை அறுபது நாள்
என்பாரும் அவர்களே!
முத்துக் குளிக்க
தெரியாதவர்களுக்கு
மூச்சுத்திணறும்தான்!
பக்குவமாய் பாடம்
பயிலாதவனுக்கு கலைகள்
சலிக்கும்தான்! ஒரே மூச்சில்
தேனை குடித்தால் தேனும்
திகட்டும். மலரும் வெறுக்கும்!

அறுசுவை விருந்தே
ஆனால் என்ன; ஆற அமர
உண்ணாவிட்டால் அதன்
சுவை விரயம்!

தண்ணீரில்கூட சுவை
இருக்கிறது! பக்குவமாய்
அருந்தினால் நா அதை
அறியும்! வாழ்க்கை என்ற
கோப்பையில் காதல்
அமுதம்!

முடியில் நரை
விழுந்தால்கூட
அந்தக் கோப்பையில்
நுரை ததும்பவேண்டும்!

ஆயுள் உள்ளவரை
அமுதம் தீராது
இருக்கவேண்டும்!

ஒரே மூச்சில் குடித்து முடித்து
விட்டால். சுவையும்
இருக்காது. நுரையும்
ததும்பாது!

மருந்தாகவும். விருந்தாகவும்
இரு தொழில் புரிவது
காதல் மட்டுமே!
கண்டதும் காதல்
தொட்டதும் காமம் என்று
அலைந்தால் இரண்டுக்கும்
ஆயுள் சொற்பம் மட்டுமே!

கூடி வாழ முன்னரே
கூடி முடித்துவிட்டால்.
எதிர்ப்பார்ப்பு என்று எதுவும்
இருக்காது! பள்ளியறைக்கு
செல்லாமல் பாடம்
முடித்துவிட்டால்.
பள்ளியறை எதற்கு?
பாடம் தான் எதற்கு?

காதலும் - காமமும்
ஊடலும் - கூடலும் தக்க
செயல் எனினும்
பக்குவம் இல்லையெனில்
தகாத செயல் ஆகும்!

முறையோடு காதலித்து
முறையோடு காமமுற்று
நிறைவோடு அனுபவித்தால்
மெச்சத்தக்க செயல்
என்றாகிவிடும்!

உள்ளத்தில் தொடங்கி
உடல் பரவி உள்ளத்தில்
வளரட்டும் உண்மைக்
காதல்!

உடலில் தொடங்கி
உள்ளத்தால் நழுவி
கள்ளத்தில் முடிவது
காதலல்ல!

தகாத செயல்
செய்யாதிருக்க
வேண்டுமானால்
இருபாலாருக்கும்
தேவை நாணம்!

வேண்டாத செயல்களுக்கு
வெட்கத்தால் வேண்டாத
விபரீதத்தால் மனம்
துக்கிக்காது!

**"கருமத்தால் நாணுதல்**
**நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற"**

*அதிகாரம்:102 –குறள்:1011*



## சிந்தியா பதில்

**சிந்தியா! வாசுதேவ நாணயக்கார சொல்வதைப் போல், சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபட பிரிவினைவாதத்தை கைவிட்டால் ஒற்றுமை மேலோங்குமா?**

**ஆர்.அசோக், வவுனியா.**

அதை ஒரு முயற்சியாக செய்து பார்ப்பதால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை. 'ஒற்றுமை' என்பதை கூறுவதும், கேட்பதும் இலகுவாக இருக்கும். அதை நடைமுறைப்படுத்துவதுதான் சிரமமானது. பிரிவினைவாதத்தை கைவிடுவது நல்லது என்று சிந்திக்கச் செய்வதற்கு சர்வதேச



அழுத்தம் தேவையாக இருக்கின்றதா என்பதுதான் அவமானமாக இருக்கின்றது. அப்படி அது நடக்காது, அப்படி நடந்தால் அது நிலைக்காது. மாற்றம் அடிப்படையில் இருந்து வரவேண்டும். திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது என்பதுபோல் சம்மந்தப் பட்டவர்கள் திருந்தவேண்டும். அழுத்தங் களுக்காக திருந்தினால் அது திருத்தமாகாது.

**சிந்தியா! மன்னார் புதைகுழியின் மர்மம்தான் என்ன?**

**சி.ஜெகன், மன்னார்.**

உங்களைப்போல் நானும் அந்த மர்மங்களைத் தெரிந்து கொள்ள ஆவலாகவே இருக்கின்றேன். வடக்கு, கிழக்கில் இனி குழிகள் வெட்டுவதற்கே பயப்பட வேண்டியிருக்கும். தோண்டும் இடங்களிலெல்லாம் எலும்புக்கூடுகள் வெளியே வந்தாலும் ஆச்சரியப்படுவதற் கல்லவே. ஒருவர், இருவரையோ நாம் தொலைத்திருக்கின்றோம்.

**சிந்தியா! மலையக மக்களின் வீடமைப்புத் திட்டம் குறித்து அரங்கேறும் நாடகங்களால் மக்கள் பாதிக்கப்படுகின்றனரே?**

**கு.தர்மிலன், ஹட்டன்.**

உங்களுக்கு அரசியல் அறிவு போதாது. நாடகங்களை தொடர் நாடகங்களாக காட்டுவதுதானே அரசியல். அதில் மக்கள் பாதிக்கப்படுவதுதான் அரசியல் நியாயம். மலையக மக்களுக்கு மாடி வீட்டுத்திட்டம் வேண்டாம்.

தனியான நிலத்தில் தனியான வீடுதான் வேண்டும் என்பதை அரசியல் வாதிகள் உறுதியோடு உரத்துக்கூறினால், அதற்காக எந்த எல்லைவரை போக வேண்டியிருந்தாலும் அதற்கும் தயாராக இருக்கத் துணிந்தால் மலையக மக்களுக்கு தனிவீடு சாத்தியம். அதைச் செய்வார்களா?

**சிந்தியா! சம்பூர் மக்களின் அகதி வாழ்வுநிலை மாறாதா?**

**ம.பிரிந்தா, தெமட்டகொட.**

மாறும். அனல்மின் நிலையம் அமைக்க 500 ஏக்கர் நிலப்பரப்பு தேவை. ஆனால் அங்கு 1500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. இந்த விடயத்தை அரசு, மக்கள் நேசிப்போடு மீள்பரிசீலனை செய்தால்; அதேபோல் சம்பூர் மக்களும் நாட்டுக்காக சில பகுதிகளை தியாகம்செய்து பாதுகாப்பான அண்மித்த பகுதிகளில் குடியேற விருப்பம் தெரிவித்தால் தற்போதைய நிலையில் ஏன் மாற்றம் காணமுடியாது.

**சிந்தியா! இசையமைப்பாளர் ஜீ.வி.பிரகாஷ் இசையிலிருந்து சினிமாவுக்குள் புகுந்துவிட்டாரே?**

**சு.அமிந்தா, கண்டி.**

சினிமாவில் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்குள் ஆர்வம் காட்டுவது புதிய விடயமல்ல. நடிகர்கள், இயக்குநர்கள் என அநேகமானவர்கள் படத்தயாரிப்புக்கு கம்பனிகளை உருவாக்குவது சகஜம். ஜீ.வி.பிரகாஷ் அதில் இறுதியாக இணைந்து கொண்டுள்ளார்.

**சிந்தியா! கீதாசாரத்தின் மகிமையை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா?**

**இ.சர்மா, மாத்தளை.**

அதுதானே வாழ்க்கை. ஒவ்வொரு உபதேசமும் நமக்கு வாழ்க்கையை சொல்லித்தருகின்றது. அந்த உப தேசங் களின் அர்த்தங்களையும், ஆழங் களையும் ஆராய்ந்து பார்க்கப்பார்க்க புல்லரிக்கும். உணர்ந்துகொள்வதற்கு இந்த ஆயுள் போதாது. அடுத்தவருக்கும் எடுத்துச் சொல்வதற்கு மட்டுமே நாம் முயற்சிக்க முடியும்.

**சிந்தியா! டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரம் கலிஸ் விலகியிருப்பது குறித்து என்ன கருதுகிறீர்?**

**எம்.எம்.அஷ்மித், திருகோணமலை.**

கலிஸ் விலகியிருக்கின்றார் என்பது சரியான முடிவுதான். தென்னாபிரிக்க அணியில் கேன்சி குரேஞ்சே தலை-வராக இருந்தபோது 1998 ஆம் காலப்பகுதியில், கலிஸ், குளுஸ்னர், சிம்கொக்ஸ், போல் அடம்ஸ், அலன்டொனால்ட், ஜொன்டி ரொட்ஸ், ஷேன் போலக், மக்காயா நிட்னி, போன்றவர்களின் ஆட்டம் அவ்வளவு சிறப்பாக இருக்கும். இப்போது புதிய வீரர்கள் சிறப்பாக ஆடினாலும், கல்லிஸ் போன்றவர்களின் ஆட்டம் அந்தக் காலத்தைப்போல் ரசிகர்களை கட்டிப்போடுவதாக இல்லை. அதை அவரும் உணர்ந்துகொண்டுள்ளார் என்றுதான் நினைக்கின்றேன்.

**பிறந்திருக்கும் 2014ஆம் ஆண்டும் வழமை போன்றே உள்ளதே சிந்தியா? வழி பிறக்கவில்லையே...?**

**து.கவிசா, கோப்பாய்.**

வழியை நீங்கள் கலண்டரில் தேடாதீர்கள். உங்களிடமே தேடுங்கள்.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

**தன்னுடைய அரசியல் சாணக்கியத்திற்கு முன்னால் சாம்பலாகிப் போவோமோ என்ற அச்சத்தில் தன்னை திட்டமிட்டு வதம் செய்து வருவதாக சங்கரியார் அண்மையில் ஊடகங்களுக்கு நடாத்திய ஒன்றுகூடலில் தெரிவித்துள்ளார். குறித்த ஒன்றுகூடலில் சங்கரியார் கழட்டி எறிந்த வெடிகுண்டுப் பதில்களும் ஊடகவிலாளர்களின் சன்னங்களாய்த் தெறித்த கேள்விகளையும் இங்கே தொகுத்துத் தருகின்றோம்.**

**ஊடகவியலாளர்:-** ஐயா வணக்கம்! மூத்த அரசியல்வாதியாகிய உங்களுக்கு இந்த நிலை வந்துசேரும் என்று நீங்கள் கனவிலும் நினைத்திருக்கமாட்டீர்கள். நேற்றைய மழைக்குப்பெய்த காளான்களாய் முளைத்தவர்கள் எல்லாம் உங்களை எட்டி உதைக்கவும் ஏறி மிதிக்கவும் காலம் இடம்விட்டு பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கின்றது. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**சங்கரி:-** அரசியலின் அரிச்சுவடி தெரியாமல் எங்களுடைய மக்களின் விதிவசத்தால் அரசியலுக்கு வந்தவர்களுக்கு அடியேனுடைய அரசியல் அனுபவம் புரியாது. கடந்த காலங்களிலேயே செய்துவைத்த சாணக்கியங்களும் புரியாது. அப்படிப் பட்டவர்கள் என்னைத் துரத்துகிறார்கள். உதைப்பேன் என மிரட்டுகிறார்கள். அஞ்சிவிடுவேனா? இன்று, நேற்றா ஓடிக்கொண்டிருக்கின்றேன். எனது அருமைத்தம்பி தேவாவுடன் விரட்டியதிலிருந்து ஓடிஓடியே பழக்கப்பட்ட எனக்கு தற்போதைய செல்லாக்காசுகளின்சொல்லடிகள் எல்லாம் தள்ளாட்டத்தை ஏற்படுத்துகிறது.

**ஊடகவியலாளர்:-** ஐயா நீங்கள் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலிலே தோற்றுப்போய் விட்டீர்களே?

**சங்கரி:-** நான் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டிருக்கிறேன். கூட இருந்தே குழி பறித்தது அந்தக் குள்ளநரி.

**ஊடகவியலாளர்:-** யார் ஐயா அந்தக் குள்ளநரி?

**சங்கரி:-** தன்னைப் புலியெனச் சொல்லி நாடாளுமன்றத்தில் விலாசம் காட்டிக்கொண்டிருக்கிறாரே ஒருத்தர். அவர் புலி புலி என்றாலும் அவருக்குள் மறைந்திருப்பது நரி. அந்த நரியே எனக்குச் செய்தது சதி. அந்த நரி தான் விரும்பியவர்களுக்கு மட்டுமே வாக்களிக்கச் சொல்லி வீடு வீடாய் குசுகுசுத்ததால் எனக்கு நேர்த்தது இந்தக் கதி.

**ஊடகவியலாளர்:-** அப்படிப் பார்த்தால் ஆளும் கட்சிக்காரருக்கு ஒரு ஆசனம் கிடைத்திருக்கிறதே. அதுவும் சாத்தியமில்லாமலா போயிருக்கும்.

**சங்கரி:-** அந்தக் குள்ளநரியின் கபடம் அறிந்தவர்கள் தங்கள் வாழ்க்கை நலனில் ஆர்வம்கண்டவர்கள் வெற்றிலைமூலமே வாழ்வை வெற்றியடையச் செய்யலாம் என்று அந்த இலைக்கு வாரி வழங்கிவிட்டார்கள். இந்த மாவட்டத்தின் தனி மாவட்டமாக உருவாக்கியதன் மூலம் இம்மாவட்டத்திற்கு முகவரிகொடுத்தது நான் என்பதை அனைவரும் மறந்துவிட்டார்கள். அறிந்தவர்களை, அந்த வரலாற்றை அறிந்தவர்களை முள்ளிவாய்க்காலிலே முடித்துக் கட்டிவிட்டார்கள்.

**ஊடகவியலாளர்:-** அது சரி தோற்றது தான் தோற்றுப்போய்விட்டீர்கள். இப்பொழுது உங்கள் சகோதரக் கட்சியைச் சேர்ந்த திருவாளர் ஆனந்தன் உங்களைப் போட்டுத்தள்ளுவேன் என்று சீறியதாக தகவல்கள் வருகின்றன.

**சங்கரி:-** (சற்றுக் கோபமாக) சகோதரக் கட்சி என்பதை நிறுத்துங்கள். எனக்குச் சகோதரர்களாக வருவதற்கு அவர்களுக்கு தகுதி கிடையாது. சட்டம் படித்தவன் மன்றங்கள் பல சென்று வாதங்கள் பல புரிந்தவன் நான். புலித் தலைவர் பிரபாகரனுக்கே கடிதம் எழுதி பெருமைபெற்றவர் யாரும் இருக்க முடியாது. ஆத்மீக வழியில் தந்தை செல்வா கரம்பற்றி அரசியல்தடத்தில் நடைபயின்றவன் நான். எனது சகோதரர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு கொஞ்சமாவது அருகதை இருக்க வேண்டும். ஆனால், இவர்கள் துவக்குப் பிடிப்பதையும் பின்னாட்களில் பிள்ளை பிடிப்பதையும் தவிர, எதையும் கற்றறிந்திராதவர்கள். இவர்களுடன் எல்லாம் சம பந்திப்போசனம் நடத்த வேண்டிய அவலத்தை காலம் எனக்கு இட்டிருக்கின்றது. காலத்தை நொந்துகொண்டு கூடியிருக்கிறேனே தவிர, சகோதரத்துவம் என்பதெல்லாம் இம்மியளவும் கிடையாது.

**ஊடகவியலாளர்:-** அண்மைக் காலமாக வினோ உங்களை குறிவைப்பது போல் தெரிகின்றது.

**சங்கரி:-** அச்சம் தொத்திக் கொண்டுள்ளது அவருக்கு. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வவுனியா பிரதேசத்தில் எனதருமைத் தம்பி ஒருத்தரைக் களமிறக்கினால் தான் அரசியல் களம் விட்டு அகலவேண்டிய துர்ப்பாக்கியம் நிகழ்ந்துவிடும் என்று வினோ அஞ்சுகிறார் போலும். அதேபோன்றுதான் கூட்டு அமைப்பில் இருக்கின்ற மேல் மட்டத்தினர் சிலருக்கும் என்மீது ஒரு அச்சம்.

எனக்கு வாய்ப்பளித்தால் மக்கள் மனங்களில் இடம்பிடித்துத் தங்களுடைய அரசியல் இடங்களையும் மக்களின் பிரதிநிதிகள் என்ற சுகபோகங்களையும் காலியாக்கிவிடுவேனோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அதனால்தான் வெட்டி ஓடுகிறார்கள். முடிந்த இடங்களில் எல்லாம் தட்டி வீழ்த்துகிறார்கள். இவற்றையெல்லாம் கண்டு அஞ்சப்போவதில்லை என்பதை கடந்த கால அரசியல் அறிந்தவர்களும் நீங்களும் தெரிந்துகொள்வீர்கள்.

**ஊடகவியலாளர்:-** அப்படியானால் உங்கள் எதிர்காலம்?

**சங்கரி:-** என் வழி தனி வழி! (தோளில் இருந்த சால்வையை எடுத்து உதறிக்கொண்டு நடையைக் கட்டுகிறார்)

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# விதியால் முடமான மதியாளர்



ஏதோ ஒரு வேகத்தில் யாரிடமாவது தன் வேதனையைக் கொட்டவேண்டும் என்பதற்காக அந்த வாத்தியாருக்கு எழுதினாரே தவிர அவரிடமிருந்து தன் கடிதத்துக்குப் பதில் வருமென்று அவர் நினைக்கவே இல்லை. அவரை ஆச்சரியத்திலே திக்குமுக்காட வைக்கும்படியாக, உடனே வந்து தன் பள்ளியில் உபாத்தியாராகப் பணியாற்றும்படி அவரிடமிருந்து பதில்வந்தது.

உவகையால் துள்ளும் உள்ளத்துடன் ஓடினார். இத்தனை காலம் துணிக்கடையில் கஷ்ரப்பட்டதும் அவரது வாழ்விலே ஒரு படிப்பினையைக் கற்றுக்கொடுத்தது. அவரை உயர்த்த அந்த வேலை உதவியது என்றுகூடச் சொல்லலாம். இயற்கையிலே அவர் ஒரு சோம்பேறி, சுறுசுறுப்பில்லாதவர், வேலை செய்யப் பிரியமில்லாதவர், அப்படிப்பட்டவரை வேலை செய்யும்படி வற்புறுத்தி அவரது மந்தத்தனத்தை, சோம்பேறித்தனத்தைப் போக்கிய பெருமை துணிக்கடை முதலாளியையே சேரும். வாத்தியார் தொழில் அவர் வாழ்விலே இன்னொரு திருப்பம்.

விதி இவரை இன்னும் விடவில்லை. சோதனைக்காலம் தொடர்ந்து வந்தது.

உபாத்தியாராகச் சில வருடங்கள் உழைத்தபின் திடீரென்று ஒரு பெரிய ஆபத்து, இவர் வாழ்வையே முடிக்கும்படியான ஆபத்தில் சிக்கினார். ஒருசமயம் இவர் கால்பந்து விளையாட்டில் கலந்துகொண்டார்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.01.2014 தொடக்கம் 08.01.2014 வரை)

## மேடம்

வெகுதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். கணவன்- மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். நீண்டகாலமாக வராமல் இருந்த கடன்கொடுத்த பணம் பொருட்கள் திரும்பக் கைக்கு வந்து சேரும். பங்காளிகளுடன் சேர்ந்து நடத்தும் கூட்டுத்தொழிலில் காரணமற்ற பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். குழந்தைகளின் மனமகிழச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கோண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

பொருளாதாரத்தில் இதுநாள் வரை இருந்துவந்த நெருக்கடிகள் மாறி பணப்புழக்கம் நன்றாக இருக்கும். வெகுகாலமாக விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும். உறவினர்களின் வரவுகளால் எதிர்பாராத பணச்செலவுகள் ஏற்படலாம். பெண்களால் வடதிசையில் இருந்து பொருள்வரவுகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கல்விபயிலும் இடங்களில் சிற்றில சச்சரவுகள்வர இருப்பதால் மிகுந்த கவனமுடன் கல்வி பயிலுதல் சிறந்ததாகும். அண்டை அயலார்களுடன் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

வராத நாட்பட்ட கடன்கொடுத்து இருந்த பணம் மற்றவர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்கள்தீர புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவீர்கள். உடம்பில் கண், காதுகளில் சிற்சில உபாதைகள் வந்துபோகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கல்களில் மாட்டிக்கொண்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். மாணவர்களுக்கு கல்விபயிலும் இடங்களில் அவப்பெயர்கள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் கல்வி பயிலுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிறைவேறும்.

## கடகம்

திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப்போடுதல் நல்லது. உடம்பில் தலைவலி, முதுகுவலி போன்ற உபாதைகள் வந்துபோகலாம். கணவன் - மனைவி உறவுகளில் இன்னும் சற்றுப் பிரச்சினைகள் வந்துபோகலாம். உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய காலமாகும். ஆலய வழிபாடுகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் மனநிம்மதி அடைவீர்கள். பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## சிங்கம்

புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். நண்பர்கள் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் வந்துசேரும். புதிய கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். கணவன் - மனைவி உறவுகளில் காரணமற்ற வீண் பிரச்சினைகள் உருவாகி மனக்கசப்புகள் ஏற்படலாம். காதல் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நன்றாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

உத்தியோகத் துறையினருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் உண்டாகும். குடும்பச் சொத்துக்கில் இருந்துவந்த பிரச்சினைகள் இன்னும் சிறிதுகாலம் நீடிக்கும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மூலம் புதிய கடன்கள் ஏற்படலாம். புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றி பெறலாம். விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரும் காலமாகும். பூஜைப் பொருட்கள், ஆலயப்பணி செய்வோர்கள், பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். சமுதாய நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் பெயர், புகழ் ஏற்பட்டு அதனால் மனமகிழ்ச்சி அடையும் காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் வெகுவாகக் குறைவதன்மூலம் மருத்துவச்செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகளுக்குள் சிறிய பிரச்சினைகளுக்காக விட்டுப்போன பழைய பிரச்சினைகளால் மீண்டும் தொல்லைகள் வந்து நீங்கும்.

## விருச்சிகம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகளும் மனக்குழப்பங்களும் வர இருப்பதால் கவனமுடன் இருக்கவும். உற்றார், உறவினர்களின் திடீர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும் வீட்டைத் திருத்திக்கட்டி அலங்காரம் செய்வதில் மிகுந்தகவனம் செலுத்துவீர்கள். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவீர்கள். நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த பண உதவிகள் கிடைக்கும். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். உணவு தானிய வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள்.

## தனுசு

கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும் பொருளாதாரம் சற்று சுமாராகவே இருப்பதால் புதிய கடன்களை வாங்க முயற்சிசெய்வீர்கள். நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். தந்தை- மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த பிரச்சினைகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். வங்கிகளின்மூலம் எதிர்பார்த்து இருந்த பணம் கைவந்துசரும். விசா பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மகரம்

பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் மன அமைதியுடன் சந்தோசம் நிலவும் காலமாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படுவதுடன் பொருட்செலவுகளும் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பெண்களால் தென்திசையில் இருந்து நல்ல செய்திகளுடன் பொருள்வரவுகள் உண்டாகலாம். சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரியவர்களின் உதவியால் நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களைத் தள்ளிப்போடுதல் நல்லது.

## கும்பம்

தந்தை - மகன் உறவில் பிரச்சினைகள் வரஇருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வெளிநாட்டு விசயங்களில் எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். உறவினர்களின் திடீர்வரவுகளால் மனத்தைரியமும் பொருள்வரவும் உண்டாகலாம். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகளும் அவர்களால் பணி இடமாற்றமும் ஏற்படலாம். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காக வங்கிகள்மூலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகைகள் கிடைக்கும். பெண்கள் விசயத்தில் அவப்பெயர்கள் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லது.

## மீனம்

உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கக் கூடிய காலமாகும். பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# 2014

## வாரமலர் தினமுரசு

### ஜனவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புத | 1 | 8 | 15 | 22 | 29 |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெள் | 3 | 10 | 17 | 24 | 31 |
| சனி | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

### பெப்ரவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புத | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள் | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | |
| ஞா | 2 | 9 | 16 | 23 | |

### மார்ச்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திங் | | 3 | 10 | 17 | 24 | 31 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 | |
| புத | | 5 | 12 | 19 | 26 | |
| வியா | | 6 | 13 | 20 | 27 | |
| வெள் | | 7 | 14 | 21 | 28 | |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 | |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 | |

### ஏப்ரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 7 | 14 | 21 | 28 |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 |
| புத | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியா | 3 | 10 | 17 | 24 | |
| வெள் | 4 | 11 | 18 | 25 | |
| சனி | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

### மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புத | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| சனி | 3 | 10 | 17 | 24 | 31 |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

### ஜூன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | |
| புத | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள் | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

### ஜூலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 7 | 14 | 21 | 28 |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 |
| புத | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியா | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெள் | 4 | 11 | 18 | 25 | |
| சனி | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

### ஓகஸ்ட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 4 | 11 | 18 | 25 |
| செவ் | | 5 | 12 | 19 | 26 |
| புத | | 6 | 13 | 20 | 27 |
| வியா | | 7 | 14 | 21 | 28 |
| வெள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| சனி | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | 31 |

### செப்ரெம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புத | 3 | 10 | 17 | 24 | |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள் | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |
| ஞா | 7 | 14 | 21 | 28 | |

### ஒக்ரோபர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புத | 1 | 8 | 15 | 22 | 29 |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெள் | 3 | 10 | 17 | 24 | 31 |
| சனி | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

### நவம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புத | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள் | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

### டிசம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புத | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள் | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |
| ஞா | 7 | 14 | 21 | 28 | |



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜனவரி 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 18 வியாழக்கிழமை (02.01.2014) பக்கங்கள் IV ஓசை - 093



# கல்வியில் வடக்கு முதலிடம்; அமைச்சர் டக்ளஸ் பாராட்டு

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 16,604 மாணவர்களில் 63.8 சதவீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்று, இலங்கையின் 9 மாகாணங்களிலும் வடக்கு மாகாணத்தை முதலிடத்துக்கு உயர்த்தியுள்ளனர் என்ற செய்தியறிந்து, வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து 20 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்துவரும் ஒரேயொரு தமிழர் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வியில் ஒரு காலத்தில் வடக்கு மாகாணம் பெற்றிருந்த உயர்நிலையை மீண்டும் இந்த மாணவர்கள் பெற்றுத் தந்துள்ளமையை நான் பெருமையுடன் பாராட்டுகிறேன்.

கடந்தகால அழிவு யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த எமது கல்வித்துறையை இவ்வாறு தூக்கி நிறுத்தியது போல், ஏனைய விடயங்களிலும் வடக்கு மாகாணத்தைத் தூக்கி நிறுத்த முடியும் என்ற நம்பிக்கையை மாணவர்களின் இந்த முன்னேற்றம் சுட்டிக்காட்டுகின்றது.

அழிவு யுத்தத்தினால் எமது பிரதேசம் மென்மேலும் அழிவுகளையே சந்தித்து, கல்வி உட்பட பொருளாதாரத்திலும் இலங்கையின் 9 மாகாணங்களிலும் கடைசி நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆனாலும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், முழு மூச்சுடன் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றி, அழிவுண்ட பிரதேசங்களை அபிவிருத்தியால் தூக்கிநிறுத்தும் பணியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாங்கள் முன்னெடுத்து, 2013 வரையான நான்கு வருட காலப் பகுதிக்குள் வடக்கை பெருமளவு முன்னேற்றகரமான நிலைமைக்குக் கொண்டு வந்தோம்.

இந்தப் பணிகளில் குறிப்பாக, வடக்கு மாகாணத்தின் கல்வித்துறை மேம்பாட்டுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பல மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகள் புனரமைப்பு, உட்கட்டுமான வசதி மேம்பாடு, ஆசிரிய வள

IV ஆம் பக்கம் பார்க்க

# சாத்தியமே இல்லாத தமிழீழம் பேசுவதால் பயனில்லை

## இந்து ஆசிரியர் ராம் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கையில் தனித் தமிழீழம் என்பது சாத்தியமே இல்லாத ஒன்று. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும் அதுதான். எனவே சாத்தியமில்லாத தமிழீழம் குறித்து பேசுவதில் எவ்வித பயனும் ஏற்பட மாட்டாதென இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகை குழுவின் தலைவர் என்.ராம் தெரிவித்துள்ளார். அவர் அளித்த பேட்டியொன்றில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலிகளை ஆரம்பத்தில் நாங்கள் பரிவோடு தான் அணுகினோம் அவர்களுடைய நியாயங்களை எழுதினோம். ஆனால், விரைவிலேயே அவர்கள் மிகக் குரூரமாகத் தங்கள் முகத்தை வெளிப்படுத்தினார்கள். ஏனைய ஆயுதக் குழுக்கள், போராட்டத் தலைவர்கள் எல்லோரையும் அழித்தொழித்தார்கள். பின், வெவ்வேறு காலகட்ட உரையாடல்களின்போது பிரபாகரனின் அரசியல் அறியாமையும் அவருடைய நோக்கங்களும் புரிந்து விட்டன. உண்மையில், பிரபாகரன் ஒரு போல்பாட்டிஸ்ட்.

துப்பாக்கிகள் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையில் துளியும் பேச்சுவார்த்தைகளிலோ ஜனநாயகத்திலோ இல்லை. ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போதே இது எனக்குத் தெளிவாகிவிட்டது. தொடர்ந்து அவர்கள் நடத்திய அரசியல் படுகொலைகள், செய்த அட்டூழியங்கள், பேச்சுவார்த்தைகளில் அவர் வீணடித்த பொன்னான வாய்ப்புகள், எல்லாவற்றுக்கும் மேல் முன்னாள் பிரதமர் ராஜீவ் படுகொலை புலிகளை எதிர்த்து எழுத இவை எல்லாம்தான் காரணங்கள்.

தொடக்கம் முதலே இந்து தனித் தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை எதிர்த்தே வந்திருக்கிறது. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையும், அதுதான். அரசியல

IV ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மாமடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஆட்டோ சாரதி ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

சம்பவத்தில் சமளங்குளம், வவுனியாவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் லணதீபன் (வயது - 30) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் மாமடு

IV ஆம் பக்கம் பார்க்க

## ராதிகா வீட்டுக்காவலில்; முற்றாக மறுக்கிறது அரசு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செயதுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை அரசாங்கம் மறுததுள்ளது. அவர், தன்னுடைய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, தான் விரும்பிய இடங்களுக்கு

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழ். தனியார் பேருந்து மீது விசுவமடுவில் கல்வீச்சு

### மூன்று பயணிகள் படுகாயம்

(தர்மபுரம்)

புதுக்குடியிருப்பிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். மாவட்ட தனியார் பேருந்து ஒன்றின் மீது விசுவமடு உழவனூர் பகுதியில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் பயணிகள் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பேருந்து புதுக்குடியிருப்பிலிருந்து பயணிகளை ஏற்றியவாறு வந்தவேளை

IV ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வேண்டும்

## கரைச்சிப்பிரதேச சபை, ஜனாதிபதிக்கு மனு



(கிளிநொச்சி)

அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். யுத்தம் முடிந்த பின்னும் அதனால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. யுத்தம் நிறைவடைந்த ஐந்தாவது ஆண்டின் முன்பாக இந்த விடுதலைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என கரைச்சிப் பிரதேச சபை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஒரு மனுவை அனுப்பிவைத்துள்ளது. கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வை. குகராஜா தலைமையில் பிரதேச சபையின் உறுப்பினர்கள் இந்த மனுவை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர்.

ஜனாதிபதிக்கான மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது,

தணித்துக்கொள்ளக் கூடிய யுத்தத்தின் விளைவுகளை பல்

IV ஆம் பக்கம் பார்க்க

### தேவாலயம் சென்று திரும்பியவேளை

## ஆனையிறவில் விபத்து; தாயும் சிசுவும் மரணம்

(கிளிநொச்சி)

ஆனையிறவுப் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் தாயும் சிசுவும் மரணமடைந்துள்ள அதேவேளை தந்தை காயமடைந்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு ஆனையிறவுப் பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்றுக்குச் சென்று வழிபாடுகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே, இவர்கள் விபத்திற்கு உள்ளானார்கள்.

இவர்கள் வீதியால் நடந்து

IV ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(வேலணை)

வேலணை பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் இன்று பிற்பகல் 2 மணியளவில் நயினாதீவில் உள்ள பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் நயினாதீவில் உள்ள அமுதசுரபி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் கலந்துகொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய பணிப்பாளர் த.ஜோன்குயின்ரஸ், மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் ஆர்.ரகுநாதன், வேலணை பிரதேச சபையின் தலைவர் சி.சிவராசா (போல்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


ஆசியுரையை நயினாதீவில் உள்ள நாகவிகாரையின் விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்சநாயக்க தேரர் நிகழ்த்தவுள்ளார். விழாவில் கலை நிகழ்வுகளும், கற்றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (05)



பூநகரி - பள்ளிக்குடா பிரதேசத்தின் சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் க.சேதீஸ்வரன் என்பவரது வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரவள்ளி கட்டையில் 25 கிலோ கிராம் எடையுடைய மரவள்ளி விளைந்திருப்பதைக்காணலாம். (21)

# இந்திய மீனவருடனான பேச்சில் யாழ்.மாவட்ட பிரதிநிதித்துவம் அவசியம்

## எமிலியாம்பிள்ளை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கை குறித்து இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எட்டப்படுவதற்கு யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் மற்றும் சம்மேளனத்தின் பங்கு அவசியம் என்று யாழ்.மாவட்ட கடற்தொழில் சங்கங்களின் சம்மேளனத்தலைவர் அ.எமிலியம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அதனைவிடுத்து சமாசங்கள், சம்மேளனத்தின் பங்களிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படும் எந்த இருதரப்புப் பேச்சுவார்த்தையும் பயனற்றதாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று யாழ்.கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் நடைபெற்ற புதுவருட கைவிசேடம் வழங்கும் நிகழ்வில் பங்குபற்றியதன் பின்னர் இந்திய மீனவர்களது பிரச்சினை குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இந்திய அரசாங்கத்தரப்பிலும், இலங்கை அரசாங்கத் தரப்பிலும் இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு இருதரப்புப் பேச்சுவார்தை ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். இருந்தும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் யாழ். மாவட்டத்தில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகளாக 121 மேற்பட்ட கடற்தொழிலாளர் சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் என்பன இருக்கின்றன.

இவற்றிற்கு தெரியப்படுத்தாமலும், அவற்றின் பங்களிப்பு இல்லாமலும் இருதரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவிருக்கிறது. என்று செய்திகள் வெளிவந்திருப்பதாகவும் தெரிவித்த அவர் அவ்வாறு எம்மைப் புறக்கணித்துவிட்டு நடைபெறும் பேச்சுக்கள் பயனற்றதாகவே அமையும் எனவும் தெரிவித்தார்.

மலர்ந்துள்ள புதுவருடம் மீனவர்களுக்கு சமாதானமானதும், சந்தோசமான ஆண்டாக இருக்கவேண்டும் இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் சம்மேளனத்தின் செயலாளர் கே. ராஜச்சந்திரன் மற்றும் பொருளாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (பா)

# பரிசில்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவ வரைபடம் தயாரிக்கும் போட்டியில் வெற்றிபெற்ற கிராம அலுவலர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவர்களில் முதல் பன்னிரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் மாவட்டச்செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதில் முதலாம் இடத்தை தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இருந்தும், இரண்டாம் இடத்தை நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்தும், மூன்றாம் இடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிலும் நான்காம் இடத்தை வேலணை பிரதேசசெயலக பிரிவில் இருந்தும் பெற்றுக்கொண்டனர்.

# கிராமிய பொருளாதார மேம்பாடு தென்னங்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 200 குடும்பங்களுக்கு தலா இருதென்னங்கன்றுகள் வீதம் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

மண்டைதீவுக் கிராமத்தில் உள்ள இரண்டு கிராமசேவகர் பிரிவுகளிற்கும் தலா 200 தென்னங்கன்றுகள் வீதம் வளங்கப்பட்டு அந்தப் பிரிவில் உள்ள 100 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது.

மண்டைதீவுக் கிராமம் கடந்த யுத்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்தப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

இந்தப்பகுதியில் காணப்பட்ட பெருமளவு பனை மரங்கள் மற்றும் தென்னை மரங்கள் யுத்தத்தினால் அழிவடைந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்.கொட்டடி ஜே/83 கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் நிலையத்தின் போஷகளும் அகில இலங்கை சமாதான நீதிபதியுமான ந.கோபாலகிருஷ்ணன் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி மாலை 3 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. இத்தெரிவில் தலைவராக ந.தனேந்திரன் (ஜே.பி), உபதலைவராகஇ.மகிதரன், செயலாளராக க.கேதீஸ்வரன், உப செயலாளராக த.பிரணவகரன், பொருளாளராக தெ. நிஷாகரன், கலைகலாசாரத்திற்கான பொறுப்பாளராக இரா.செல்வவடிவேல், சனசடுக நிலைய சமாசத்தின் பிரதிநிதியாக இ.சற்குருநாதன், விளையாட்டுக்குழுவிற்கான பொறுப்பாளராக செ.விக்னேஸ்வரன் மற்றம் 9 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (05)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 218 | திகதி 2013.12.31 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்

13 38 42 44 | ஆங்கில எழுத்து G

பரிசுத் தொகை ரூபா. 14,889,840/- வெல்லப்பட்டுள்ளது

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 10 | 500,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 217 | 217,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 385 | 385,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9581 | 574,860/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4996 | 199,840/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 125217 | 2,504,340/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18152 | 363,040/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 14,889,840/- | 01 | 14,889,840/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 19,633,920/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,000,000/-

2014.01.03ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/3211)

web : www.dlb.lk


# மட்டை வெட்டச் சென்றபெண் வெடிவிபத்தில் காலை இழந்தார்

எழுதுமட்டுவாள் ஓட்டுவெளிப்பகுதிக்கு மட்டை வெட்டுவதற்குச் சென்ற குடும்பப்பெண் ஒருவர் வெடிவிபத்தொன்றில் தனது ஒரு காலை இளந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சந்திரசேகரம் புஸ்பமலர் (வயது - 37) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு ஒரு காலை இழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று பிற்பகல் தனது கணவருடன் மட்டை வெட்டுவதற்காக அவரின் பின்னால் சென்றுகொண்டிருந்த அவர் எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியை அடுத்துள்ள ஓட்டுவெளிப்பகுதியில் முட்கம்பியினால் அடைக்கபட்ட வளவினுள் சென்றபோது திடீரென்று அப்பகுதியில் புதைத்திருந்த வெடிபொருள் ஒன்று காலின் அழுத்தத்தினால் வெடித்ததாகவும், இதன் காரணமாக குறித்த பெண்ணின் முழங்காலுக்கு கீழ்ப்பகுதி சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏ - 9 வீதியில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து காயமடைந்த பெண்ணை கணவர் வீதிக்கு சுமந்து வந்து அவ்வீதிவளியாக வந்த ஊந்துருளியில் சிலரின் உதவியுடன் மிருசுவில் பகுதிக்கு கொண்டுசென்று முதலுதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசென்று பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் பிற்பகல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தப்பகுதியில் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதாக எதுவித குறியீடுகளும் காணப்படவில்லை. அந்தப்பகுதி பொது மக்கள் சென்றுவரும் பகுதியென்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார். (பா)

## பிரதேச செயலர் நியமனம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு புதிய பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சமுர்த்தி உதவி ஆணையாளராக கடமையாற்றிய திருமதி ப.ஜெயராணி என்பவரே நியமிக்கப்பட்டுள்ளவராவார். நேற்றுக்காலை 8.30 மணிக்கு இவர் தனது கடமையைப் பெறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக கடமையாற்றிய சத்தியசீலன் பூநகரி பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (130)

## பாடசாலைகள் ஆரம்பம்

பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை க.பொ.த. உயர்தர பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணி இடம்பெறும் பாடசாலைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்வின் எழுச்சித் திணைக்களமாக மாற்றமடையும் சமுர்த்தி அதிகார சபை

(கொழும்பு)

கடந்த இருபது வருடங்களாக இயங்கிய இலங்கை சமுர்த்தி அதிகார சபை நாளை 3 ஆம் திகதி முதல் வாழ்வின் எழுச்சித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கவுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்த ஏனைய அமைப்புக்களும் இணைந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் ஆதரவுடன் இந்த மாற்றம் நாளை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள், உதவி சமுர்த்தி ஆணையாளர்கள், மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாளைய தினம் காலையில் சகல சமுர்த்தி சங்கங்கள், சமுர்த்தி மகா சங்கங்கள் ஆகியவற்றில் சமயச் சடங்குகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யும்படியும் சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி. பீ.திலகசிறி அறிவித்துள்ளார்.

## விடுதிகள் அமைக்கப்படாததால் சிரமத்திற்குள்ளாகும் ஆசிரியர்கள்

முல்லைத்தீவு, துணுக்காய் கல்விக்கோட்டத்திலுள்ள கூடுதலான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இதுவரை அமைக்கப்படாமையினால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக வெளிமாவட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்விக்கோட்டத்தில் 18 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் கூடுதலான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இதுவரை அமைக்கப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் இப்பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலை, தெண்ணியன்குளம் அ.த.க.பாடசாலை, உயிலங்குளம் அ.த.க பாடசாலை, ஆலங்குளம் அ.த.க பாடசாலை உள்ளிட்ட பாடசாலைகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சீரின்மையாலும் தாங்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக வெளிமாவட்ட ஆசிரியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சீனி பயன்பாட்டை குறைக்க வலியுறுத்து

தங்களுடைய பாவனைக்கு எடுத்துகொள்ளும் சீனியின் அளவை அரைவாசியாக குறைத்துக்கொள்ளுமாறும் அதனை தொடர்ச்சியாக பின்பற்றுமாறும் உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

நாளொன்றுக்கு தற்போது 10 தேக்கரண்டி சீனியை பயன்பாட்டுக்கு எடுத்துகொண்டால் அதனை அரைவாசியாக குறைத்து 5 தேக்கரண்டி சீனியை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அவ்வமைப்பு கோரியுள்ளது.

சீனிப் பயன்பாடானது நீரிழிவு, இருதயநோய், பற்சிதைவு உள்ளிட்ட பல நோய்கள் உண்டாவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது என்றும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் ஸ்ரேசன் வீதி, சிவன் அம்மன் ஆலயத்தில் நாளை காலை 8.00 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் முற்றோதலில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். நிகழ்வின் இறுதியில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அடிப்படை வசதிகளின்றி ஆனந்தபுரம் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஆனந்தபுரம் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இன்றியும் வெடிபொருட்களின் அச்சத்துடனும் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு ஆனந்தபுரம் கிராமத்தில் தற்போது 223 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இக்குடும்பங்கள் போதிய வாழ்விட வசதிகள், குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் இன்றி பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன், இப்பகுதியில் வெடிபொருட்கள் காணப்படுவதால் அன்றாடம் அச்சத்துடன் வாழ்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## உள்ளக இடமாற்றம் இன்று முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் 120 பேருக்கு இன்று நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலய உயர் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றங்கள் கோட்ட மற்றும் வலய மட்டத்திற்கு உள்ளேயே மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான கடிதங்கள் ஒவ்வொரு ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 7 வருடங்களாக ஒரே பாடசாலையில் கடமையாற்றி வந்த 120 ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் ௯௦ வீத மீள்குடியேற்றம் பூர்த்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையில் 40,594 குடும்பங்களைச் சேர்ந்த 131,116 பேர் மீள்குடியேறியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் 90 சதவீதமானவர்கள் மீள்குடியேறியுள்ளனர்.

வெடிபொருள் அபாயம் காணப்படும் இடங்களிலும் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களாகக் காணப்படும் இடங்களிலும் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 22,522 குடும்பங்களைச் சேர்ந்த 70,363 பேரும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 7,623 குடும்பங்களைச் சேர்ந்த 24,490 பேரும் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 6,912 குடும்பங்களைச் சேர்ந்த 24,355 பேரும் பச்சிலைப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 3,537 குடும்பங்களைச் சேர்ந்த 11,908 பேரும் மீள்குடியேறியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் இணைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அப்ரிடியின் சாதனை தகர்ந்தது




(குயின்ஸ்டவுன்)

நியூசிலாந்து அணியின் கோரி அன்டர்சன் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்றில் அதிவேக சதத்தைப் பெற்றவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக குயின்ஸ்டவுனில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் அன்டர்சன், 36 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று இச்சாதனையை படைத்துள்ளார்.

21 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இந்தப் போட்டியியில், அன்டர்சன் 14 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 47 பந்துகளில் 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில் சயிட் அப்ரிடி கடந்த 17 வருடங்களாக தக்கவைத்திருந்த 'சர்வதேச ஒருநாள் போட்டியின் அதிவேக சதம்' என்ற சாதனையை கோரி அன்டர்சன் முறியடித்தார்.

1996 ஆம் ஆண்டு அப்ரிடி 37 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றமையே இதுவரை சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்போட்டியில் நியூசிலாந்து அணி 159 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 21 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரைடர் 104 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 21 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

மழை காரணமாக இப்போட்டி 21 ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அதிவேக சதம் விளாசி சாதனை படைத்த கோரி அன்டர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.


## வலுவான நிலையில் பாகிஸ்தான்

(டுபாய்)

மிஸ்பா, யுனிஸ்கான் ஆகியோரின் சதத்தின் மூலம் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி டுபாயில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் பாகிஸ்தான் அணி யுனிஸகான், மிஸ்பா உல் ஹக் ஆகியோரின் இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



இதில் யுனிஸ்கான் 136 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டெஸ்ட் அரங்கில் யுனிஸ்கான் பெற்ற 23 ஆவது சதமாகவும், இலங்கை அணிக்கெதிராக பெற்ற ஆறாவது சதமாகவும் இது அமைந்தது. கப்டன் மிஸ்பா ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். டெஸ்ட் அரங்கில் மிஸ்பா பெற்ற ஐந்தாவது சதமாக இது அமைந்தது. பந்து வீச்சில் எரங்க இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 204.

## போலியான நகைகளை அடைவு வைக்க முயன்றவர் கைது

(பொலிகண்டி)

இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளையில் போலி நகைகளை அடைவு வைக்க முயன்ற பெண்ணொருவரை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இயக்கச்சியிலிருந்து வந்த குறித்த பெண் நேற்று முன்தினம் நெல்லியடிப் பகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் போலியான 19 கிராம் தங்கப் பதக்கம், 2 வளையல் என்பவற்றை அடைவு வைக்க முயன்றுள்ளார். இதன்போது குறித்த நகைகள் போலி என்பதனை புரிந்து கொண்ட கிளை முகாமையாளர், - உடனடியாகவே நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

உடனடியாக வங்கிக்கு வந்த பொலிஸார் குறித்த பெண்ணை கைதுசெய்து நேற்றைய தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன்போது இரண்டரை இலட்சம் ரூபா ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டார். (116)

## மீனவர்கள் விடுதலை

இந்திய மீனவர்கள் 6 பேரும் இலங்கை மீனவர்கள் 12 பேரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் அறுவரும் இரண்டு படகுகளும் இந்தியக் கரையோர காவல் படையினரிடம் காங்கேசன்துறையில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கரையோர காவல் படையின் பேச்சாளர் ரொஹான் ஜோசப் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மீனவர்கள் 12 பேரும் அவர்களின் இரண்டு படகுகளும் இந்திய கரையோர காவல் படையினரிடம கையளிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மீனவர்களை பரிமாற்றும் நடவடிக்கையின் ஊடாகவே காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள சர்வதேச கடல் எல்லையில் வைத்தே மீனவர்கள் பரிமாற்றப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தாண்டு விருந்தில் விபத்து; முக்கிய பிரமுகர்கள் காயம்

(கொழும்பு)

கொழும்பில் ஹில்டன் விடுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முக்கிய பிரமுகர்கள் பங்கேற்ற புத்தாண்டு இரவு விருந்து நடந்த தளம் இடிந்து விழுந்ததில், பலர் காயங்களுக்குள்ளானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் மகன் நாமல் உள்ளிட்ட சுமார் 200 முக்கிய பிரமுகர்கள் இந்த இரவு விருந்தில் பங்கேற்றிருந்ததாகவும் ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒட்டுமொத்த தளமும் இடிந்து விழுந்ததால், பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக தனிப்பட்ட வாகனங்கள் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக ஹில்டன் விடுதி எந்தக் கருத்தையும் வெளியிட மறுத்துள்ள அதேவேளை, விரைவில் இதுதொடர்பான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று கூறியுள்ளது.



இதற்கிடையே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களால் கொழும்பு நவலோகா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு நிரம்பியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கால்கள் முறிந்த நிலையிலும், கைகள் உடைந்த நிலையிலும், கண்ணாடிகள் வெட்டிய நிலையிலும் பலர் காயங்களுடன் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இன்பருட்டியில் 11 இளைஞர்கள் கைது

வடமராட்சி இன்பருட்டி கடற்கரைப் பகுதியில் நள்ளிரவு நேரம் கூட்டமாக நின்று உரையாடிக் கெண்டிருந்த 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரை பருத்தித்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் புதுவருடப் பிறப்பு தினத்தை முன்னிட்டு சக்கோட்டை தேவாலயத்தில் நள்ளிரவு நேரம் ஆராதனை இடம்பெற்றது. இப்பூசையில் கலந்துகொண்ட மேற்படி இளைஞர்கள், பூசை வழிபாடு முடிவடைந்த பின்னர் மோட்டார் சைக்கிள் சகிதம் இன்பருட்டி கடற்கரைப் பகுதியில் கூட்டமாக நின்று உரையாடியுள்ளனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் இவர்களை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். இந்நிலையில் நேற்றுக்காலை 10 மணியளவில் இரவு நேரங்களில் தேவையற்ற விதத்தில் ஒன்றுகூடக்கூடாதென எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, அண்மைக் காலமாக வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெறும் திருட்டு உட்பட பல்வேறு சம்பவங்களை அடுத்து பொலிஸார் இரவுநேர ரோந்தை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

## வீதி புனரமைப்பு

யாழ் - ஊர்காவற்றுறை பிரதான வீதி புனரமைப்புப்பதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது வரை காலமும் யாழ். பண்ணையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையே காப்பெற் இட்டு புனரமைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## யாழ். தனியார்...

விசுவமடு, உழவனூர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பேருந்தின் முன்பக்க கண்ணாடிகளை இலக்குவைத்து கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது முன்பக்க கண்ணாடி உடைந்ததுடன், பயணிகள் மூவர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாகவே தர்மபுரம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பெண் பயணி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம், புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

## ஆனையிறவில்...

சென்றுகொண்டிருந்தபோது, பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஒன்று இவர்கள் மீது மோதியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கொம்பன் பூநகரிப் பகுதியைச் சேர்ந்த செந்தூரன் சுலோகினி (வயது - 22), செந்தூரன் கின்சிலி (பிறந்து 27 நாட்கள்) ஆகியோரே மரணமடைந்தவர்வகளாவர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த கணவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## வவுனியாவில்...

பகுதியில் குறித்த இளைஞன் ஆட்டோவை செலுத்தி வந்தவேளை முன்னால் வந்த விமானப்படை வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் நேற்றைய தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ)

## அரசியல்...

வேறு சவால்களோடு தாங்கள் எதிர்நோக்கி வருகிறீர்கள். யுத்த விளைவுகளின் தொடர்ச்சியாக இருக்கின்ற அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எமது மக்கள் பலத்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளாக அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டிருப்பதனால், சிறையிருப்பவர்களிடையேயும் அவர்களின் குடும்பங்களிடையேயும் மிக மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உளத்தாக்கங்கள், பொருளாதாரப் பாதிப்புகள், கல்வி, கலாசார பாதிப்புகள் என சமூகக் கட்டமைப்பே சிதையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடும்பங்கள் சிதைவடைதல் என்ற நிலைமையும் காணப்படுகிறது.

எனவே இவை தொடர்பாக எமது சபையில் கவனம் எடுக்கப்பட்டு, அதைத் தங்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறோம். புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் சமூகமயப்பட்டிருப்பதைப்போல ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையையும் சாதகமான முறையில் பரிசீலித்து ஆவன செய்யுங்கள் என்று கோரப்பட்டுள்ளது.

## ராதிகா...

சென்றுவருகின்றார் என்றும் தெரிவித்துள்ளது.

அவரை வீட்டுக்காவலில் வைப்பதற்கு பொலிஸாருக்கோ அல்லது இராணுவத்தினருக்கோ எவ்விதமான அதிகாரங்களும் இல்லை என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வமற்ற விஜயமொன்றை மேற்கொண்டுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினமிரவு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாத்தியமே...

சாத்தியமே இல்லாதது தமிழீழம் அது அமைந்தால் நல்லதும் அல்ல.

தமிழீழம் என்பது அடிப்படையிலேயே இனவாதக் கோரிக்கை. இந்தியாவிலிருந்து நாம் இலங்கைத் தமிழர்கள் என்ற சொல் வழியே பார்க்கும் மக்கள் வேறு அங்குள்ள மக்கள் வேறு. மலையகத் தமிழர்கள் தனித்திருக்கிறார்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் தனித்திருக்கிறார்கள் அவர்களுடைய பிரச்சினைகள் இங்கு பேசப்படுவது இல்லை. ஈழத்தின் பரப்பாகக் கேட்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களை எடுத்துக் கொண்டால், கிழக்கு மாகாணத்தில் மூன்றில் இரு பங்கினர் தமிழர் அல்லாதவர்கள் வட பகுதியோடு இணைவதில் விருப்பம் இல்லாதவர்கள் அவர்களுடைய நியாயங்களை விவாதிக்க இங்கு அனுமதிக்கப்படுவதுகூட இல்லை.

அரசியல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, புவியரசியல் ரீதியாக நீடிக்க வாய்ப்பே இல்லாதது அது. முக்கியமாக, வியூக முக்கியத்துவம். அந்தப் பகுதியை இராணுவரீதியாக யாரும் விட்டுவைக்க மாட்டார்கள். ஒருபோதும் அது நீடிக்க முடியாதது. கடைசியில் அதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பின் கீழ், சுயாட்சிக்கு இணையான உச்சபட்ச அதிகாரப் பகிர்வுதான் இலங்கைத் தமிழர்களுக்கு அமைதியையும் நன்மைகளையும் தருமேயன்றி பிரிவினை அல்ல.

போர்களை ஆதரிப்பவன் அல்ல நான். பிரிவினையும் துப்பாக்கிகளும்தான் தீர்வு என்ற முடிவில் பிரபாகரன் தீர்மானமாக இருப்பதை உணர்ந்த பின்தான் புலிகளைக் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தேன். இறுதிப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள் மிகப் பெரிய துயரம். போர்க் குற்றங்கள் இரு தரப்பினராலுமே நடத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசே நடவடிக்கை எடுக்க ராஜபக்ஷ தயக்கமின்றிச் செயல்பட வேண்டும். அதே சமயம், இந்த விவகாரம் மட்டும் பிரதானம் இல்லை மீள்கட்டமைப்பும் உச்சபட்ச அதிகாரப் பகிர்வும் வேண்டும். அவைதான் தமிழர்களின் எதிர்கால நலனை நிர்ணயிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்வியில் வடக்கு...

மேம்பாடு, மாணவர்களுக்கான கற்கைச் சூழல் அபிவிருத்தி என ஏராளமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு, கல்வித் துறையில் மாணவர்களின் முன்னேற்றத்துக்கு ஏதுவான சூழல் இங்கே ஏற்படுத்தப்பட்டது.

இந்த அயராத உழைப்பின் பயனை இன்று வடக்கு மாகாணம், அதன் மாணவர்களின் அதியுயர் கல்வித் தேர்ச்சியின் மூலம் அனுபவித்து பெருமிதம் கொண்டுள்ளது.

இந்த நிலைக்கு எமது கல்வித்தரம் உயர்வதற்காக அளப்பெரும் பங்களிப்பை ஆற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் வடக்கு மாகாண மக்கள் சார்பாக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வடக்கு மாகாண சபைக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிராத நிலையிலும், தனியொரு மனிதனாக நின்று வடக்கு மாகாணத்தின் கல்வித்துறை உயர்ச்சிக்காக அயராது உழைத்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, அவருக்கு உறுதுணையாக நின்றுழைத்த மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வியமைச்சின் செயலாளர், மாகாண, வலய மற்றும் கோட்ட மட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார் கல்வி ஆலோசகர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் தனித்தனியே இந்தத் தருணத்தில் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.'

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, போருக்குப் பிந்திய சூழலில், போரின் வடுக்களைச் சுமந்தவாறும், கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்ததன் மூலம், மீண்டும் எமது பிரதேசத்தை கல்வியில் உயர்ந்த நிலையில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்த மாணவச் செல்வங்களுக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்றே, காலத்தையும், கிடைக்கின்ற வாய்ப்புக்களையும் சரியாகப் பயன்படுத்தி இந்த மாணவச் செல்வங்கள் தொடர்ந்தும் கல்வியில் உயர்ந்து எமது பிரதேசத்தை ஏனைய எல்லா நிலைகளிலும் மேலுயர்த்த கைகொடுக்க வேண்டும். அத்துடன் இந்த நாட்டின் சிறந்த பிரஜைகளாக, எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய நிலையில் சிறந்த அறிஞர்களாக, துறைசார் நிபுணர்களாக உயர் நிலையை அடைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

போருக்குப் பிந்திய இந்த 4 வருடங்களில், வடக்கு மாகாணசபைக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவாகாத நிலையிலும், ஆளுநர் மற்றும் மாகாணசபை செயலாளர்கள், பணிப்பாளர்கள் உள்ளிட்டோரின் கடின உழைப்பால் ஏற்படுத்தப்பட்ட இந்த நிலையை, தற்போது தேர்தல் மூலம் மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றியிருக்கும் பிரதிநிதிகள் உரிய முறையில் தொடர்ந்தும் பேணி எமது இளைஞர்களுக்கும், எதிர்கால சந்ததிக்கும் சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்த அயராது பாடுபடவேண்டும் என்றும், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நான் அழைப்பு விடுக்கிறேன்.

வாக்கு வேட்டைக்காக மீண்டும் உணர்ச்சி தூண்டும் அரசியல் செய்து எமது இளைஞர்களை அழிவுப்பாதையில் தள்ளிவிடாமல், இதுகாலவரையான எமது கடின உழைப்பின் மூலம் எட்டப்பட்ட இந்த நிலைமையை இளைஞர்கள் தொடர்ந்தும் அனுபவித்து, வாழ்வில் உயர்நிலை அடைய கைகொடுக்கவேண்டும் என்றும் மாகாணசபையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.